

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | நவம்பர் 05, 2015 | புரட்சி 14 | முழக்கம் 43 | விலை: ரூ.3.00


## வாழ்வுரிமைக் கட்சியினர் மீது தாக்குதல்: கழகம் கண்டனம்

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:*

தாமிரபரணி ஆற்றின் நீரை உறிஞ்சி விற்பனை செய்யும் பன்னாட்டு குளிர்பான ஆலையை மூடக்கோரி தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் நடத்தப்பட்ட காவல்துறையினரின் தாக்குதலில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் உள்பட பலர் கொடுங்காயம் அடைந்துள்ளனர். காவல்துறையின் இந்த ஜனநாயக விரோதப் போக்கை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பொதுவாக பொதுமக்கள் குடிநீர் பிரச்சனைக் காகவோ, போக்குவரத்து வசதிகளுக்காகவோ, சுகாதாரச் சீர்கேடுகளுக்காகவோ, குடிமைப் பொருட்களுக்காகவோ போராட்டம் நடத்தினால் அதற்குரிய அதிகாரிகள் தான் வந்து பேசி சமரசம் செய்வார்கள். ஆனால் கடந்த 10-15 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களின் எந்தவிதமான போராட்டங்களாக இருந்தாலும் காவல்துறை மட்டுமே வந்து மக்களிடம் பேசுவதும் போராட்டக்காரர்கள் மீது வன்முறையினை நிகழ்த்துவதும் தொடர்கதையாகி வருகிறது. இதை தமிழகத்தை ஆளும்கட்சிகள் கண்டும் காணாமல் இருப்பதால் காவல்துறையின் அத்துமீறல் அதிகரித்த வண்ணம் உள்ளது.

தமிழக மக்களின் உரிமைக்காக தமிழகத்தின் தண்ணீர்த் தேவையை கருத்தில் கொண்டு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் தலைமையில் நெல்லை மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் பன்னாட்டு குளிர்பான ஆலைகள் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காவேரி உள்பட பலர், காவல்துறையின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது காவல்துறையின் ஆணவப் போக்கை வெளிப்படுத்துகிறது. அறவழியில் போராடும் மக்களின் மீது இது போன்று நடத்தப்படும் தாக்குதல்கள் ஆங்கிலேய வல்லாதிக்க ஆட்சியையே நினைவுபடுத்துகிறது. இந்த அத்துமீறலில் ஈடுபட்ட காவல்துறை அதிகாரிகள் மீது தமிழக காவல்துறை உரிய நடவடிக்கை எடுப்பதோடு இந்தத் தவறுகள் இனி நடக்காமல் இருக்க தமிழக காவல்துறையும் தமிழக அரசும் முன்வர வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

## கோவன் கைது: கழகம் கண்டனம்

'முழுமையான மதுவிலக்கு' என்ற கொள்கையில் (அது சாத்தியமல்ல என்பதால்) நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும், 'டாஸ்மாக்' கடைகள் உருவாக்கி வரும் சீரழிவை எதிர்த்து கருத்தே தெரிவிக்கக் கூடாது என்ற கருத்துரிமை பறிப்பை வன்மையாகக் கண்டிக்கிறோம். மதுக்கடைகளை எதிர்த்து பாடல்கள் வழியாகப் பிரச்சாரம் செய்த மக்கள் கலை இலக்கிய கழகத்தைச் சார்ந்த கோவன், தேசத் துரோகச் சட்டத்தின் கீழ் (124ஏ) நள்ளிரவில் கைது செய்யப்பட்டுள்ளார். பிரிட்டிஷார் ஆட்சி கால கட்டத்தை இப்போதும் ஆட்சிகள் கையில் எடுப்பது நாட்டுக்கே தலை குனிவு. இந்தச் சட்டம் இந்திய தண்டனைச் சட்டப் புத்தகத்திலிருந்தே நீக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பா.ஜ.க.வைச் சார்ந்த எச்.ராஜா என்ற பார்ப்பனர் - பெரியார் குறித்தும், வை.கோ குறித்தும், இஸ்லாமியப் பெண்கள் குறித்தும் பேசிய வெறுப்புப் பேச்சுகளுக்காக மாநகர காவல் துறை ஆணையரிடம் பல அமைப்புகள் நடவடிக்கைக் கோரி மனு அளித்தன. சுமார் 8 மாதங்களுக்குப் பிறகுதான் அவர் மீது தேசத் துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவர் கைது செய்யப்படவும் இல்லை.

தோழர் கோவன் மீது பாய்ந்த இதே பிரிவுக்காக நள்ளிரவில் வீட்டில் புகுந்து வெளியே இழுத்து வரப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளார். அடக்குமுறை சட்டங்களில்கூட 'பார்ப்பன'ருக்கு ஒரு நீதி, 'சூத்திரருக்கு' ஒரு நீதி என்ற அணுகுமுறைதான்!

அரசுக்கு எதிராக பேசுவதே தேச துரோகம் என்றால், தமிழ் நாட்டில் நடப்பது அவசர நிலை ஆட்சியா? என்று கேட்கிறோம்.

கோவன் மீது தொடரப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற்று விடுதலை செய்ய வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

### இராமாயணம் – மகாபாரதத்தில் சான்றுகள் உண்டு

# பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி ரசிகர்கள்

***பார்ப்பனர்கள் மாட்டிறைச்சியை விரும்பி உண்டவர்கள் என்பதற்கு இராமாயணம், மகாபாரதத்திலேயே ஆதாரங்கள் உண்டு.***

மௌரியர் காலத்துக்குப் பின்பும், குப்தர் காலத்திலும் இலக்கிய வடிவம் தரப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட மகாபாரதம், இராமாயணம் ஆகியவை மாட்டிறைச்சி உண்ணும் பழக்கத்துக்குத் தெளிவான ஆதாரங்களைத் தந்துள்ளன. (தொடக்கக்கால ஸ்மிருதிகளும், புராணங்களும் இதே காலகட்டத்தைச் சேர்ந்தவைதாம்). பொழுதுபோக்குக்கு என்பதை விட உணவுக்காக சத்திரியர்கள் அடிக்கடி வேட்டையாடி வந்திருக்கிறார்கள் என்பதற்கு மகாபாரதம் - குறிப்பாக அதிலுள்ள வனபர்வம் - ஆதாரமாக இருக்கிறது. உணவுக்காக வளர்ப்பு விலங்குகள் கொல்லப்பட்டு வந்ததற்கும் இது ஆதாரத்தைத் தருகிறது. ஹிம்சையை பார்த்து மனம் வருந்திய தர்மர்கூட தன் தம்பிகளுக்கும், திரௌபதிக்கும், காட்டில் வாழ்ந்து வந்த பார்ப்பனர்களுக்கும் உணவு தர தினந் தோறும் ரூரு மான்களையும், கிருஷ்ண மிருகத்தையும் வேட்டையாடியதாக இதில் விவரிக்கப்பட்டுள்ளது.

பார்ப்பனர்களின் உணவில் இறைச்சி சாதாரணமாக இடம் பெற்று வந்தது என்ற தகவலை ஆதிபர்வத்தில் இடம் பெற்றுள்ள கல்மாசபாதம் என்ற கதை கூறுகிறது. ஜெயத்ரதனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் அம்பது மான்களைக் கொன்று திரௌபதி விருந்து தந்ததாகவும், கறுப்பு உடும்பு, புள்ளி உடும்பு, மான், இளமான், சரபா, குழி முயல், ரிஷ்யா, ரூரு, சம்பரா, காயல், பலவகை மான்கள், பன்றி, எருமை இன்னும் ஏனைய விலங்குகளின் இறைச்சியை தர்மர் அவர்களுக்குத் தருவார் என்று உறுதி தந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. பாண்டவர்கள் விஷம் தடவப்படாத அம்புகளால் மான்களை வேட்டையாடியதாகவும், பார்ப்பனர்களுக்குத் தந்த பின்னர் அந்த இறைச்சியை அவர்கள் உண்டதாகவும் அதில் சொல்லப்பட்டுள்ளது. மாட்டிறைச்சியையும், உணவு தானியங்களையும், பார்ப்பனர்களுக்குத் தானம் தந்து அதன்மூலம் ஈடு இணையற்ற புகழைச் சம்பாதித்துக் கொண்ட மன்னன் ரந்தி தேவரின் அரண்மனைச் சமையலில் தினந் தோறும் இரண்டாயிரம் பசுக்கள் கொல்லப் பட்டதாக வனபர்வம் குறிப்பிடுகிறது. கொல்லப்பட்ட பசுக்களில் இரத்தத்திலிருந்து தான் கர்மாவதி ஆறு (புதிய பெயர் சம்பல்) உருவானது. பாணினி இதை கர்மனன்வதி என்று இதற்கு முன்பே குறிப்பிட்டுள்ளார். பார்ப்பனர்களுக்கு இறைச்சி, அரிசி, நெய், பால் ஆகியவற்றை வழங்க வேண்டும் என அனுஷாசன பர்வத்தில் நாரதர் அறிவித்துள்ளார். பிதுர்களுக்குப் படையல் செய்ய வேண்டிய பொருட்களை ஏறு வரிசைப்படி பீஷ்மர் பின்வருமாறு விவரித்துள்ளார். எள், அரிசி, பார்லி, அவரை, நீர், கிழங்குகள், பழவகைகள், மீன், ஆட்டிறைச்சி, முயல், வெள்ளாடு, பன்றி, கோழி, மான் இறைச்சி, காயல், எருமை, **மாட்டிறைச்சி,** பாயசம், வார்திரினஷம், காண்டாமிருகம், (கட்கம்) ஆட்டுத்தோல், சிவப்பு ஆடு. மறுபுறம், வேதச் சடங்குகளின் ஒரு பகுதியாக பலி தரப்படும். விலங்கின் இறைச்சியை உண்ணலாம் என்று மகாபாரதத்தில் இதே பர்வத்தில் குறிப்பிட்டிருக்கும் பீஷ்மர் இதற்கு முன்பே அகிம்சையை போற்றிப் புகழ்ந்து பாடியிருக்கிறார். மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டுள்ள பொதுவான அசைவ உணவுச் சூழலை வைத்துப் பார்க்கும்போது அகிம்சையை மேன்மைப்படுத்திப் பேசியிருப்பது முரண்பாடாக இருந்தபோதிலும், பசு, கால்நடைகள் உள்ளிட்டு விலங்குகளின் இறைச்சி உணவாக உண்ணப்பட்டு வந்த நடைமுறை பண்டைக் காலத்தில் பார்ப்பனர்கள், சத்திரியர்கள் மத்தியில் பொதுவான நடைமுறையாக இருந்திருப்பது தெரிய வருகிறது. சமூகத்தின் அடித்தட்டுப் பிரிவினர் மட்டுமே இறைச்சி உண்டு வந்ததாக மகாபாரதத்தில் வரும் ஒரு பாத்திரம் சொல்லியுள்ள போதிலும், காளைகள் உள்ளிட்ட விலங்குகள் ஏராளமான எண்ணிக்கை யில் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் யுதிஷ்டரின் அஸ்வமேத வேள்வியின்போது நடைபெற்ற விருந்தில் பல்வேறு வகைப்பட்ட இறைச்சிகள் பரிமாறப்பட்டிருந்தன. உணவு விஷயத்தில் பார்ப்பனர்கள் மிகுந்த கட்டுப்பாடு கொண்டவர்கள் என்று பெருமையடித்துக் கொண்டபோதிலும், இம்மாதிரியான விருந்துகளில் இறைச்சி உணவு வகைகளை இவர்கள் உண்பதற்கு இந்தப் பெருமை குறுக்கே நிற்கவில்லை.

மகாபாரதத்தைப் போலவே, வால்மீகி இராமாயணத்திலும், வேள்விகளுக்காகவும், உணவுக்காகவும் கால்நடைகள் உள்பட விலங்குகளைக் கொன்று வந்த நடைமுறைக்கு ஏராளமான ஆதாரங்களைப் பார்க்க முடிகிறது. தனக்கு வாரிசு வேண்டும் என்பதற்காக தசரதன் ஒரு வேள்வி நடத்தியதாகவும், அதில் பலியிட சாஸ்திரங்களால் அனுமதிக்கப்பட்ட விலங்குகள் ஏராளமானவற்றை (எ.கா. குதிரைகள், பாம்புகள், நீர்வாழ் உயிரினங்கள்) முனிவர்கள் கொண்டு வந்ததாகவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சடங்கில் பலி தருவதற்காக பூமியைச் சுற்றி வந்த குதிரையுடன், முன்னூறு விலங்குகளையும் சேர்த்து வேள்விக் கம்பங்களில் (யுபாஷ்) கட்டி வைத்ததாக அது மேலும் குறிப்பிட்டுள்ளது. தான்

**( 4 ஆம் பக்கம்)**

## கழகத்தின் சார்பில் வேலூரில் ஆர்ப்பாட்டம் : உயர்நீதிமன்றம் அனுமதி

*6.11.2015 அன்று வேலூர் தலைமை தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும்.*

மாட்டிறைச்சி வைத்திருந்ததாக உத்திரபிரதேசத்தில் கொல்லப்பட்ட அக்லக் படுகொலையை கண்டித்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அமலில் உள்ள மாட்டிறைச்சிக்கான தடையை நீக்கக் கோரியும், தொடரும் ஜாதி ஆணவ படுகொலைகளை தடுத்து நிறுத்தக் கோரியும், 30.10.2015 அன்று வேலூரில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரி கழகத்தின் சார்பில் வேலூர் சத்துவாச்சேரி காவல்நிலையத்தில் 21.10.2015 அன்று மனு அளிக்கப்பட்டது.

மனு அளித்த அன்றைய நாளே வேலூர் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் வேலூர் மாவட்டத்தில் காவல்துறை சட்டம் அமுலில் இருப்பதாகவும், இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி அளித்தால் பதட்டமான சூழல் உருவாகும் எனவும் கூறி ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டார்.

அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து கழகத்தின் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு 29.10.2015 அன்று விசாரணைக்கு வந்தது. 30.10.2015 அன்று அரசு தரப்பின் விளக்கங்களைக் கேட்ட நீதிமன்றம் கழகத்தின் சார்பில் வைக்கப்பட்ட வாதங்களை ஏற்று வேலூரில் 6.11.2015 அன்று தலைமை தபால் நிலையம் எதிரே ஆர்ப்பாட்டம் நடத்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் கழகத்தின் சார்பில் கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி கழகத் தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

**தலையங்கம்**

## மதவெறிக்கு எதிராக விஞ்ஞானிகள் – படைப்பாளிகள்

மோடியின் பார்ப்பனிய மத ஆட்சி -குறுகிய காலத்திலேயே பின்னடைவுகளை சந்திக்கத் தொடங்கி விட்டது. மக்களாட்சி முறையைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் – அந்தக் கட்டமைப்புக்குள் மதவெறி ஆட்சியை நிறுவிட முயலும் முயற்சிகளும் அதற்கான வெறுப்புப் பேச்சுகளும் உலகம் முழுதும் கண்டனத்துக்கு உள்ளாகி வருகிறது.

சுமார் 40 எழுத்தாளர்கள், கலைஞர்கள் தங்களின் கலை படைப்புகளுக்காக கிடைத்த விருதுகளை திருப்பி அளித்து எதிர்ப்புகளைப் பதிவு செய்துள்ளனர். மதரீதியாக மக்களை பிளவுபடுத்துவது அணுகுண்டைவிட ஆபத்தானது என்று 120 விஞ்ஞானிகள் கூட்டாக கையெழுத்திட்டு குடியரசுத் தலைவருக்கு மனு அளித்துள்ளனர். உயிரியல் துறையின் தலைசிறந்த விஞ்ஞானியும், ‘தேசிய அறிவு ஆணையம்’ என்ற அமைப்பில் தலைவராக இருந்தவருமான ‘பத்மபூஷன்’ விருது பெற்ற பி.எம். பார்கவா, தனது விருதை திருப்பி அனுப்பிவிட்டார். “இந்த அரசுக்கு சகிப்புத் தன்மை இல்லை; பகுத்தறிவு மீதும் அறிவியல் மீதும் தாக்குதலை நடத்துகிறது” என்று பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

“மதத்தை அரசியலோடு கலக்கக் கூடாது. நம்பிக்கைகள் வீட்டிற்குள்ளேயே இருக்கட்டும். எதைச் சாப்பிட வேண்டும்? எப்படி உடை அணிய வேண்டும்? யாரை காதலிக்க வேண்டும்? என்று எவரும் கற்றுத் தர வேண்டாம்” என்று நெற்றியில் அடித்தாற்போல் கூறியிருக்கிறார், கணித அறிவியல் நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானி டி.ஆர். கோவிந்தராஜன். இ வர் இணையதளம் வழியாக, மதவெறி சக்திகளுக்கு எதிரான இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறார்.

“புனைவுகள் – வெறுப்புகள் – மூடத்தனங்கள் அதிகரித்து வருகின்றன. அறிவியல் – பகுத்தறிவு சிந்தனைகளை வளர்த்தெடுக்க வேண்டும். நேரு அதைத்தான் வலியுறுத்தினார். ‘பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை’ புராண காலங்களிலேயே இருந்தது என்பது போன்ற மோடியின் கருத்துகளுக்கு அடிப்படை அறிவியல் சான்றுகள் ஏதும் இல்லை” என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையிலிருந்தும் ‘இன்போசிஸ்’ போன்ற தொழில் நிறுவனங்களிலிருந்தும் சர்வதேச பொருளாதார ஆய்வு மய்யங்களிலிருந்தும் எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. பார்ப்பனர்களின் பிற்போக்குத்தனமான வேதகால காட்டுமிராண்டி கருத்துகளை பெரியார் இயக்கம் எதிர்த்து, மக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தியும் போராடியும் வருகிறது. அப்போதெல்லாம் பெரியார் இயக்கங்கள் முன்வைத்த மதவெறி மூடநம்பிக்கை எதிர்ப்பு கருத்துகளுக்கு வெளிப்படையாக அறிவியல் சிந்தனையாளர்கள் படைப்பாளிகள் ஆதரவுக்கரம் நீட்டவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குரல்கள் மட்டுமே கேட்டன. இப்போது படைப்பாளிகளும் விஞ்ஞானிகளும் சமூக அக்கறை கொண்ட கலைஞர்களும் மதவெறிக்கும் பார்ப்பனியத்தின் பாசி பிடித்த பழமைவாத கருத்துகளுக்கும் பகுத்தறிவாளர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் எதிராக வெளிப்படையாக வெளியே வந்து விட்டார்கள். மதத்தின் அடிப்படையில் சமூகத்தைப் பிளவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகள் இப்போது மதவெறிக்கு எதிராகவே திரும்பி நிற்கிறது. இது வரவேற்கத்தக்க திருப்பம்.

வரலாறுகளை அகற்றிவிட்டு, புராணங்களின் கற்பனைகளையும் அறிவியலை நீக்கிவிட்டு மூடநம்பிக்கைகள் புனைவுகளையும் பேனாவை முடக்கிவிட்டு துப்பாக்கியையும் கடப்பாறைகளையும் தூக்கிக் கொண்டு திரியும் பார்ப்பனியத்தின் கோரமுகத்தை ‘இந்து’ என்று தங்களை கருதிக் கொண்டிருக்கிற பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட மக்கள் இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும். ஒடுக்கப்பட்ட சமூக ‘இந்து’க்கள் சாப்பிடும் மாட்டிறைச்சிக்கு தடை போட்டு பார்ப்பனிய உணவு முறையை – பார்ப்பனரல்லாத ‘இந்து’க்கள் மீது திணிப்பவர்கள் – ‘இந்து’க்களின் பாதுகாவலர்களா? பார்ப்பனிய பாதுகாவலர்களா? என்று கேட்கிறோம். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட ‘இந்து’க்களின் சமூக சமத்துவத்தை உறுதி செய்யும் இடஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்ப்பவர்களும் தலித் குழந்தைகள் எரிக்கப்படுவதை நாய் கல்லடிபடுவதோடு ஒப்பிட்டு திமிராகப் பேசுகிறவர்களும், எப்படி ‘இந்து’க்களின் காவலர்களாக இருக்க முடியும் என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இப்போது மதவெறியை எதிர்த்து வெளியே வந்திருக்கும் விஞ்ஞானிகள், படைப்பாளிகளிலும்கூட பெரும்பான்மையோர் ‘இந்து’ என்ற அடையாளத்துக்குள் திணிக்கப்பட்டவர்கள்தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மதவெறி எதிர்ப்பு – பகுத்தறிவு சிந்தனை – ஜாதி எதிர்ப்பு என்ற பெரியாரியம் சுட்டிக்காட்டிய சமூகத் தளங்கள் தான் இன்றைய சமூகத்தின் விவாத மேடையாக மாறி நிற்கிறது. பெரியாரியத்துக்கு பெருகி வரும் ஆதரவுகள் – நம்பிக்கை ஒளியை பிரகாசப்படுத்தியுள்ளன.

இந்த களத்தை மேலும் விரிவுபடுத்தி பெரியாரியலை முன்னெடுக்க தயாராவோம்!

# தீபாவளி என்றால் என்ன?

**பெரியார்**

1. ஒரு காலத்தில் ஒரு அசுரன் உலகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டுபோய் கடலுக்குள் ஒளிந்து கொண்டான்.
2. தேவர்களின் முறையீட்டின்மீது மகாவிஷ்ணு பன்றி அவதாரம் (உரு) எடுத்துக் கடலுக்குள் புகுந்து அவனைக் கொன்று உலகத்தை மீட்டு மீண்டும் வந்து விரித்தார்.
3. விரித்த உலகம் (பூமி) அப்பன்றியுடன் கலவி செய்ய ஆசைப்பட்டது.
4. ஆசைக்கு இணங்கி பன்றி (விஷ்ணு) பூமியுடன் கலவி செய்தது.
5. அதன் பயனாய் பூமி கர்ப்பமுற்று, நரகாசூரன் என்ற பிள்ளையைப் பெற்றது.
6. அந்தப் பிள்ளை தேவர்களை வருத்தினான்.
7. தேவர்களுக்காக விஷ்ணு, நரகாசூரனுடன் போர் துவங்கினார்.
8. விஷ்ணுவால் அவனை வெல்ல முடியவில்லை. விஷ்ணுவின் மனைவி நரகாசூரனுடன் போர் தொடுத்து அவனைக் கொன்றான்.
9. இதனால் தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.
10. இந்த மகிழ்ச்சியை (நரகாசூரன் இறந்ததற்காக) நரகாசூரனின் இனத்தாரான திராவிட மக்கள் கொண்டாட வேண்டும். இதுதானே தீபாவளிப் பண்டிகையின் தத்துவம்!

இந்த 10 விஷயங்கள்தான் தமிழனைத் தீபாவளி கொண்டாடும்படி செய்கிறதே அல்லாமல், வேறு என்ன என்று யாருக்குத் தெரியும்? யாராவது சொன்னார்களா? இதை ஆராய்வோம். இக்கதை எழுதிய ஆரியர்களுக்கு பூமி நூல் கூடத் தெரியவில்லை என்று தானே கருத வேண்டியிருக்கிறது?

1. பூமி தட்டையா? உருண்டையா?
2. தட்டையாகவே இருந்தபோதிலும் ஒருவனால் அதைப் பாயாகச் சுருட்ட முடியுமா?
3. எங்கு நின்று கொண்டு சுருட்டுவது?
4. சுருட்டினால் தூக்கிக் கட்கத்திலோ தலைமீதோ எடுத்து ஏக முடியுமா?
5. எங்கிருந்து தூக்குவது? கடலில் ஒளிந்து கொள்வதாயின் கடல் அப்போது எதன் மீது இருந்திருக்கும்?
6. விஷ்ணு மலம் தின்னும் பன்றி உருவம் எடுக்க வேண்டிய அவசியம் என்ன?
7. அரக்கனைக் கொன்று பூமியை விரித்ததால் பூமிக்குப் பன்றி மீது காதல் ஏற்படுவானேன்?
8. பூமி மனித உருவா? மிருக உருவமா?
9. மனித உருவுக்கும் மிருக உருவுக்கும் கலவியில் மனிதப் பிள்ளை உண்டாகுமா?
10. பிறகு சண்டை ஏன்? கொல்லுவது ஏன்? இதற்காக நாம் ஏன் மகிழ்ச்சி அடைய வேண்டும். இவைகளைக் கொஞ்சமாவது கொண்டாடும் தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள் சிந்திக்க வேண்டாமா?

நரகாசூரன் ஊர் மாகிஷ்மகி என்ற நகரம், இது நர்மதை ஆற்றின் கரையில் இருக்கிறது. மற்றொரு ஊர் பிரகத் ஜோதி ஷா என்று சொல்லப்படுகிறது. இது வங்காளத்தில் அசாம் மாகாணத்துக்கு அருகில் இருக்கிறது.

இதைத் திராவிட அரசர்களே ஆண்டு வந்திருக்கிறார்கள். வங்காளத்தில் தேவர்களும் அசுரர்களும் யாராக இருந்திருக்க முடியும்?

இவைகள் ஒன்றையும் யோசிக்காமல் பார்ப்பனன் எழுதி வைத்தான் என்பதற்காகவும் சொல்லுகிறான் என்பதற்காகவும் நடுஜாமத்தில் எழுந்து கொண்டு குளிப்பதும், புதுத் துணி உடுத்துவதும் பட்டாசு சுடுவதும், இந்த பார்ப்பனர்கள் வந்து பார்த்து “கங்கா ஸ்நானம் ஆயிற்றா” என்று கேட்பதும், நாம் “ஆமாம்” என்று சொல்லி கும்பிட்டு காசு கொடுப்பதும், அவன் காசை வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டு போவதும் என்றால் இதை என்னவென்று சொல்லுவது?

மாணவர்களே! உங்கள் ஆசிரியர்களுக்கு மானம் புத்தி இல்லாவிட்டாலும் நீங்களாவது சிந்தியுங்கள். எதற்காக இவ்வளவு சொல்லுகிறேன் என்றால், இக்கதை எழுதின காலத்தில் (ஆரியர்) பார்ப்பனர்கள் எவ்வளவு காட்டுமிராண்டிகளாக இருந்திருக்க வேண்டும்?

அந்தக் காலத்தில் நாம் ஈன நிலை அடைந்தது ஏன்? என்பதைத் தமிழன் ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்க வேண்டும் என்பதற்கு ஆகவேயாகும்.

## வினாக்கள்... விடைகள்...!

- ஆயுத பூஜை பண்டிகையில் 1000 கார்கள் விற்று மாருதி சுசுகி சாதனை. **– செய்தி**

  விற்பனை இந்துக்களுக்கு மட்டும் தானே? இல்லேன்னா சிவசேனாக்காரங்க கம்பெனிய நொறுக்கிடுவாங்க...

- மத ரீதியாக பிளவுபட்ட ஒரு சமூகம், அணுகுண்டைவிட ஆபத்தானது.
  **– விஞ்ஞானிகள் குடியரசுத் தலைவரிடம் மனு**

  சரியான கருத்து; ‘மதவாதப் பரவல் தடை’ ஒப்பந்தம் ஒன்றை கொண்டு வருவது குறித்து அவசரமாக ஆலோசிக்க வேண்டும்.

- இந்தியாவின் முக்கிய நகரங்களில் திருப்பதி ஏழுமலையான் கோயில்கள் அமைக்கப்படும்.
  **– தேவஸ்தானம்**

  இதற்கெல்லாம் தனித் தனியா ‘ஸ்தல புராணங்கள்’ எழுதப்படுங்களா...?

- இஸ்லாமியர் ஆட்சி காலத்தில் ‘மதம்’ மாறுவதற்கு மறுத்த ‘பிராமணர்கள்’ தான் இன்றைய தீண்டப்படாத மக்கள். **– பா.ஜ.க. பேச்சாளர் பச்சோங்கர் சாஸ்திரி**

  அப்படின்னா இன்றைய ‘பிராமணர்கள்’ எல்லாம் இஸ்லாமியர் காலத்துல ‘முல்லாக்களாக’ இருந்தவங்களா, சார்?


- இந்தியாவில் ‘வாடகைத் தாய்மார்கள்’ இந்தியர்கள் கருக்களையே சுமக்க வேண்டும். வெளிநாட்டினர் கருக்களை சுமக்கத் தடை செய்யப்பட்டுள்ளது.
  **– உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு மனு**

  சபாஷ்! இதுக்குப் பேருதான் ‘பாரத மாதா’ ஆட்சி!

## அரசியல் சமூகத்திலிருந்து மதத்தை விலக்கி வைப்பதே மதச் சார்பின்மை

# சங்பரிவார் வரலாற்றுப் புரட்டுகளுக்கு மறுப்பு

இந்தியாவின் தலைசிறந்த வரலாற்று ஆய்வாளர் ஜவகர்லால் நேரு பல்கலையின் பேராசிரியர் ரொமிலா தாப்பர். சங்பரிவார் முன் வைக்கும் வரலாற்றுப் புரட்டுகளுக்கு சரியான மறுப்புகளை முன் வைத்து 'பிரன்ட்லைன்' (செப்.18) ஆங்கில இதழுக்கு விரிவான பேட்டி அளித்துள்ளார். அதன் முக்கிய பகுதிகள்:


ரொமிலா தாப்பர்

வரலாற்று விவாதங்கள் வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால், 'ஆரியர்கள்' எனும் தலைப்பு தற்போது அரசியலாக்கப்பட்டுள்ளது. ஆரியக் கலாச்சாரத்தின் மேலாதிக்கத்தையோ, இந்திய மண்ணில்தான் ஆரியர்கள் உதித்தார்களா ? போன்ற கேள்விகளையோ யார் எழுப்பினாலும் உடனடியாகச் சமூக வலை தளங்களில் அவர்கள் குறி வைத்துத் தாக்கப்படுகிறார்கள். இதனால் ஆரோக்கியமான வரலாற்று விவாதங்களுக்கு இடமில்லாமல் போகிறது.

கலாச்சாரத் தேசியம் என்பதற்கு அர்த்தம், தேசிய மயமாக்கப்பட்ட கலாச்சாரம் என்பதுதானே ? அதாவது, ஒரே ஒரு கலாச்சாரம் மட்டுமே உள்ளது எனச் சொல்வது தானே ? என்று கேட்கிறார்கள்.

இந்தியாவில், பன்முகத் தன்மையை இணைத்து வரலாற்றைப் பகிர்ந்தளிப்பதே சரியான தேசியக் கலாச்சாரமாக இருக்க முடியும்.

மத தேசியவாதத்துக்கும் மதச்சார்பற்ற தேசிய வாதத்துக்கும் இடையிலான வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு முதலில் மதச்சார்பின்மையைத் துல்லியமாகப் புரிந்துகொள்ள வேண்டும். எல்லா மதத்தினரும் ஒரே சமூகத்தில் கூடி வாழ்கின்றனர் என்பதால், அது மதச்சார்பற்ற சமூகம் ஆகிவிடாது. அனைத்து மதத்தினருக்கும் சமமான அந்தஸ்து இங்கு உள்ளதா ? மறுபுறம் மதச் சார்பின்மை என்றால் என்ன எனும் கேள்வி உள்ளது.

கத்தோலிக்க தேவாலயத்தின் இறையாட்சியைத் தகர்த்து, மக்களாட்சியைக் கோரியதுதான் ஐரோப்பாவில் மதச்சார்பின்மை. ஆனால், இந்திய சமூகத்தைப் பொறுத்தவரை தேவாலயத்தின் பிடியில் அரசு ஆட்டிவைக்கப்படவில்லை. இருந்த போதும் சமயச் சடங்குகள் வழியாகவும் சாதியப் படிநிலைகள் மூலமாகவும் மதம் கோலோச்சியது.

சமகாலப் பாரம்பரியம் எதுவும் அசலானது இல்லை. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னால் தோன்றிய பாரம்பரியங்களில்கூட ஏதோ ஒரு கட்டத்தில் இடையூறு நிகழ்ந்துள்ளது.

ஆனால் ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் முதன் முறையாக இந்துக் கலாச்சாரத்தின் வேர்களைத் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டது. அப் போது உதித்தது தான் மத தேசிய வாதம். அதிலிருந்து எழுந்ததுதான் ஆரியர்கள் இம்மண்ணின் மைந்தர்கள் எனும் கருத்தாக்கம். அதற்கு முன்புவரை ஒற்றைக் கலாச்சாரத்தைத் தேடும் முயற்சி நடைபெறவில்லை.

மத தேசியவாதம், கலாச்சாரத்தின் பன்முகத் தன்மையை மறுத்தது. ஒரே ஒரு கலாச்சாரத்தைத் தேர்ந்தெடுத்து அதுவே தேசியக் கலாச்சாரம் என்று மகுடம் சூட்டியது.

ஒரு மதம், ஒரு கலாச்சாரம், ஒரு மொழி என ஒற்றைப் பரிமாணத்தை மட்டுமே முன்னிறுத்துவதுதான் சமய தேசியவாதத்தின் முக்கிய அம்சமாகும். அரசியல் ஆதரவைத் திரட்டவே இத்தகைய முயற்சிகள் பெரும்பாலும் நடைபெறுகின்றன. இதற்குச் சிறந்த உதாரணம் இந்துத்துவம். பல ஆய்வாளர்கள் ஏற்கெனவே சொன்னது போல, இந்து மதமும் இந்துத்துவமும் ஒன்றல்ல. இந்து என்பது மதம். ஆனால், இந்துத்துவம் என்பது அரசியல் சித்தாந்தம். இந்து மதத்தின் சில அம்சங்களை மட்டுமே தன்வசப்படுத்திக்கொண்ட நவீன சித்தாந்தம்தான் இந்துத்துவம். 20ஆம் நூற்றாண்டில் தோன்றிய இக்கருத்தியலின் குறிக்கோள் இந்து அரசாட்சியை நிறுவுவது. அதற்காக இந்துக்களைத் திரட்டுவது.

ஒரு மதத்திலிருந்து அரசியல் சித்தாந்தத்தைக் கட்டமைக்கும் போது, அம்மதத்தின் சாரத்தையே மாற்றி அமைப்பதும் உண்டு. இப்படித்தான் இந்துத்துவம் தேசத்தின் எல்லை, ஒற்றைக் கலாச்சாரம், ஒற்றை மதம், ஒற்றை மொழி, ஒற்றைப் புனித நூல், ஒரே மூதாதையரின் பரம்பரை போன்ற சட்டகங்களை நிர்ணயித்தது. இவை அல்லாதவை அனைத்தும் அந்நியம் என்றது. சமூக மற்றும் அரசியல் அணி திரட்ட இது எளிய முறையாகும். இத்தகைய இந்துத்துவத்துக்கு நான் வைத்த பெயர் 'ஆட்சிக் குழு இந்து மதம்'. (Syndicate Hinduism)

ஆதிக்கக் கலாச்சாரங்களை ஆதரிப்பவர்களுக்கு இந்தப் போக்கினால் சிக்கல் இல்லை. ஆனால், காலங்காலமாக புறக்கணிக்கப்பட்டவர்களின் நிலை என்ன ? பிற கலாச்சாரங்களின் தனித்துவத்தை அங்கீகரித்துத் தன்னுடன் அரவணைத்துச் செல்வது தானே தேசியக் கலாச்சாரமாக இருக்க முடியும் ? அதிலும் தேசிய வாதம் நிறுவப்பட்ட காலகட்டத்தில் நியாயமான அங்கீகாரம் மறுக்கப்பட்ட பழங்குடியினர், தலித்துகள், நடுத்தர மக்கள், இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், சமணர்கள், பார்சி இனத்தவர்கள் போன்றவர்களுக்கு இப்போது நியாயம் சேர்க்கப்பட வேண்டும். சமயச் சார்பற்ற ஜனநாயக நாடான

என்னைக் கேட்டால், அரசியல் மற்றும் சமூகத்திலிருந்து மதத்தைத் தள்ளிவைப்பதுதான் சரியான மதச்சார்பின்மையாகும்.

என்னைப் பொறுத்தவரை ஒரே ஒரு பெரும்பான்மைச் சமூகமோ, அடையாளமோ நிரந்தரமாக மேலாதிக்கம் செலுத்துவது நியாயமான ஜனநாயகம் அல்ல. அதேபோல, பெரும்பான்மை எனும் கருத்தியலை முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது. அது நெகிழ்வுத் தன்மை கொண்டது. அதிலும் மதசார்பற்ற சமூகத்தில் மேலாதிக்க மத அடையாளங்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அமைதியைப் போதித்த காந்தியடிகள் எதற்காக போருக்கும் வன்முறைக்கும் ஆதரவளித்த பகவத் கீதையைத் தூக்கிப்பிடித்தார் ? என்ற கேள்வி கேட்கப்படுகிறது.

காந்தியின் எழுத்துக்களை மதிப்பிடும் அளவுக்கு அவரை ஆழமாக வாசித்ததில்லை. அஹிம்சையும் இம்சையும் வெவ்வேறு கோணங்களில் செயல்படு கின்றன என்பதே என்னுடைய பார்வை. உதாரணமாக, அசோகர் அஹிம்சை முன்மொழிந்தாலும் அது கட்டுப்படுத்தப்பட்ட அஹிம்சை என்றே சொல்ல வேண்டும். தன் மகன்களும் பேரப் பிள்ளைகளும் வன்முறையில் ஈடுபட மாட்டார்கள். வன்முறையில் இறங்க வேண்டி வந்தால், கருணையோடு தண்டனை விதிப்பார்கள் என்றார் அசோகர். கீதையும் இதைத்தான் போதிக்கிறதா ? நிச்சயமாக இல்லை. இதில் எனக்கு ஆச்சரியமூட்டுவது என்னவென்றால், அசோகரின் வழிகாட்டலால் காந்தி ஏன் ஈர்க்கப்படவில்லை ?

ஒன்று புரிகிறது கீதையை காந்தி பின்பற்ற முக்கியக் காரணம் வர்ணாசிரம தர்மம். ஏனெனில், அது சமூகக் கட்டமைப்பை அழுத்தமாகப் பேசியது. வர்ணாஸ்ரம சட்ட திட்டங்களை மக்கள் மீறும்போது அவர்களை முறைப்படுத்தி வழிநடத்துவேன் என உறுதியளித்தது.

வர்ணாசிரம பாரம்பரியத்தைத் தக்கவைத்துக் கொண்டே சிக்கலுக்கு விடை தேடும் முயற்சியில், ஹரிஜன் என்னும் சொல்லை காந்தி பிரயோகித்தார். சாதிய அடிப்படையில் மக்கள் ஒடுக்கப்பட்டதை அவர் எதிர்த்தார். ஆனால், அதற்கு மாற்று என்ன என்பதே இன்றைக்குத் தொக்கி நிற்கும் கேள்வி ?

காந்தியினுடைய நோக்கத்தைக் கேள்விக்குள்ளாக்குவதற்குப் பதிலாக, காந்தியின் அணுகுமுறை சாதியப் படிநிலையைப் புரட்டிப்போட்டதா ? அன்றைய சூழலுக்குச் சவால் விட்டதா என்ற கேள்விகளை எழுப்புவதுதான் நியாயம்.

## பீகாரை ஆட்டிப் படைத்த பார்ப்பனியம்

# லல்லு பிரசாத் கொந்தளிப்புப் பேட்டி

'என்.டி.டி.' தொலைக்காட்சி, பீகார் குறித்து ஒளிபரப்பிய ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் பீகார் மாநிலத்தை பார்ப்பனர்கள் ஆட்டிப் படைத்த கொடூரமான வரலாறுகள் வெளிச்சத்துக்கு வந்தன. இந்த நிகழ்வில் பேட்டி அளித்த லல்லு பிரசாத், பார்ப்பனக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே தாம் அரசியலுக்குவந்ததாக கூறினார். அந்த சிறப்பு நிகழ்ச்சி குறித்த செய்தித் தொகுப்பு.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை மாட்டுக்குப் பதிலாக கழுத்தில் ஏர் பூட்டிக் கொடுமைப்படுத்திய பார்ப்பன உயர் ஜாதிக் கூட்டம், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைக்கான குரலைக் கொடுக்க ஆரம்பித்த நிலையில், அதற்காக எங்கள் ஆட்சிச் சக்கரம் சுழன்ற நிலையில், எங்கள் ஆட்சியைக் காட்டாட்சி (ஜங்கள்ராஜ்) என்று வருணிக்கிறார் - ஆனால், மோடியோ உயர்ஜாதியினருக்கான கருவி என்றார் லாலுபிரசாத்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு வடக்கே மகாராஷ்டிரம், பஞ்சாப், மேற்குவங்கம் தவிர்த்த அனைத்து மாநிலங்களும் பார்ப்பனியக் கட்டுக்குள் சென்றுவிட்டன. மகாராஷ்டிரத்தை எடுத்துக் கொண்டால் சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர், மகாத்மா புலே, சாவித்திரி பாய் புலே, சாகுமகராஜ் போன்றோரால் உருவாக்கப்பட்ட சமூகநீதி நெருப்பின் வெப்பம் தாளாமல் ஓடி ஒளிந்துகொண்ட பார்ப்பனியம் சுமார் ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு மைனாரிட்டி பாஜக ஆட்சி மற்றும் மத்தியில் உள்ள மோடியின் ஆதரவோடு மெல்ல தலையை எட்டிப் பார்க்கிறது.

**பார்ப்பனீய சக்திகளின் பிடியில் பீகார்**

பீகார் மாநிலம், வட இந்தியாவில் உள்ள மாநிலங்களில் இருந்து கொஞ்சம் வேறுபட்டது, ஆண்டு முழுவதும் வற்றாத கங்கை, கோஷி போன்ற பேராறுகளும் சுமார் 60 சிற்றாறுகளும் பாயும் வளமான பூமி. சுதந்திரம் பெறும் வரை பீகார் மக்கள் வேலை, கூலி என்று வாழ்க்கை சென்று கொண்டு இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு பீகார் உருவான போதே முழுக்க முழுக்க பார்ப்பனீய சக்திகளின் பிடியில் வந்து விட்டது.

60களின் துவக்கத்திலேயே மெல்ல மெல்ல அரசமைப்புச் சட்டம் கொடுத்த அனைத்து உரிமைகளும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளும் பறிக்கப்பட்டன. மாநிலத்தில் நடக்கும் எந்த ஒரு கொடூரமும் வெளியே தெரியாதவாறு பார்ப்பனீய ஊடகங்கள் தங்கள் பணியைச் செய்து கொண்டு இருந்தன. அவரவர் குலத் தொழிலைச் செய்ய வேண்டும் என்ற அச்சில் ஏறாத சட்டம் அங்கே இருந்தது.

**ஆசிரியர்களின் மாடுகளைக் குளிப்பாட்ட வேண்டும் மாணவர்கள்**

லாலு பிரசாத் நேர்காணலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: "எங்கள் பெற்றோர் எங்களை பள்ளிக்கு அனுப்புவார்கள். பள்ளி அசம்பிளியிலேயே அந்தந்த ஜாதி மாணவர்கள் பிரிக்கப்படுவார்கள். யாதவ மாணவர்கள் ஆசிரியர்களின் வீட்டு மாடுகளை கவனிக்க அனுப்பப்படுவார்கள். நண்பகல் வகுப்பறைக்கு வந்து தூங்கவேண்டும். பிறகு மாலை வீட்டிற்குச் செல்ல வேண்டும். இப்படித்தான் அந்தந்த ஜாதி மாணவர்கள் அவரவர் குலத் தொழிலைச் செய்ய வேண்டும். இந்தியா எங்கும் இப்படித்தான் இருக்கும் என நினைத்துக் கொண்டோம். அப்போதெல்லாம் ஆசிரியர் மேசையில் இருக்கும் பத்திரிகையைத் தொட்டாலே காது கிழிந்து விடும் அளவிற்கு திருகிவிடுவார்" என்று தன்னுடைய மாணவர் பருவ அனுபவத்தைக் கூறியுள்ளார் - லாலு பிரசாத்.

**நாடோடிகளின் நிலை இதைவிடக் கொடூரம்**

பீகார் மக்களின் கடந்தகால வாழ்க்கைக் குறித்து ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்பியது. அதில் 'என்.டி.டி.' தொலைக்காட்சி செய்தியை பீகாரில் எலி பிடிக்கும் நாடோடிகளின் வாழ்க்கைப் பற்றி ரவீஷ் குமார் என்ற செய்தியாளர் அதைத் தயாரித்திருந்தார். சுதந்திரத்திற்கு முன்பு, இந்த மக்கள் வயல்வெளிகளில் பயிர்களைச் சேதப்படுத்தும் எலிகளைப் பிடித்து அதற்கான கூலியை வாங்கிக்கொண்டு வாழ்க்கை நடத்தினர். கூலியாக நெல், கோதுமை, கடுகு, கடலை போன்றவை கிடைக்கும். ஆனால், ஆங்கிலேயர்கள் சென்ற பிறகு இவர்களின் வாழ்க்கையில் கொடூர மாற்றம் ஏற்பட்டது. இவர்கள் வயலில் இறங்குவதால் வயல் தீட்டுப்படுகிறது என்று கூறி உயர்ஜாதியினர் இவர்களை ஊரைவிட்டு துரத்தினர். ஏதாவது வேலை கொடுங்கள் என்று கெஞ்ச வேண்டிய நிலையில், மாடுகளுக்குப் பதிலாக இந்த மக்களின்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 05.11.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

இந்து பார்ப்பன - பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

**08.11.2015, ஞாயிறு**

முழு நாள் மாநாடு



கருத்தரங்கம் :
காலை 10.00 - பிற்பகல் 5.00- K.K.S.K. மகால், பவானி ரோடு, ஈரோடு.

பொது மாநாடு :
மாலை 6.00 - திருநகர் காலனி, ஈரோடு.

இசையரங்கம், வீதி நாடகம்

அனைவரும் வருக ! அறிவு விளக்கம் பெறுக !

அன்புடன் அழைக்கும்...
திராவிடர் விடுதலைக் கழகம்
ஈரோடு மாவட்டம். 98427 12444, 99655 08677

இடம் : K.K.S.K. மகால், பவானி ரோடு, ஈரோடு.
காலை 9 மணி : மேட்டூர் டி.கே.ஆர் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி
காலை 10 மணி : கருத்தரங்கம்

தலைமை : திருப்பூர் துரைசாமி, பொருளாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.
வரவேற்புரை : ஆசிரியர் சிவக்குமார், தமிழ்நாடு அறிவியல் மன்றம்
தலைப்பு : " எங்கள் பார்வையில் மக்களைப் பிளவுபடுத்தும் பார்ப்பனிய மதவாதம் "

நெறியாளர் :
விடுதலை இராசேந்திரன்,
பொதுச்செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.

பகுத்தறிவாளர் பார்வையில் : வே.மதிமாறன், எழுத்தாளர்
பெண்கள் பார்வையில் : சுந்தரவள்ளி, பெண்ணிய செயற்பாட்டாளர்
இஸ்லாமியர் பார்வையில் : ஆளூர் ஷாநவாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி
தலித்துகள் பார்வையில் : புனிதபாண்டியன், ஆசிரியர், தலித் முரசு இதழ்

நன்றியுரை :
சிவானந்தம் ஈரோடு மாநகரச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்

மாலை 3 மணி : கருத்தரங்கம்

தலைமை : பால்பிரபாகரன், பரப்புரைச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.
வரவேற்புரை : நாத்திகசோதி, மாவட்டத் தலைவர் திராவிடர் விடுதலைக் கழகம், ஈரோடு வடக்கு
தலைப்பு : "பார்ப்பனிய மதவாதிகள் பார்வையில் "

கருத்துரிமை : திருமலைராஜன், மூத்த வழக்குரைஞர்
வளர்ச்சி : ப.பா.மோகன் மூத்த வழக்குரைஞர்
உணவு – உடை : இராம. இளங்கோவன் வெளியீட்டுச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்
விழாக்கள் : கோபி வேலுச்சாமி தலைமைக்கழகப் பேச்சாளர், திராவிடர் விடுதலைக் கழகம்

நன்றியுரை :
பவானி வேணுகோபால், மாவட்டச் செயலாளர் திராவிடர் விடுதலைக் கழகம், ஈரோடு வடக்கு

இந்து பார்ப்பன - பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

நாள் : 08.11.2015, ஞாயிறு மாலை 6 மணி
இடம் : திருநகர் காலனி, ஈரோடு.

தலைமை : ப.இரத்தினசாமி, அமைப்புச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.
வரவேற்புரை : கு.சண்முகப்பிரியன், மாவட்டச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம், ஈரோடு தெற்கு.

சிறப்புரை :
கொளத்தூர் மணி
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

இரா.அதியமான்,
நிறுவனர், ஆதித்தமிழர் பேரவை

அப்துல் சமது,
பொதுச்செயலாளர், மனிதநேய மக்கள் கட்சி

நிலவன்
தமிழ்த்தேச நடுவம்

கண.குறிஞ்சி
மக்கள் சிவில் உரிமைக் கழகம்

நன்றியுரை : சென்னிமலை செல்வராசு மாவட்ட அமைப்பாளர், திராவிடர் விடுதலைக்கழகம்

மாநாட்டுக்கு முன்பாக கருப்பரசன் கலைக் குழுவினரின் வீதிநாடகம் நடைபெறும்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

# மனிதர்கள் கழுத்தில் ஏர் பூட்டினார்கள்; கூலியாக சாணம் தந்தார்கள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண், பெண் என்று பாராமல் அவர்களின் கழுத்தில் ஏர் பூட்டப்பட்டது. எல்லா வற்றையும்விடக் கொடூரம் அவர்களுக்குக் கூலியாக சாணி கொடுக்கப்பட்டது. ஆமாம் மாடுகளின் வயிற்றில் இருந்து செரிக்காமல் வெளியே வந்த கோதுமைகளை இவர்கள் கழுவி எடுத்துச் செல்லவேண்டும். அதுதான் அவர்களது உணவு!

இதே நிகழ்ச்சியில் சுதன்மான்ஜி என்ற 80 வயது முதியவர் தன்னுடைய அனுபவத்தை பற்றிக் கூறும்போது: "அம்மா கூடை நிறைய சாணியை அள்ளி வருவார்கள் அதைக் கழுவினால் ஒரு கைப்பிடி கோதுமைகூட கிடைக்காது. சில நேரங்களில் அந்தச் சாணிக் கூடையில் மனிதக் கழிவுகளும் கலந்திருக்கும்" என்று தெரிவித்தார்.

**கூலி கேட்பவர்களைக் கொலை செய்ய கூலிப்படை**

தாழ்த்தப்பட்ட மக்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் போன்றோர்களிடம் இருந்து நிலங்கள் பிடுங்கப்பட்டன. விவசாயக் கூலியைக் கேட்கிறார்கள் என்பதற்காக கேட்பவர்களை கொல்லுவதற்கென்றே உயர்ஜாதியினர் அடியாள்களை நியமித்திருந்தனர். இது பின்னாள்களில் 'ரன்வீர் சேனா' என்ற பெயரில் செயல்பட்டது. 1980 முதல் 1999 ஆம் ஆண்டு வரை சுமார் ஆறாயிரம் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களை கொலை செய்திருக்கின்றனர் என்று அரசுப் பதிவேடு கூறுகிறது. ஆனால், இது இலட்சத்தையும் தாண்டியிருக்கும் என்று லாலு பிரசாத் போன்ற தலைவர்கள் கூறுகின்றனர்.

**மிசா சிறை கொடுத்த மாற்றம்**

இந்தக் கொடூர அடக்குமுறைக்கு எதிராக பீகாரில் சில தலைவர்கள் உருவா யினர். ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்ற தலைவர்களின் வழிகாட்டுதலில் செயல் பட ஆரம்பிக்கும்போது நாடு முழுவதும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இது தனித்தனியாக செயல்பட்ட இளைஞர்களை ஒன்றிணைத்தது. லாலு பிரசாத் தனது மிசா சிறை அனுபவம் குறித்துக் கூறும் போது, "பீகாரில் பிற்படுத்தப்பட் டோர், தலித்துக்கள் 70 விழுக்காடு; ஆனால் வெறும் 3 விழுக்காடு கொண்ட பார்ப்பனர்கள் சிறையில் உள்ள அனைத்துப் பதவிகளிலும் நிறைந்திருந்தனர். சிறை வார்டன் முதல் எழுத்தர், கணக்கர், பொருட்கள் மேற்பார்வையாளர் என அனைத்துப் பணியிலும் பார்ப்பனர்கள் தான், இதர அனைத்து உடல் உழைப்பு வேலைகளையும் அந்தந்த ஜாதி சிறைக் கைதிகள் பார்க்கவேண்டும், வரும் ஒரு சில பார்ப்பன கைதிகள் சில நாள்களில் வெளியே சென்றுவிடுவார்கள், கைதிகளில் பார்ப்பனர்கள் இருந்தால் அவர்களை செல்லுக்குள் வைக்கமாட்டார்கள். அவர்களை வார்டன் அறையிலேயே தங்கவைத்து பிறகு அனுப்பி விடுவார்கள் இந்தச் சம்பவங்கள் எங்களை மேலும் ஆவேசப்படுத்தி விட்டது. இந்தப் பார்ப்பனீயக் கொடுமையை ஒழிக்காமல் விடமாட்டோம், அரசியல் அதிகாரத்தின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை நிலைநிறுத்த முடியும் என்ற கொள்கையில் நாங்கள் அனைவரும் ஓரணியில் திரண்டோம்.

அவசர நிலை ஆட்சி ஒழிந்தது; மத்தியில் ஆட்சி மாற்றம் எங்களுக்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்தது, நாங்கள் முன்பைவிடத் தீவிரமாக எங்கள் அரசியல் பணியைத் துவக்கினோம்; எங்களை மிகவும் எளிதில் கலவரக்காரர்கள்(தற்போது நக்சலைட்) என்று கூறி அரசுப் படைகள் கொலை செய்துவிட முடியும். ஆனால், நாங்கள் அதற்கு இடம்கொடுக்கவில்லை. பாபாசாகிப் அம்பேத்கர் வழியில் சமூக நீதியை மீட்டெடுக்க அரசியல் உரிமையை கைப்பற்ற வேண்டும் என்று திட்டமிட்டோம். ஆகையால் மக்களோடு மக்களாக தோள்கொடுத்து நின்றோம், நீண்ட நெடிய போராட்டத்தின் இறுதியில் பாபாசாகிப் அம்பேத்கரின் வாக்கு உண்மையானது, பீகாரில் சமூக நீதி வென்றது.

மோடி அவரது குஜராத்தில் நடத்தியது காட்டாட்சி (ஜங்கள்ராஜ்). எங்கள் ஆட்சியில் நடந்தது நல்லாட்சி (மங்கள்ராஜ்). மோடிக்கு இந்த வித்தியாசம் தெரியவில்லை, இது குஜராத் அல்ல பீகார். இங்கு காவிகளின் சூழ்ச்சிகள் பலிக்காது" என்று அந்த தொலைக்காட்சி நிகழ்வில் லல்லு கூறினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நாடு கடத்தப்பட்ட செய்தியை கௌசல்யாவிடம் சொன்ன இராமன், இறைச்சியை விலக்கி வைத்துவிட்டு, தேன், கிழங்கு, பழ வகைகளை மட்டுமே சாப்பிட்டு பதினான்கு ஆண்டுகள் தான் காட்டில் வாழப் போவதாக சத்தியம் செய்து தருகிறான். உண்மையில் தொடக்கத்தில் அப்படியே நடந்தும் காட்டினான். இதனால்தான், நிஷாதர்களின் தலைவன் குகன், இறைச்சி தந்தபோது அவன் அதை மறுத்து விட்டான். உணவுக்காகவும், வேள்விகளுக்காகவும் இராமனும், இலட்சுமணனும் காட்டு விலங்குகளை வேட்டையாடியதாக இதே புராணத்தில் அடிக்கடி பல குறிப்புகளைப் பார்க்க முடிகிறது. இராமன் வேட்டையாடுவதையே பொழுது போக்காகக் கொண்டவன் என்ற படிமத்துக்கு ஆதாரமாக ஏராளமான இராமாயணக் கதைகளைக் காட்ட முடியும்.

இறைச்சி உணவு மீது சீதை பெரும் ஆர்வம் காட்டி வந்தாள் என்ற விஷயத்தை யும் இந்த நூலிலுள்ள பல பாடல்களிலிருந்து ஊகிக்க முடிகிறது. கங்கையைத் தாண்டியபோது அரிசிச் சோறும், இறைச்சியும் கங்கையாற்றுக்கு சமைத்துத் தருவதாக சீதை உறுதி தந்தாள். தன் கணவனுடன் பத்திரமாகத் திரும்பி வந்தால், ஏராளமான மதுவைத் தருவதாக வாக்குறுதி தந்தாள். தன் கணவன் அவன் சபதத்தை நிறைவேற்றி முடித்தால் ஆயிரம் பசுக்களையும், நூறு ஜாடி மதுவையும் யமுனை ஆற்றுக்குப் படையல் தருவதாக அந்த ஆற்றைக் கடக்கும்போது சீதை வேண்டிக் கொள்கிறாள். மான் இறைச்சி மீது சீதை வைத்திருந்த விருப்பத்தின் காரணமாகவே அவள் கணவன், பொன்மான் வேடம் போட்ட மாரீசனை துரத்திச் சென்று கொல் கிறான்; அதனால் வரும் கேடுகளை உணர்ந்திருந்த போதிலும், அந்தப் புள்ளி மானைக் கொன்று அதன் இறைச்சியை எடுத்து வர அவன் தயக்கம் காட்டவில்லை.


சீதை கர்ப்பமாக இருந்தபோது அவளுக்குப் பல வகைப்பட்ட மதுவையும் இராமன் தந்ததாகவும், வேலைக்காரர்கள் அவளுக்கு இறைச்சியும், பழங்களும் தந்ததாகவும் இராமாயணத்தின் (வால்மீகி இராமாயணம்) இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீதையைப் பிரிந்திருந்த இராமன் அந்த நாட்களில் இறைச்சியையோ, தேனையோ, மதுவையோ தொடவில்லை என்று சீதையிடம் அனுமன் விவரிக்கின்ற போதிலும், சுக்ரீவனைச் சந்திக்கச் சென்ற வழியில் அந்த நாயகன் போகிற போக்கில் பறவைகளையும், மீன்களையும் கொன்றதாக கவந்தர் சொல்கிறார். பரதனுக்கு மீன், இறைச்சி, தேன் ஆகியவற்றையும், அவன் படைகளுக்கு கருவாடு, மீன் ஆகியவற்றை யும் குகன் விருந்தாகத் தருகிறான். பரதனின் படைகளை பரத்வாஜரும் நன்கு உபசரிக்கிறார். இறைச்சியும் மதுவும் தந்து அவர்களைக் கௌரவப்படுத்துகிறார். "கொழுத்த கன்றை வெட்டிச் சமைத்து உணவு படைத்து இராமனை வரவேற்கிறார்." இராவணனின் அரசவை விருந்தில் மான், எருமை, பன்றி, மயில், காட்டுக் கோழி, வெள்ளாடு ஆகிய விலங்குகளின் இறைச்சியும், கும்பகர்ணனின் பிரம்மாண்டமான அசைவ உணவு வகைகளும் முக்கிய அம்சங்களாக இருந்தன.

அய்ந்து விரல்கள் கொண்ட அய்ந்து வகை விலங்குகளின் இறைச்சியை உண்ணலாம் என்பது தர்மசாஸ்திரங்களின் கட்டளை என்பதை வாலி தெரிந்திருந்த போதிலும், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது விலங்குகளைக் கொல்ல அவன் ஒப்புக் கொள்கிறான். உண்ணத்தக்கவை என்று தர்ம சாஸ்திரங்களால் குறிப்பிடப்பட்ட விலங்கு இறைச்சிகள் உண்ணப்பட்டு வந்ததற்கு ஏராளமான குறிப்புகளை வால்மீகியின் நூலில் பார்க்கலாம். ஆனால், இதில் நாய் இறைச்சி வெறுப்புக்குரியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறாக, இறைச்சி உண்பதை இராமாயணம் கண்டித்திருந்த போதிலும், அசைவ உணவு மரபை அது உயர்த்திப் பிடித்திருந்தது. யமுனை ஆற்றுக்கு ஆயிரம் கால்நடைகளை வெட்டிப் பலி தருவதாகக்கூட சீதை வாக்குறுதி தந்ததை நாம் ஏற்கனவே பார்த்து விட்டோம். வைணவ பக்தி இயக்கத்தின் உறுதியான ஆதரவாளரான இராமானந்தரால் (பதினான்காம் நூற்றாண்டு) எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் அத்யாத்ம இராமாயணத்திலும்கூட, இறைச்சி உணவின் மீது சீதை கொண்டிருந்த விருப்பம் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமான தாகவே இருக்கும்.

**'பசுவின் புனிதம்: மறுக்கும் ஆதாரங்கள்' – டி.என்.ஜா. எழுதிய நூலிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 5th November 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | நவம்பர் 12, 2015 | புரட்சி 14 | முழக்கம் 44 | விலை: ரூ.3.00


# ‘இந்து’ மதப் போர்வைக்குள் பதுங்கிக் கிடக்கும் பார்ப்பன பயங்கரவாதம்




# முகமூடியைக் கிழித்தது ஈரோடு மாநாடு

‘இந்து’, ‘இந்துத்துவம்’ என்ற கூச்சல்களுக்குப் பின்னால் பதுங்கிக் கிடப்பது பார்ப்பனர்களும் பார்ப்பனியமும்தான் என்ற உண்மையை வரலாற்றிலிருந்தும் பா.ஜ.க. பரிவாரங்களின் ஆட்சி அதிகார செயல்பாடுகளிலிருந்தும் ஏராளமான தகவல்களை முன் வைத்தது, ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய ‘இந்து’ பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு. மாநாட்டில் உரையாற்றிய பலரும் உண்மையான எதிரிகளை அடையாளப் படுத்தும் சரியான மாநாடு என்று பாராட்டினர்.

வெற்று ஆரவாரங்கள் – தனி நபர் துதிகள் இல்லாமல் தொடக்கம் முதல் இறுதி வரை அறிவார்ந்த கருத்துகளையும் சிந்தனைகளையும் முன் வைத்ததும், மாநாட்டுப் பார்வையாளர்கள் இறுதிவரை செவிமெடுத்ததும் இந்த நாட்டின் சிறப்பாகும்.

மாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றிய ஓர் தொகுப்பு:

ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணில் “இந்து பார்ப்பன-பயங்காரவாத எதிர்ப்பு மாநாடு” நவம்பர் 8 ஞாயிறு பகல் 11 மணியளவில் ஈரோடு பவானி ரோடு கே.கே.எஸ்.கே. திருமண மண்டபத்தில் பார்ப்பன மதவெறிச் சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பகுத்தறிவு எழுத்தாளர்கள் தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கல்பர்க்கி நினைவரங்கத்தில் மிகுந்த எழுச்சியோடு நடை பெற்றது.

மாநாட்டு துவக்கத்தில் மேட்டூர் டிகேஆர் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

*மாட்டை விட மனுசன் என்ன கேவலமா?*
*உங்கள் மனுதர்ம கூட்டத்திற்கே ஆணவமா?*
*பசுவதை சட்டம் என்று நடிக்கிறீங்களே!*
*உங்கள் பார்ப்பன மதத்தை*
*காக்கதுடிக்கிறீர்களே!*

என்ற பாடலும், அடுத்து,

*தொட்டாலே தீட்டுப்படுமா...*
*நாங்கள் தொடாதப்பொருள் எதுவாம்?*
*பார்த்தாலே பாவதோஷமா...*
*நாங்கள் பார்க்காதக்காட்சி எதுவாம்?*

என்று மேட்டூர் கோவிந்தராஜ் தனது வெண்கலக் குரலில் பாடியது, மாநாட்டிற்கு வருகை தந்த அனைவரையும் எழுச்சியோடு உற்சாகப்படுத்தியது. இசைக் குழுவில் மேட்டூர் முத்துக்குமார், அருள்மொழி, கோவை இசைமதி ஆகியோரின் பாடல்களுக்கு தோழர்கள் குமரப்பா, சீனிவாசன், காளியப்பன் ஆகியோரின் நேர்த்தியான இசையால் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டனர்.

**சிந்திக்க வைத்த கருத்தரங்கம்**

மாநாட்டின் முதல் அமர்வாக கருத்தரங்கத்திற்கு வருகை தந்த அனைவரையும் தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவக்குமார் வரவேற்று உரையாற்றினார். கருத்தரங்கத்திற்கு

( 2 ஆம் பக்கம்)





# பாசிசத்தைவிட கொடுமையானது பார்ப்பனியம்

(முதல் ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை வகித்த கழக மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி உரையாற்றினார்.

அவர் தனது உரையில், "உலகத்தின் எந்த நாட்டிலும் இல்லாத ஜாதியக் கட்டமைப்பு இந்தியாவில் பார்ப்பனர்களால் வஞ்சகமாகப் புகுத்தப்பட்டது. இந்து மதத்தில் இருந்துகொண்டு ஜாதியை ஒழிக்க முடியாது, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்றால் முதலில் தங்களது சுயஜாதி பற்றினை விடவேண்டும். சிலர் மதம் மாறினாலும் கூட தங்களது சுய ஜாதி பட்டப் பெயரை பெருமையாக போட்டுக் கொள் கின்றனர். காரணம் அவர்கள் மதம் மாறினாலும் தங்கள் மூளையில் உள்ள பார்ப்பன சித்தாந்தங்களை விட மறுத்ததன் விளைவுதான். மேலும் பாஜக அரசு நாம் என்ன உணவை உண்ணவேண்டும் எந்த உடையை உடுத்த வேண்டும். எந்த மொழியை பேச வேண்டுமென, தீர்மானிக்கிறார்கள். எனவே பா.ஜ.க.வின் பாசிச போக்கை தடுத்து நிறுத்த நாம் பெரியாரையும், அம்பேத்கரையும் ஒன்றிணைத்து வலிமையான போராட்டக் களங்களை உருவாக்க வேண்டும்" என கூறினார்.

பின்னர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில், "எங்கள் பார்வையில் மக்களைப் பிளவுபடுத்தும் பார்ப்பனீய மதவாதம்" என்ற பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் தொடங்கியது.

**பெண்கள் பார்வையில்**

"பெண்கள் பார்வையில்" என்கிற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் திருப்பூர் சிவகாமி பேசினார். அவர் தனது உரையில், "அனைத்து மதங்களும் பெண்களை அடிமை படுத்திதான் வைத்திருக்கிறது. அதிலும், பார்ப்பன இந்துமதம் பெண்களுக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் பாசிச சிந்தனையோடு கொடுமைகளை நிகழ்த்தி அவர்களை பாவயோனிகள் என இழிவு படுத்தி சிறுமைப்படுத்தி வைத்திருக்கிறது.

நமது நாட்டு பெண்கள் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு பெயரால் தமக்கு தாமே விலங்கு போட்டுக் கொண்டுள்ளனர். அன்றுமுதல் இன்று வரை இந்துமதம் கலாச்சார பண்பாட்டு பெயரால் பெண்களை அடிமைப்படுத்தியே வைத்திருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமையான இந்துமதத்தை வேரறுக்க பெண்கள் தங்களை இழிவுபடுத்ததுகின்ற மனுதர்மத்தை எதிர்த்து வலிமையாக போராட வேண்டும்" என கூறினார்.

**பகுத்தறிவாளர் பார்வையில்**

"பகுத்தறிவாளர் பார்வையில்" என்ற தலைப்பில் பேசிய எழுத்தாளர் மதிமாறன் தனது உரையில், "உலகம் முழுவதும் பாசிச கொள்கைகள் உருவாவதற்கு முன்பே இந்தியாவில் பார்ப்பன கொடுமைகள் உருவாகிவிட்டன. மனுதர்மம் என்பது மனித உரிமைக்கு எதிரானது, உலக சர்வாதிகாரியான 'ஹிட்லரைவிட பார்ப்பனர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக செய்த கொடுமைகள் கொடூர மானது. இந்துத்துவவாதிகள் மனித உரிமைகள் பற்றி பேசவே கொஞ்சமும் அருகதையற்றவர்கள்.

மனிதனை தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம், அவர்கள் வசிப்பதற்கு ஊருக்குவெளியே சேரி என்று கொடுமைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு மாட்டை காப்பாற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டு மனிதர்களை கொல்வதற்கு துணிந்திருக்கிறார்கள். இந்துத்துவாதிகளின் இஸ்லாமிய எதிர்ப்பு என்பது, உண்மையிலேயே தலித் மக்களுக்குகெதிரான எதிர்ப்பு குறியீடாகத்தான் பார்க்கவேண்டியுள்ளது.


தலித் மக்கள்தான் அதிக அளவில் இஸ்லாம் மதத்திற்கு மாறுகிறார்கள் என்ற காரணமும் இவர்கள் ஒடுக்குமுறைக்கு ஒரு காரணமாக இருக்கிறது. செத்த

### பீகார் மக்களுக்குப் பாராட்டு!

பீகார் சட்டமன்றத் தேர்தலில் பிரதமர் மோடியும் பாஜக பரிவாரங்களும் மதவாத வெறுப்புக் கருத்துக்களை முன் வைத்து வெற்றி பெற்று விடலாம் என திட்டமிட்ட முயற்சிகளை முறியடித்து, நிதிஷ்குமார் தலைமையிலான சமூகநீதி சக்திகளுக்கு பெறும் வெற்றியை குவித்துள்ள பீகார் மக்களுக்கு வாழ்த்துக்களையும், மகிழ்ச்சிகளையும் இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

**ஈரோடு மாநாட்டுத் தீர்மானம்**





மாட்டை சாப்பிட வேண்டாம் என்று அம்பேத்கர் கூறினார். செத்தமாடு தான் தீண்டாமையை உருவாக்குகிறது என்றும் சொன்னார். இஸ்லாம் மதமும் செத்த விலங்குகளை சாப்பிடக் கூடாது என்கிறது. தலித் மக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் ஒன்றிணைக்கும் இந்தப் பண்பாட்டுக் கூறுகளே இந்துத்துவவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு மூலகாரணமாக உள்ளது" என கூறினார்.

**தலித்துகள் பார்வையில்**

"தலித்துகள் பார்வையில்" என்ற தலைப்பில் தலித் முரசு ஆசிரியர் புனித பாண்டியன் உரையாற்றினார். அவர் தனது உரையில், "ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துத்துவ சக்திகள் முன்வைக்கக் கூடிய பயங்கரவாத செயல் திட்டங்களை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்துவது மட்டுமல்லாமல் மனுஸ்மிருதி எரிப்பு இராமாயண, மகாபாரத எதிர்ப்பு உள்ளிட்ட செயல்திட்டங்களையும் ஜாதிய அமைப்பினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சூத்திரர்கள் (பிற்படுத்தப்பட்ட மக்கள்), தலித் மக்கள் ஆகியோரை ஒன்றிணைக்க கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு செயல்திட்டத்தை முன்வைத்து நாம் இயங்கும்போதுதான் அது இந்துத்துவ சக்திகளுக்கு மிகப் பெரிய பேரடியாக இருக்கும்" என கூறினார்.

**இஸ்லாமியர் பார்வையில்**

"இஸ்லாமிய பார்வையில்" என்ற தலைப்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநிலப் பொறுப்பாளர் ஆளூர் ஷாநவாஸ் உரையாற்றும் போது, "பெரியார் இஸ்லாமியர் அல்ல ஆனால் இஸ்லாமியர்களின் தலைவர்.பெரியார் பெண் அல்ல ஆனால் பெண்களின் தலைவர். பெரியார் ஒரு தலித் அல்ல ஆனால் ஒட்டு மொத்த தலித் மக்களின் தலைவர், ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் குறியீடாக கருதப்படுபவர் பெரியார். இஸ்லாமியர்கள் சிறு வயது முதல் மதரீதியான கட்டளைகளுக்கு கீழ்படிந்து மார்க்க கல்விகளை கற்றவர்கள், கடவுள் பக்தி மிக்கவர்கள் ஆனால் மதமே இல்லை, கடவுளே இல்லை என்று சொன்ன மிகப்பெரிய நாத்திக தலைவரான பெரியார் அவர்களை இஸ்லாமியர்கள் தங்களது, தலைவராக இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருப்பது மிகப் பெரிய சமூக மாற்றம்.

பெரியாரின் நேர்மையான கொள்கை ரீதியான உழைப்பினால் போராட்டங்களினால் சிறுபான்மை மக்கள் பல்வேறு உரிமைகளை இன்று பெற்றிருக் கிறார்கள். காயிதே மில்லத் அவர்கள் தீவிர மதம் மற்றும் கடவுள் பற்றாளர். இஸ்லாமியர்களுக்கான அரசியலை தீவிரமாக முன்னெடுத்தவர். ஆனால் கடவுள் மறுப்பாளரான தந்தை பெரியார் அவர்களையும், காயிதேமில்லத் அவர்களையும் சமூக நீதி கோட்பாடு என்ற தத்துவம்தான் ஒன்றாக இணைத்தது. பெரியார் உருவாக்கிய உறுதியான அடிப்படை கட்டுமானம் இன்றுவரை இருப்பதால் தான் எங்களை போன்ற சிறுபான்மை மக்களும் நம்பிக்கையுடன் இந்த நாட்டில் வாழ்கிறார்கள்" என கூறினார்.

இறுதியாக, திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரை யாற்றினார். முடிவில் கோபிநாத் நன்றி கூறினார்.

**மாட்டிறைச்சி உணவு**

கருத்தரங்கம் மூன்று மணியளவில் நிறைவடைந்தது. மாநாட்டு அரங்கிலேயே குறைந்த விலையில் மாட்டிறைச்சிக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 4 மணியளவில் நிகழ்ச்சிகள் வீதி நாடகத்துடன் தொடர்ந்தன.

செயல்வீரர் மேட்டூர் கருப்பரசன் நினைவு நாடகக்குழுவினரின் "மனுசனைப் பாருங்கள் மனுதர்மர்த்தை தீயில் கொளுத்துங்கள்" என்கிற முழக்கத்தோடு வீதி நாடகம் நடைபெற்றது. தோழர்கள் கொளத்தூர் குமரேசன், சேலம் பிரபு, நங்கவள்ளி கிருஷ்ணன், மேட்டூர் அருள்மொழி, விருதுநகர் கணேசமூர்த்தி, திருப்பூர் சங்கீதா, கனல்மதி, புதுவை மதிவாணன் ஆகியோரின் நடிப்பு ஜாதி மதவாத, பார்ப்பன இந்து பயங்கரவாதிகளுக்கு சாட்டையடி கொடுக்கும் வகையிலும், பொது மக்களுக்கு கருத்துக்கள் எளிய முறையில் புரியும் வகையிலும் மிக சிறப்பாக அமைந்தது.

**மதவாதிகள் பார்வையில்**

மாநாட்டின் இரண்டாவது அமர்வாக பார்ப்பனீய மதவாதிகள் பார்வையில் - கருத்துரிமை, வளர்ச்சி, உணவு, உடை, விழாக்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் தொடங்கியது. ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி வரவேற்புரை யாற்றினார். கருத்தரங்கத்திற்கு தலைமையேற்று மாநில பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன் உரையாற்றினார். அவர் தனது உரையில்,

### மாட்டிறைச்சி உணவு பரவலாகட்டும்!

குறைந்த விலையில் நிறைந்த புரதச் சத்தை வழங்கும் மாட்டிறைச்சி உணவை கேரள மக்கள் விரும்பி உண்பது போல, தமிழர்களும் தங்கள் உணவுப் பழக்கமாகக் கொள்ள வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. தமிழ்நாட்டில் மாட்டிறைச்சி உணவை முன் வைத்து நடக்கும் பொது நிகழ்வுகளுக்கு தமிழக அரசின் காவல்துறை தடைவிதிப்பதற்கும், கெடுபிடி காட்டுவதற்கும் வன்மையான கண்டனத்தை இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

**ஈரோடு மாநாட்டுத் தீர்மானம்**

"வேதமதமான பார்ப்பன மதமே, இந்து மதமாக உருமாறியிருக்கிறது. வேத, பார்ப்பன இந்து மதம் ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான பல்வேறு பயங்கரவாத செயல்களை அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்து செய்து வருகிறது. பார்ப்பன பாசிச சிந்தனைகளை கொண்ட இந்துத்துவ வாதிகள், இன்று நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் "அசுர" பலத்தோடு இருக்கிறார்கள். அரசின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய நிர்வாகம், நீதித்துறை, கல்வி உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகளில் பல்வேறு பாசிச இந்துத்துவ சிந்தனைகளை புகுத்தி வருகின்றன. ஆர்.எஸ்.எஸ்சின் பின்புலத்தோடு ஆட்சிக்கு வந்திருக்கின்ற பாஜக இந்துத்துவ சிந்தனைகளை பார்ப்பன பயங்கரவாத செயல்களை இன்றைக்கு வெளிப்படையாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. ராமனின் பிள்ளைகளுக்குத்தான் இந்த நாட்டில் இடம் உண்டு என்றும், மற்றவர்கள் நாட்டை விட்டு வெளியே வேண்டும் என்ற நச்சு கருத்துக்களை கூறி வருகின்றனர். மதுவிற்கு எதிராக பாடல் எழுதினார் என்பதற்காக தோழர் கோவன் மீது தேச துரோக வழக்கைப் பாய்ச்சும் அரசு ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தன் வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியார் மீது தனது பாசிச நச்சு பேச்சுகளால் சேற்றை வாரி இறைக்கும் பா.ஜ.க.வை சேர்ந்த பார்ப்பனர் எச்.ராஜா போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்குகி றது. இதுதான் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்கிற பார்ப்பன மனுதர்ம நீதி இத்தகைய மனுதர்ம நீதி இந்த மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும்" என்றார்.

**விழாக்கள்**

"விழாக்கள்" என்ற தலைப்பில் கழக பேச்சாளார் கோபி வேலுச்சாமி உரையாற்றுகையில், "வருடம் முழுவதும், ஆரிய பண்பாட்டை பறைசாற்றும், பண்டிகைகளை பார்ப்பனர்கள் நம்மீது திட்டமிட்டு திணித்துவிட்டனர். நமக்காகவே காலமெல்லம் உழைத்த பெரியார் அம்பேத்கர் போன்ற தலைவர்களின் பிறந்தநாள் நினைவு நாட்களை கூட இன்றைக்கு பார்ப்பன இந்துத்துவவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டனர். பகுத்தறிவு

(3ஆம் பக்கம்)

# மாவட்டந்தோறும் பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடுகள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சாரத்திற்கு ஒளி, ஒலி அமைக்கக்கூட தடை போடும் காவல்துறையினர் பக்தியின் பெயரால் பண்டிகைகளின் பெயரால் அனுமதியின்றி ஒலிப் பெருக்கிகள் வைப்பதை அனுமதிக்கின்றனர். இது அவர்களின் மூளையில் ஏற்பட்ட நவீன பார்ப்பன சிந்தனைதான் காரணம்'' என உரை யாற்றினார்.

**வளர்ச்சி**

''வளர்ச்சி'' என்ற தலைப்பில் உரையாற்றிய மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன், தனது உரையில், ''பார்ப்பனீய மதவாதிகள் பார்வையில் வளர்ச்சி என்பது உழைப்பவர்களை கீழ் ஜாதியாகவும், அவர்களது உழைப்பை உறிஞ்சி கொழுப்பவனை மேல் ஜாதியாகவும் வைத்துள்ளது. இதுதான் பார்ப்பனீய சமுக கட்டமைப்பாகும், முதலாளித்துவமும், ஜாதியமும் ஒரு புள்ளியாகவும், ஜாதியையும், வர்க்கத்தையும் ஒரு மையப் புள்ளியாகவும், இன்றைக்கு பார்ப்பனீயம் தான் ஒன்றிணைக்கிறது. வளர்ச்சி என்று பார்த்தால் இந்த நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இன்றுவரை இந்தியாவில் பார்ப்பனீய பனியா கும்பல்கள்தான் வளர்ச்சியடைந்திருக்கிறது. ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வளர்ச்சி என்பது இன்றுவரை இல்லை. இத்தகைய பார்ப்பன-பனியா கும்பலை வளர்த்து விடும் வளர்ச்சி என்பது நமக்குத் தேவையில்லை எனவே அம்பேத்கர் பெரியார் சிந்தனைகளை உள்வாங்கிய மார்க்சீயம் உருவானால் தான் நம் மக்களுக்கு உண்மையான வளர்ச்சி ஏற்படும்'' என்று கூறினார்.







**உணவு உடை**

''உணவு உடை'' என்கிற தலைப்பில் உரையாற்றிய கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம இளங்கோவன் தனது உரையில், ''ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த நாட்டில் தோளில் துண்டு போடவும், முழங்காலுக்கு கீழே வேட்டி கட்டவும், நமது பெண்கள் மேலாடை கூட அணிய கூடாது என்றும் அடக்கு முறைகளை ஏவியவர்கள், இந்து பார்ப்பன பயங்கரவாத சிந்தனை கொண்டவர்கள் அனுமதிக்க மறுத்தனர். இக்கொடுமைகளுக்கு எதிராக போராடி உரிமைகளை நமக்கு பெற்றுத் தந்தவர் பெரியார் மற்றும் அம்பேத்கர். அவர்களுடைய ஓய்வறியா உழைப்புத்தான் நம்மக்களை தலை நிமிர்த்தியது. பெண்களை போகப் பொருளாகவும், அடிமைகளாகவும், விளம்பர கருவிகளாவும், பார்ப்பனியம் சித்தரித்தது. அதை உடைத் தெறிந்தவர் பெரியார்.

வேதகாலங்களில் மாட்டுக்கறியை தின்ற பார்ப் பனர்கள் இன்றைக்கு ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்கள் மாட்டுக்கறியை அதிகம் சாப்பிடுகிறார்கள் என்ற காரணத்தினால் பசு இந்துக்களின் தாய்; பசுவதை கூடாது என்கிறார்கள். ஒரு மாட்டிற்காக மனிதர்களை கொல்வது என்பது பார்ப்பன இந்து பயங்கரவாதத்தின் உண்மை முகமாகும். பசு மாட்டை உண்ணக் கூடாது என்னும் பார்ப்பனர்கள் பசு மாட்டின் இரத்தத்தில் உருவாகும் பாலையும் நெய்யையும் இனி சாப்பிட மாட்டோம் என உறுதி கூறுவார்களா?'' என்று கேட்டார்.

**கருத்துரிமை**

இறுதியாக, ''கருத்துரிமை'' என்ற தலைப்பில் பேசிய மூத்த வழக்கறிஞர் திருமலை ராஜன் தனது உரையில், ''இந்த நாட்டில் எந்த பிரச்சனையாக இருந்தாலும், கருத்துரிமை சார்ந்த பிரச்சனையாக இருந்தாலும், நாம் நீதி கேட்டு போகும் இடம் நீதிமன்றங்கள் தான். அப்படிப்பட்ட நீதி மன்றங்களில் பார்ப்பன பயங்கரவாதிகள் (தற்போது ஆட்சியில் இருப்பவர்கள்) நீதிபதிகள் நியமனத்தில் நீதிபதிகளும் மக்களால் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு மூலம்தான் நீதிபதிகளாக தேர்வு செய்யப்படவேண்டுமென ஒரு புதிய சட்டத்தை கொண்டு வந்தார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிகளே உயர் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளை கொலீஜியம் முறையில் நியமிப்பதற்கு இவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இவர்கள் கொண்டுவர முயற்சிக்கும் சட்டம் என்பது நீதிபதிகள் நியமனத்தில் மக்கள் பிரதிநிதிகள் மட்டுமல்லாது நாட்டில் பிரபலமாக இருப்பவர்களையும் நீதிமன்ற நியமனக் குழுவில் இடம்பெற்று நீதிபதிகள் நியமனம் செய்யலாம் என்று கூறுகிறார்கள். பிரபலமானவர்கள் என்பவர் இவர்களின் பார்வையில் ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் போன்றவர்களை போல் பல காவி சிந்தனை உள்ளவர்களை இக்குழுவில் புகுத்தி நீதித் துறையில் காவிமயமாக்க முயற்சிக்கிறார்கள் இக்குழு நேரடியாக நீதிபதிகளை நியமனம் செய்தால் நம்மை போன்றவர்கள் நமக்கான நியாயங்கள் உரிமைகள் பெற நீதிமன்றம் சென்றால் நமக்கான நீதி பார்ப்பன இந்துத்துவ காவி பயங்கரவாதிகளால் கேள்விக் குறியாக ஆக்கப்படும் அபாயம் உள்ளது'' என்று கூறினார்.

**இந்து பார்ப்பன – பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு**

இறுதியாக இந்து பார்ப்பன - பயங்கரவாத எதிர்ப்பு பொது மாநாடு தொடங்கியது, ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் சண்முகப்பிரியன் வரவேற்புரையாற்றினார். கழக மாநில அமைப்பு செயலாளர் ஈரோடு ரெத்தினசாமி மாநாட்டிற்கு தலைமையேற்று உரையாற்றினார். அவர் தனது உரையில், ''இந்துத்துவ காவி பயங்கரவாதிகள், தாழ்த்தப்பட்ட ஒடுக்கப் பட்ட சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஜாதி மத கலவரங்களை தொடர்ச்சியாக தூண்டி விட்டு அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முயற்சி செய்து வருகின்ற சூழ்நிலையில் பெரியார் பிறந்த இந்த ஈரோட்டில் இந்த மாநாட்டை நாங்கள் நடத்து கிறோம். மதச்சார்பற்ற நாட்டில் அரசு அலுவலகங்களில் மத வழிபாடு கூடாது என உள்ள அரசு ஆணைகளை அரசு அலுவகங்கள் நடைமுறை படுத்தவேண்டும் என கோரி தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்பாட்டங் களை நடத்தி அதிகாரத்தில் உள்ளவர்களிடம் அரசாணைகளை மனுவாகக் கொடுத்தோம் அதன் மூலமாக ஈரோடு உள்ளிட்ட பல மாவட்டங்களில் ஆயுத பூஜை உள்ளிட்ட மதவழிபாடு கொண் டாட்டங்களை கணிசமான அளவில் தடுத்து நிறுத்தி யிருக்கிறோம். இந்த மாநாட்டிற்கு கூட காவல் துறையில் கடைசி நேரத்தில் அனுமதி மறுத்து விட்டனர். காவல் துறையின் இத்தகைய நடவடிக்கைகள் இந்திய அரசியல் அமைப்பு சட்டங்கள் வழங்கியிருக்கின்ற கருத்துரிமை மற்றும் பேச்சுரிமைக்கு எதிரானதாகும், இத்தகைய அடக்கு முறைகளுக்கு எதிராக ஒத்த கருத்துடைய சக்திகளை திரட்டி வெகுவிரையில் ஈரோடு மாநகரில் மிகப்பெரிய போராட்டங்களை நாம் முன்னெடுத்து நடத்துவோம்'' என்று கூறினார்.

**நிலவன்**

மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக வருகை தந்த தலைவர்களின் உரை தொடங்கியது, முதலில் தமிழ்தேச நடுவம் அமைப்பின் பொறுப் பாளர் நிலவன் உரையாற்றும்போது, ''பெரியார் அம்பேத்கர் போன்ற தலைவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் பார்ப்பன இந்து மதத்திற்கும் அது கட்டமைத்த ஜாதிய கொடுமைக்களுக்கு எதிராகவும், வலிமையாக போராடினார்கள். அப்படி போராடி உரிமைகளை பெற்றுத்தந்த நமது தலைவர்கள் பெரியார் அம்பேத்கரைப் பிரிக்கும் நோக்கத்தோடு இன்றைய நவீன தமிழ் தேசியவாதிகள் தங்கள் மூளையில் பார்ப்பன நச்சு சிந்தனை கருத்துகளை ஏற்றிக் கொண்டு பெரியார் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான தலைவர் என்றும் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தலைவர் என்று அவதூறுகளை பரப்பி அவர்களை பிரித்துவிடலாம் என்ற கனவில் பெரியார் அம்பேத்கர் மீது இன்று சேற்றை வாரி வீசுகிறார்கள். இவர்களின் கனவு ஒருபோதும் பலிக்காது'' என்று கூறினார்.

**கண.குறிஞ்சி**

அடுத்து உரையாற்றிய மக்கள் சிவில் உரிமை கழகத்தை சார்ந்த கண.குறிஞ்சி தனது உரையில், ''பார்ப்பன இந்துமதத்தை சார்ந்த காவி பயங்கர வாதிகள் இன்றைக்கு ஆட்சி அதிகாரத்தில் வலிமையாக உட்கார்ந்து கொண்டு கருத்துரிமை பேச்சுரிமை எழுத்துரிமைகளுக்கு எதிராவும், ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு எதிராவும், பாசிச சிந்தனையோடு செயல்படுகிறார்கள். தங்களது பாசிச தத்துவங்களுக்கு எதிராக கட்டுரைகள் எழுதுகிறார்கள், மக்களிடையே பிரச்சாரம் செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக நரேந்திர தபோல்கர், கோவிந்த பன்சாரே, கல்பர்க்கி போன்ற பகுத்தறிவு எழுத்தாளர்களை இந்துத்துவ காவி பயங்கரவாதிகள் படுகொலை செய்து இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியிருக்கின்ற உரிமைகளை தங்கள் காலில் போட்டு மிதித்து தங்களின் இந்து பாசிச கொடூர முகத்தினை நமக்கு காட்டியுள்ளனர்'' என உரையாற்றினார்.

(4ஆம் பக்கம்)

**கவுரவக் கொலைகளைத் தடுக்க தனிச் சட்டம்**

கவுரவக் கொலை என்ற பெயரால் ஜாதிவெறி சக்திகள் நடத்தும் குடும்பப் படுகொலைகளை தடுக்க தமிழக அரசு தனிச் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. இது குறித்து மத்திய அரசு கருத்து கேட்டு அனுப்பி வைத்த சட்ட வரைவுக்கு அண்டை மாநிலங்கள் தங்கள் கருத்தை தெரிவித்துள்ள நிலையில், தமிழக அரசு கருத்து தெரிவிக்காமல் கிடப்பில் போட்டிருப்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டி, இதில் உரிய கவனம் செலுத்தி செயல்பட வலியுறுத்துகிறது.

**ஈரோடு மாநாட்டுத் தீர்மானம்**

**மாநில உரிமைகளைப் பறிக்கிறது நீதித்துறை பரிந்துரை**

உயர்நீதிமன்ற பாதுகாப்பை மத்திய காவல்துறைக்கு பரிந்துரைப்பதை, மாநில அரசின் உரிமைப் பட்டியலில் உள்ள காவல்துறை உரிமையைப் பறிப்பதாகவே இம்மாநாடு கருதுகிறது. ஏற்கனவே தமிழ் நாட்டில் இயங்கும் விமான நிலையங்களின் பாதுகாப்பு மாநில காவல்துறையிடம் இருந்து மத்திய பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இப்போது உயர்நீதிமன்ற பாதுகாப்பும், மத்திய பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது. இவ்வாறான மாநில உரிமைப் பறிப்புக்கு எதிராகக் கட்சி அரசியல் கண்ணோட்டமின்றி, தமிழக அரசியல் கட்சிகள் அனைவரும் உரிமைக் குரல் கொடுக்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது

**ஈரோடு மாநாட்டுத் தீர்மானம்**

DATE OF PUBLICATION 12.11.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# காவல்துறையின் கடைசி நேரத் தடை – முறியடிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மனித நேய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் அப்துல் சமது, பார்ப்பன பயங்கர வாதங்களை விளக்கி சிறப்புரை யாற்றினார்.

அடுத்துப் பேசிய ஆதி தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமான் தனது உரையில், **“இதுவரை நாம் பார்ப்பனர்களிமிருந்து நம்மை தற்காத்துக் கொள்வதற்கு மட்டுமே பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறோம். ஆனால் இந்த பார்ப்பன பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் நேரடியாக எந்தவிதமான தாக்குதல்களையும் (அறிவுசார்) நடத்த வில்லை. அப்படி நாம் நேரடியான தாக்குதல்களை நடத்தியிருந்தால் நம்மை அவர்கள் பலவீனமாக பார்த் திருக்க மாட்டார்கள். ஆனால் பெரியார், அம்பேத்கர் சிந்தனைகளை கொண்டு அவர்களின் உண்மையான கொள்கை களை உள்வாங்கி, நேரடியாக பார்ப்பன இந்துத்துவ பயங்கரவாத தாக்குதல்களை நடத்தவேண்டிய அவசியமும், சூழலும் தேவையும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்து பார்ப்பன பயங்கரவாதம் என்று சொல் வதற்குகூட அஞ்சுகின்ற சூழ்நிலையில் நேரடியாக நம் எதிரி யார் என்று சுட்டிக்காட்டி, அது இந்து பார்ப்பன பயங்கரவாதம் தான் என்று எடுத்துச் சொல்கிற ஒரு இயக்கம் இருக்குகிறது என்றால் அது திராவிடர் விடுதலைக் கழகம் மட்டும் தான் என்ற உண்மையை இந்த மாநாடு பறைசாற்றுகின்றது”** என்று கூறினார்.

இறுதியாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாநாட்டு பேருரையாற்றினார்.

மாநாட்டின் முடிவில் மாவட்ட அமைப்பாளர் சென்னிமலை செல்வ ராசன் நன்றி கூறினார். மிக குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட “இந்து பார்ப்பனப் பயங்கரவாத மாநாட்டை” மாநில அமைப்பு செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் தங்களது கடும் உழைப்பின் மூலம் மாநாட்டை மிக நேர்த்தியாக வடிவமைத்து வெற்றிகரமாகவும் நடத்தி முடித்தனர். அவர்களுக்கு துணையாக ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, மாவட்ட செயலாளர் வேணுகோபால், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் ஆசிரியர் சிவக்குமார், ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் சண்முகப் பிரியன், மாவட்ட அமைப்பாளர் சென்னிமலை செல்வ ராஜ் மற்றும் கோபிநாத் உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் மாநாட்டிற் காகப் பணியாற்றினர்.

மாநாட்டில் ஈரோடு வடக்கு ஈரோடு தெற்கு, சேலம் மேற்கு மற்றும் கிழக்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், கோவை, கரூர், திருச்சி, தூத்துக்குடி சிவகங்கை, விருதுநகர், திருவாரூர் மற்றும் சென்னை உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தோழர்கள் பங்கேற்றனர்.

ஈரோட்டில் நடைபெற்ற இந்து பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டின் வெற்றியைக் கண்ட கழகத் தோழர்கள் அடுத்த மாநாடு சென்னையிலும், அதனை தொடர்ந்து சேலத்திலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்து விட்டனர். கழகத் தலைவரும், தமிழகத்தில் முக்கிய நகரங்களில் இம்மாநாடு தொடர்ச்சியாக நடை பெறும் என பலத்த கரவொலிக் கிடையே அறிவித்தார்.

**ஈரோடு வழிகாட்டுகிறது...**

இந்து பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு நவம்பர் 8ஆம் தேதியன்று காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை ஈரோடு கே.கே. எஸ்.கே. அரங்கத்திலும், மாலையில் திறந்தவெளி மாநாடு, ஈரோடு திருநகர் காலணி அருகிலும் நடத்துவது என திட்டமிட்டு, கழகத் தோழர்கள் மாலை நடைபெறவிருந்த மாநாட் டிற்கு காவல்துறையின் அனுமதி கோரி மாநில அமைப்பு செயலாளர் ஈரோடு ரெத்தினசாமி தலைமையில் கடந்த 21.10.2015 அன்று ஈரோடு கருங்கல் பாளையம் காவல் நிலையத்தில் ஆய்வாளர் சிவக்குமார் வசம் கடிதம் கொடுத்தனர். மாநாட்டு அனுமதி கொடுத்து உடனடியாக பரிசீலிப்பதாக கூறிய காவல்துறையினர் 15 நாள் களுக்கு மேல் கால தாமதப்படுத்தி அனுமதி கடிதம் தராமல் மாநாடு நடைபெறும் தேதிக்கு முதல்நாள் 7.11.2015 அன்று மதியம் 12.50 மணியளவில் திறந்தவெளி பொது மாநாட்டிற்கு அனுமதி மறுத்து கடிதம் கொடுத்தனர். இது குறித்து ஈரோடு காவல்துறை துணை கண்காணிப் பாளார் சம்பத், ஆய்வாளர் சிவக்குமார் ஆகியோரிடம் அனுமதி மறுப்பு குறித்து மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் சென்னை உயர்நீதி மன்ற கழக வழக்கறிஞர் துரை. அருண், ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் கேட்டபோது அரசு அறிவுறுத்தல் பேரில்தான் அனுமதி மறுக்கப்படு கிறது என்ற காரணத்தை தெரி வித்தனர். மேலும், பொது மாநாடு நடைபெறவிருந்த திருநகர் காலனி பகுதியில் 300க்கும் மேற்பட்ட அதிரடிப் படையினர், காவல்துறை உயர் அதிகாரிகள் வஜ்ரா வாகனங்களை கொண்டு வந்து நிறுத்தியும் தோழர்களை கைது செய் வதற்கு 20க்கும் அதிகமான பேருந்து களை கொண்டு வந்து நிறுத்தியும் தங்களது, பார்ப்பன இந்துத்துவ பாசத்தை வெளிப் படுத்தினர்.

உடனடியாக கழகத் தலைவரிடம் ஆலோசனை பெற்ற நிர்வாகிகள், காவல்துறை தடையை வேறு வகையில் எதிர் கொள்ளலாம் என முடிவு செய்து பொது மாநாட்டை கே.கே.எஸ்.கே. அரங்கத்திலேயே தொடர்ந்து வெற்றி கரமாக நடத்தி முடித்தனர். காவல் துறையின் நடவடிக்கையைக் கண்டித்து ஒத்த கருத்துள்ள ஜனநாயக சக்திகளை ஒருங்கிணைத்து ஈரோடு மாநகரில் மிகப் பெரிய அளவில் திராவிடர் விடுதலைக் கழகம், போராட்டங்களை நடத்துமென நிர்வாகிகள் அறிவித்தனர்.

**செய்தித் தொகுப்பு:
மன்னை இரா.காளிதாசு**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

# மாட்டிறைச்சிக்கு தடை: மத்திய அமைச்சர் எதிர்ப்பு

மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜி ஜீ மாட்டிறைச்சிக்கு தடை போடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். “நான் மாட்டிறைச்சி சாப்பிடுகிறேன்; ஆனால், புத்த மார்க்கத்தைத் தழுவியவன்” என்று. டெல்லியில் ஒரு ஆங்கிலப் பத்திரிகை ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட் டார். “குளிர் பிரதேசத்தில் வாழும் மக்கள் குளிரை சமாளிக்க புரதச் சத்துள்ள மாட்டிறைச்சியைத் தான் சாப்பிட முடியும். இதனால்தான் இந்தப் பகுதிகளில் இராணுவ வீரர்களுக்கு கண்டிப்பாக மாட்டிறைச்சி வழங்கப் படுகிறது. அதுவும் மாட்டிறைச்சி வேண்டாம் என்று சொல்லும் பா.ஜ.க.வின் ஆட்சியிலேயே வழங்கப்படுகிறது. எனது மாநிலமான அருணாசலப் பிரதேசத்தில் பெரும்பாலான மக்களின் உணவு மாட்டிறைச்சிதான். எனவே மாட்டிறைச்சிக்கு தடைபோட முடியாது” என்று கூறியுள்ளார்.

## அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை: தமிழக ஆர்.எஸ்.எஸ். ஆதரவு

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மதுரை மீனாட்சி கோயில் பார்ப்பன அர்ச்சகர்கள் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தில் நடந்த விசாரணை மே மாதம் முடிந்துவிட்டது. தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்து தமிழ்நாட்டின் ஆர்.எஸ்.எஸ். தலைவர் எம்.எல்.ராஜா என்பவர் ‘இந்து’ ஆங்கில நாளேட்டுக்கு பேட்டி அளித்துள்ளார். (நவம்.4, 2015) அதில், “அர்ச்சகராவதற்கு மதம் குறித்த சடங்குகள் - ஒழுக்கமுமே முக்கியம். ஜாதி முக்கியமல்ல. ஆகம அடிப்படையிலான கோயில்களிலும் பார்ப்பனரல்லாத அர்ச்சகர் பயிற்சிப் பெற்றவர்கள் அர்ச்சகர்கள் ஆவதை ஆர்.எஸ்.எஸ். எதிர்க்க வில்லை” என்று கூறியிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். தலைவரின் இந்தக் கருத்தை வரவேற்கிறோம். பார்ப்பனர்கள் - பார்ப்பன அமைப்புகள் - இராம கோபாலன்கள் - சங்கராச்சாரியர்கள் இந்தக் கருத்தை ஆதரிக்கிறார்களா ?



நன்றி : ‘இந்து’

## வினாக்கள்... விடைகள்...!

- சகிப்புத் தன்மை குறைந்து வருவதற்கு எதிராக காங்கிரஸ் கட்சி நடத்திய பேரணிக்கு பா.ஜ.க. போட்டி பேரணி **– செய்தி**

  எதிர்ப்புகளை சகித்துக் கொள்ளவே மாட்டோம் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறாங்க, போல!

- நீதிமன்றத்தில் தமிழ் உரிமைக் கோரிய போராட்டத்தினால் நீதிமன்ற வளாகத்தில் தமிழக காவல்துறைக்கு பதில் – மத்திய போலீஸ் படை வருகிறது. **– செய்தி**

  நீதிமன்றத்துக்குள் மட்டுமல்ல; நீதிமன்ற வளாகத்துக்குள்ளும் தமிழுக்கு இடமில்லை. இனி இந்திக்கார போலீஸ்தான்!

- வடபழனி முருகன் கோயிலில் திருமணம் செய்ய வரும் ஏழைகளிடம் இடைத்தரகர்கள் பணம் பறிக்கும் மோசடி நடக்கிறது. **– ‘தினமலர்’ செய்தி**

  ஆனா, முருகனுக்கு இடைத் தரகர்களாக இருக்கும் அர்ச்சகர்கள் மோசடிப் பற்றி மட்டும் பேச மாட்டீங்க.

- ஆர்.எஸ்.எஸ். சீருடையில் மாற்றம். இனி மூத்தவர்களுக்கு முழுக்கால் சட்டை. **– செய்தி**

  ஆக, முழுக்கால் சட்டையை ‘பாரத கலாச்சாரமாக’ ஒத்துக்கீட்டீங்க... பெரிய புரட்சி தான்!

- பீகாரில் பா.ஜ.க. தோற்றால், பாகிஸ்தானில் பட்டாசு வெடிப்பார்கள். **– தேர்தல் பிரச்சாரத்தில் அமித்ஷா**

  இஸ்லாமியர்களும் தீபாவளி கொண்டாடுறாங்களேன்னு மகிழ்ச்சியடைய வேண்டியது தானே! இதுல உங்களுக்கு என்ன ‘ஜி’ சங்கடம்?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 13th November 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | நவம்பர் 19, 2015 | புரட்சி 14 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00

## திப்பு சுல்தானை பார்ப்பனர்கள் வெறுப்பது ஏன்?

கருநாடக மாநில அரசு திப்பு சுல்தானுக்கு அரசு விழா எடுத்ததை சகித்துக் கொள்ள முடியாத மதவாத சக்திகள் நடத்திய கலவரத்தில் இரண்டு பேர் பலியாகி விட்டனர். நடிகர் ரஜினிகாந்த், திப்பு சுல்தானாக ஒரு திரைப்படத்தில் நடிக்க விருக்கிறார் என்ற செய்தி வந்தவுடன், பார்ப்பனர்கள் இல.கணேசனும், இராம. கோபாலனும், ரஜினிகாந்தை நடிக்கக் கூடாது என்று மிரட்டுகிறார்கள். திப்பு சுல்தான் மீது பார்ப்பனர்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்?

தனது தந்தை ஹைதர் அலி மரணத்தைத் தொடர்ந்து, 1782இல் 29 வயதில் ஆட்சிப் பொறுப்பேற்று 18 ஆண்டுகள் ஆட்சி புரிந்து, மைசூர்ப் போரில் வீரமரணம் எய்தியவன் திப்பு சுல்தான். பிரிட்டிஷ் ஆட்சியை தனது படை வலிமையால் நடுங்க வைத்தவன். 1791இல் சிருங்கேரி மடத்துக்கு சொந்தமான சாரதா கோயிலை மராட்டியப் படை கொள்ளையடித்து, 17 இலட்சம் மதிப்புள்ள கடவுள் சிலை, நகைகளை வாரிச் சென்றது. அப்போது சிருங்கேரி மடத்தின் பார்ப்பன சங்கராச்சாரி சச்சிதானந்த பாரதி உயிர் தப்பி, திப்புவின் உதவி கேட்டு கடிதம் அனுப்பியபோது, மராட்டியப் படைகளை விரட்டியடித்து, சாரதா பீடத்தை மீட்டுத் தந்தது திப்பு சுல்தான் படைதான்.

மலபார் பகுதி திப்புவின் கட்டுப்பாட்டில் வந்தபோது, அங்கு பெண்கள் மேலாடை அணியாமல் இருந்த வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவன் திப்பு. மைசூர் அரசில் தொழிற்சாலைகள் தொடங்க திட்டமிட்டு 3 கப்பல் கட்டும் தளங்களையும், கிருஷ்ணராஜ சாகர் அணைக் கட்டிற்கு அடித்தளமும் போட்டதோடு, நிலமற்ற மக்களுக்கு நிலங்களை வழங்கத் தொடங்கினான். இங்கேதான் பிரச்சினை.

நில உரிமைகள் ஏதும் இல்லாத அக்காலத்தில் நிலங்களின் உரிமைகள் பார்ப்பனர்களின் ஏகபோகமாக இருந்தன. தொழிற்சாலைகளுக்கும் நிலமற்ற மக்களுக்கும் பார்ப்பனர் கட்டுப்பாட்டிலிருந்த நிலங்களை திப்பு சுல்தான் பறிமுதல் செய்ததுதான் திப்பு சுல்தான் மீது பார்ப்பனர்களுக்கு அடங்காத கோபத்தை உருவாக்கி விட்டது.

அதன் காரணமாகவே பார்ப்பனியம் இன்று வரை திப்பு சுல்தானை வெறுத்து ஒதுக்குகிறது.

இஸ்லாமிய மன்னர்கள் என்றால், அவர்கள் எவ்வளவு நன்மை செய்தாலும் கெட்டவர்களாக சித்தரிப்பதும், இந்து மன்னர்கள் என்றால் அவர்கள் எவ்வளவு மோசமானவர்களாக இருந்தாலும் ‘உத்தமபுத்திரர்’களாக வரலாறுகளைக் கட்டமைப்பதும்தான் சங்பரிவாரங்களின் ‘வரலாற்றுப் பார்வை’!

## ‘எவிடென்சு’ அமைப்பு வெளியிடும் அதிர்ச்சி உண்மைகள்

# தமிழகப் பள்ளிகளில் தீண்டாமைக் கொடுமைகள்

2 ஆவது வகுப்பு படிக்கும் ஒரு தலித் சிறுவனை, மலம் எடுக்கச் சொன்ன விஜயலட்சுமி என்ற ஆசிரியை கைது செய்யப்பட்டிருக்கிறார். இது நாமக்கல் மாவட்டத்தில் இராமபுரம் நகராட்சிப் பள்ளியில் நடந்த சம்பவம். இது வெளியே தெரிய வந்த நிகழ்வு, அவ்வளவுதான். மதுரையில் டி.கல்லுப்பட்டி அருகே உள்ள கூறையூர். இங்கே உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் 1970ஆம் ஆண்டிலிருந்து 40 ஆண்டுகளாக ஒரு தலித் மாணவர்கூட சேர்க்கப்படவில்லை. 1964ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது இந்தப் பள்ளி. ஒவ்வொரு ஆண்டும் எத்தனை மாணவர்கள் எந்தெந்த ஜாதிப் பிரிவுகளிலிருந்து சேர்க்கப்பட்டனர் என்ற தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டுப் பெற்றுள்ளது ‘எவிடென்சு அரசு சாரா நிறுவனம்’. குறிப்பாக இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் தலித் மாணவர்களை தலித் அல்லாத ஆசிரியர்கள் தங்களுக்குத் தேவையான எடுபிடி வேலைகளுக்கும் துப்புரவுப் பணிகளுக்கும் பயன்படுத்துவது நடைமுறையாகிவிட்டது.

நெல்லை மாவட்டம் வேடம்குளம் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் படிப்பதற்கு வந்த ஒரு தலித் குழந்தையை கட்டாயப்படுத்தி கழிப்பறையை சுத்தம் செய்ய வைத்த கொடுமை நடந்தது. சம்பவம் நடந்த ஆண்டு 2012. இந்த வன்கொடுமையை நிகழ்த்திய பள்ளி தலைமை ஆசிரியரிடம் ரூ.25000/- அபராதத் தொகை வசூலிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் பரிந்துரைத்தது. கிரிமினல் வழக்குப் பதிவு செய்யவும் ஆணையம் உத்தரவிட்டது. ஆனால், அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்ததா என்பது தெரியவில்லை.

பள்ளிக் குழந்தைகள், தங்களின் ஜாதி அடையாளமாக ஒவ்வொரு வண்ணத்திலும் கையில் கயிறு கட்டிக் கொண்டு பள்ளிக்கு வருகிறார்கள். இது தவிர மாணவர்கள் சட்டைப் பையில் வெளியே தெரியுமளவுக்கு ஜாதித் தலைவர்களின் படங்கள். பிரச்சினைகள் உருவானபோது, பள்ளிக் கல்வித் துறைத் தலையிட்டு, கயிறு கட்ட ‘விரும்புகிறவர்கள் வெள்ளை நிறக் கயிறு மட்டுமே கட்ட வேண்டும்’ என்று அறிவுறுத்தியது. ஜாதிக் கொடுமையில் வெறுத்துப் போன ஒரு தலித், தனது மகனுக்கு ‘ஜாதி ஒழிப்பு வீரன்’ என்று பெயர் சூட்டினார். ஆத்திரம் கொண்ட ஜாதி வெறியர்கள், அந்த தலித் தோழரை மூர்க்கத்தனமாக தாக்கினர். 2014இல் நடந்த இந்த சம்பவம், வழக்காக பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், தலித் மாணவர்களை கழிப்பறைக் கழுவ வைத்த குற்றத்துக்காக அரசு உதவி பெறும் பள்ளி தாளாளர் ஒருவரும், 7 ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டனர். 2007ஆம் ஆண்டில் கடலூரில் அரசு நடுநிலைப் பள்ளி தமிழ் ஆசிரியர், குடியரசு தினத்துக்கான நடன நிகழ்ச்சிகளில் தலித் மாணவர்கள் பங்கேற்பதற்கு தடை விதித்தார்.

தென் தமிழகத்தில் ஒரு கணித ஆசிரியர், தலித் மாணவர்களை ‘மைனஸ்’ என்றும், தலித் அல்லாத மாணவர்களை ‘பிளஸ்’ என்றும் பெயர் சூட்டி இழிவுபடுத்தினார். புகார் வந்ததைத் தொடர்ந்து, அவர் வேறு ஊருக்கு மாற்றப்பட்டார். ஒரு அங்கன்வாடியில் தலித் குழந்தைகளுக்கு தனி வண்ணத்தில் சாப்பாட்டுத் தட்டுகள் வழங்கி, தனியே சாப்பாடு போட்டார் அங்கே பணியாற்றிய ஊழியர்.

ஒவ்வொரு கிராமமும் எப்படி ஒரு ஜாதியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதோ, அதேபோல பள்ளிகளையும் ஆதிக்க ஜாதிகள் தங்களின் பிடிக்குள்ளே வைத்திருக்கின்றன என்கிறது ‘எவிடென்ஸ்’ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை. பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சைத் திணிக்கும் இந்த ஜாதிவெறிக்கு எதிராக எந்த ஒரு அரசியல் கட்சியோ, இயக்கமோ வாய்திறப்பதே இல்லை என்பதுதான் மிகப் பெரும் அவலம்.

# மணக்குப்பம் கிராமத்தில் கழகம் உதயம்

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய் நல்லூர் அருகே உள்ள கிராமம் மணக்குப்பம். இக்கிராமத்தின் இளைஞர்கள் தாங்களாகவே ‘பெரியார் மாணவர் பேரவை’ என்ற அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களைத் திரட்டி, பெரியார் பிறந்த நாள் விழாக்களை நடத்தி வந்தனர்.

பின்னர், ‘இளம் திராவிடர்’ என்ற பெயரில் இயங்கும் இணையதளக் குழுவில் இடம் பெற்றுள்ள கழகத் தோழர் செந்தில் வழியாக பேரவையை வழி நடத்திய ஆனந்த் பெரியார், சென்னை மாவட்டக் கழகத் தோழர்களுடன் தொடர்பு கொண்டார். மணக்குப்பம் கிராமத்தில் இளைஞர்களைத் திரட்டி, ஒரு பொதுக் கூட்டம் நடத்தி, ‘திராவிடர் விடுதலைக் கழக’த்தைத் தொடங்க முடிவு செய்தனர். கூட்டத்துக்கான ஏற்பாடுகளுக்கு உதவிட விழுப்புரம் அய்யனார், சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் கரு. அசுரன், முழக்கம் உமாபதி, எப்.டி.எல். செந்தில் ஆகியோர் முன்கூட்டியே மணக்குப்பம் சென்றனர். கடும் மழை காரணமாக நிகழ்ச்சி சமுதாயக் கூடத்துக்கு மாற்றப்பட்டது. மணக்குப்பம் தோழர்கள் கிராமத்திலும், சுற்றுப் பகுதிகளிலும் வீடு வீடாகச் சென்று கூட்டத்தின் துண்டறிக்கைகளை வழங்கினர்.

”இன்றைக்கும் தேவை பெரியார்” என்ற தலைப்பில் 15.11.2015 மாலை 5 மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கின. கூட்டத்திற்குப் பெரியார் மாணவர் பேரவையைச் சேர்ந்த ஆனந்த் பெரியார் தலைமை தாங்கினார். கணேஷ்ராஜா வரவேற்புரையாற்றினார். மணிகண்டன், பழனி, புஷ்பராஜ், ஆறுமுகம், பாலகுரு, நாராயணன், கார்த்தி, பாபு, சக்திவேல், ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காவை இளவரசனின் ‘மந்திரமா? தந்திரமா?’ அறிவியல் விளக்க நிகழ்ச்சியுடன் பொதுக்கூட்டம் ஆரம்பமானது.




மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவு கருத்துகளுடன் காவை இளவரசன் நிகழ்ச்சி மிக சிறப்பாக அமைந்து மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, வழக்கறிஞர் துரை அருண், தென் சென்னை கழக மாவட்ட செயலாளர் இரா. உமாபதி ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், “இன்றைக்கும் தேவை பெரியார்” எனும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

கழகத்தின் விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் வெங்கட், மாவட்ட அமைப்பாளர் நவாப் பிள்ளை, கழகத் தோழர் சாக்ரடீஸ், காவலாண்டியூர் ஈசுவரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி பழனிச்சாமி, ஆசிரியர் கேசவன் உள்ளிட்ட ஏராளமான தோழர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். கற்பகம் நன்றியுரையாற்றினார்.

## அடாது மழை அடித்தாலும் விடாது ‘அவாள்’ கொட்டம்

கடும் மழையில் தமிழகம் தத்தளிக்கிறது; வெள்ளப் பாதிப்புகள், ஏழை எளிய மக்களின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிட்டது; அரசு நிவாரணப் பணிகள் படுமோசமாகி விட்டதால், தங்குமிடம் உணவு இன்றி மக்கள் பரிதவிக்கின்றார்கள். ஆனால், மக்கள் துயரங்களைப் பற்றிக் கவலைப்படாமல், ஸ்ரீரங்கம் கோயிலில் ‘கும்பாபிஷேக’ வேலைகளும், யாக சாலை பூஜைகளும் அமர்க்களமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஊரே வெள்ளத்தில் தவிக்கும்போது, பூணூல் மேனியுடன் வைதிகப் பார்ப்பனர்கள் 28 வெள்ளிக் குடங்களில் ‘புனித நீர்’ கொண்டு வருவதையும், யாக சாலைகளில் பார்ப்பனர்கள் பல்வேறு யாக குண்டங்களில் உணவுப் பொருள்களை தீயில் போட்டு பொசுக்கி தொடர்ந்து பல நாள் யாகங்கள் நடத்துவதையும் ‘தினமணி’, ‘தினமலர்’ போன்ற பார்ப்பன ஏடுகள் படங்களுடன் செய்தி வெளியிட்டு குதூகலிக்கின்றன.

# பெரியார் அம்பேத்கர் கருத்துக்களை முன்னெடுப்பதே சிறுபான்மை மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு

## ஈரோடு மாநாட்டில் ஆளூர் ஷாநவாஸ் முழக்கம்

ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்து பார்ப்பன-பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டில், ‘எங்கள் பார்வையில் மக்களைப் பிளவுப் படுத்தும் பார்ப்பனீய மதவாதம்’ என்ற பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், ‘இசுலாமியர் பார்வையில்’ என்கிற தலைப்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் பேசினார். அவரது உரையிலிருந்து -

“பகுத்தறிவாளர் பார்வையில் பெரியார், பெண்கள் பார்வையில் பெரியார், தலித்துகள் பார்வையில் பெரியார், இசுலாமியர் பார்வையில் பெரியார் - என தலை சிறந்த தலைப்புகளில் பலர் பேசியிருக்கிறார்கள். இது திட்டமிட்டு நடந்ததல்ல இயல்பாகவே அமைந்துவிட்டது.

ஏனென்றால், பெரியார் ஒரு இசுலாமியர் அல்ல; ஆனால், இசுலாமியர்களின் தலைவர். பெரியார் பெண் அல்ல; ஆனால், பெண்களின் தலைவர். பெரியார் ஒரு தலித் அல்ல; ஆனால், தலித்துகளின் தலைவர் என்பதை உணர்த்துகின்ற மேடையாக இந்த மேடை அமைந்திருக் கின்றது. இதை வேறு எதனுடனும் பொருத்திப் பார்க்க முடியாது. பெரியார்தான் ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களுடைய ஒற்றைக் குறியீடாக தென்னகத்தில், தமிழ்நாட்டில் திகழ்ந்துகொண்டிருக்கின்றார். வேறு எந்த தலைவருக்கும் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இப்படிப் பொருத்திப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட அடையாளமாக, ஒரு குறியீடாக பெரியார் திகழ்கின்றார்.

இசுலாமியர்கள் ஒரு இசுலாமியரைத் தவிர்த்து இன்னொருவரை தலைவராக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அந்தளவிற்கு மதரீதியாக மார்க்க ரீதியாக ஒன்றிணைத்து கட்டமைக்கப்பட்டவர்கள். மூன்று வயதிலேயே மார்க்க கல்வி கற்க அனுப்பி வைக்கப்பட்டவர்கள். உலகப் பொதுக்கல்வி கற்கவே 6 வயதிற்குத் தான் வருவார்கள். ஆனால் மார்க்கக் கல்வியை கற்க 3 வயதில் அனுப்பப்படுகின்றனர். இது தொடர்ச்சியாக நடக்கும்.

அப்படிப்பட்ட தலைமுறைகளிலிருந்து வந்தவர்கள்தான், கடவுளே கூடாது, மதமே கூடாது என்ற பெரியாரையும் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் என்றால் இது ஒரு மிகப் பெரிய தாக்கம், மாற்றம். இது ஏதோ இன்றைக்கு நடந்தது என எண்ண வேண்டாம். ஒரு நூறு ஆண்டு களுக்கும் மேலாக இப்படி அடையாளப்படுத்தப்பட் டிருக்கிறார்கள் .

காயிதே மில்லத் அவர்கள் இசுலாமியர்களின் தலைவர். முஸ்லிம் அரசியலை வெளிப்படையாகக் கட்டமைத்தவர். முஸ்லிம் லீக் என்ற தேசிய கட்சியை நடத்தியவர். அவர், அவரது அரசியல் எல்லாமே இசுலாமியர்களுக்கானது. அவர் தீவிர மத, கடவுள் பற்றாளர். அவர் ஒரு அரசியலை முன்னெடுத்துக் கொடுக்க, தமிழ்நாட்டில் யாரோடு இணைந்து அந்த அரசியலை செய்ய முடியும் என பார்க்கிறார். அன்றைக்கு எத்தனையோ அமைப்புகள் தமிழகத்தில் இருந்தன. திராவிட நாடு கோரிக்கை, இந்துக்களை, கடவுள்களை எதிர்க்கிறார் என்றும் பெரியார் போகிற இடமெல்லாம் பிரச்சனை வந்து கொண்டிருந்த நேரத்தில் பெரியாரோடு இணைந்த அரசியலைதான் காயிதேமில்லத் எடுத்தார். பெரியாரோடு கைகோர்த்துக் கொண்டு பயணித்தார்.

பெரியார் கடவுளை மறுத்தார். காயிதே மில்லத் கடவுளைப் போற்றினார். பெரியார் மதம் கூடாது என்றார். காயிதே மில்லத் மதம் வேண்டும் என்றார். ஏன் நேர் எதிர் முரண்பாடுகளுடன்தான் பயணம் செய்தனர். இருவரும் இணைய முடியாத கோட்பாடுகளைக் கொண்டவர்கள். ஆனால் சமூக நீதி என்கிற கோட்பாட்டில்தான் இவர்கள் இணைய முடிந்தது.

முஸ்லிம்கள் பாதிக்கப்படுகின்றார்கள், ஆதிக்க சக்திகளால் நசுக்கப்படுகின்றார்கள், மத ரீதியாக ஒடுக்கப்படுகின்றார்கள் என்ற சூழ்நிலையில் பெரியார் இயக்கம் உருவாக்கி வைத்திருந்த விதை, அந்த கட்டுமானம் இன்றைக்கு வரைக்கும் சிதையாமல் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்ற அடையாளம்தான் இந்த மாநாடு. இது ஒரு வரலாற்று துவக்கம்.

இன்றைக்கு நான் இங்கு வந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் பீகார் தேர்தல் முடிவுகளை பார்த்து அது பற்றிய சிந்தனையோடுதான் இவ்வரங்கத்தினுள் நுழைந்தேன். 5 ஆண்டுக்கு ஒருமுறை வாக்களித்து இந்துத்துவத்திற்கு எதிராக ஒரு முடிவை ஒரு நிலைப்பாட்டை பீகார் போன்ற மாநிலங்கள் எடுக்கிறது. ஆனால் தமிழ்நாடு அப்படியல்ல ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டிருக்கின்றது. அதைத்தான் இந்த அரங்கம் இந்த மாநாடு நமக்கு உணர்த்துகின்றது.



இங்கே இந்துத்துவம் என்பது எந்த காலத்திலும் செல்லுபடியாகாது என்பதை தொடர்ந்து நிருபிக்கின்ற களமாக தமிழ்நாடு விளங்கி கொண்டிருக்கின்றது. இங்கே எனக்கு தரப்பட்ட தலைப்புக்கூட, பார்ப்பனீயம், இந்துத்துவம் இசுலாமியர்களின் பார்வையில் என்று தரப்பட்டிருக் கின்றது.

இந்துத்துவமும், பார்ப்பனீயமும் இந்தியாவில் ஒரு சமூகத்தையே எதிரியாக முன்னிறுத்துகின்றது. இசுலாமிய சமூகத்தை மிக வெளிப்படையாக புறந்தள்ள முயற்சிக் கின்றது. இந்து சாதிகளை ஒன்றிணைப்பது. இந்துக்கள் என்ற கட்டுமானத்தை ஏற்படுத்துவது, அதற்கு எதிராக முஸ்லிம்களை எதிரிகளாகக் காட்டுவது, முஸ்லிம்கள் வந்தேறிகள் இம்மண்ணிற்குத் தொடர்பில்லாதவர்கள் என்று சொல்லி அவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களை எதிர்ப்பதற்கு இந்துக்களை ஒருங்கிணைக்கும் ஒரு அரசியலை நெடுங்காலமாக இந்த மண்ணில் பார்பபனீயம், ஆர்எஸ்எஸ், பா.ஜ.க போன்ற சக்திகள் செய்து வருகின்றன.

இது பொதுமக்களிடம் - குறிப்பாக இந்திய பொது மக்களிடம் எடுபடக்கூடிய காட்சிகளை நாம் பார்த்து வருகின்றோம். அது பல்வேறு கட்டங்களில் தாக்கங்களை ஏற்படுத்தி வந்துகொண்டிருக்கின்றது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் எடுபடவில்லை என்றாலும் வட மாநிலங் களில் எடுபடுகின்ற சூழல்களை நாம் பார்க்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தல்கள் எல்லாம் அதற்கு சாட்சியாக இருக்கின்றது. அவர்கள் என்ன சொல்லி முஸ்லிம்களை தனிமைப்படுத்துகின்றார்கள். அவர்கள் வைக்கக்கூடிய குற்றச்சாட்டுகள் உண்மைதானா என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

முஸ்லிம்கள் மீது பார்ப்பனீயம் வைக்கக்கூடிய அவதூறுகள் உண்மைதானா அது எந்தளவிற்கு சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பார்ப்பனீயம் ஆர்.எஸ்.எஸ் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளில் சிறிதேனும் உண்மையிருக்கிறதா என அறிவு பூர்வமாக ஆராய்ந்து அணுக வேண்டிய முக்கிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். நாம்தான் உண்மையை வெளி உலகத்திற்கு எடுத்து சொல்ல முடியும் .

முஸ்லிம்கள் மீது வைக்கின்ற முதல் குற்றச்சாட்டில் முஸ்லிம்கள் மைய நீரோட்டத்தில் இணைய மாட்டார்கள். தம்முடைய மதம் தம்முடைய மதகோட்பாடு என்றுதான் செல்வார்கள். மொழியா, மதமா என்று கேட்டால் மதம்தான் பெரிது என்பார்கள். நாடா, மதமா என்று கேட்டால் மதம்தான் பெரிது என்பார்கள். நாட்டிற்கும் மொழிக்கும் விசுவாசமாக இருக்க மாட்டார்கள் இது ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன கும்பல்கள் முஸ்லிம்கள் மீது வைக்கின்ற மிகப் பெரிய குற்றச்சாட்டாகும். இது உண்மையா என்பதை ஒவ்வொரு இந்திய குடிமகன்களும், தமிழ்க் குடிமகன்களும் ஆய்வு பூர்வமாக சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். முஸ்லிம்கள் மதமாகத்தான் ஒருங்கிணைவார்கள் என்று பார்த்தால் அது உண்மையல்ல.

இந்தியாவில் முஸ்லிம் லீக் தலைவர்கள் என யாரை சொல்கின்றோம் என்றால் காயிதே மில்லத்தை தான் சொல்கின்றோம். தமிழகத்தில் காயிதே மில்லத்திற்கு முன்னதாக ஜமால் முகமது சாகிப் போன்றவர்கள்தான் இந்தியாவில் முஸ்லிம் லீக் என்று அடையாளப்படுத்தி யிருக்கின்றோம்.

இவர்களில் எடுத்த எடுப்பிலேயே முஸ்லிம் அரசியலுக்கான, நலனுக்காக உருவாகி வந்தவர்களா என்றால் இல்லை. ஜின்னாவிற்கு இது பொருந்தாது. ஜமால் முகமதுவிற்கு இது பொருந்தாது. காயிதே மில்லத்திற்கு இது பொருந்தாது. இவர்களெல்லாம் எங்கிருந்த தலைவர்கள் என்று பார்த்தால் காங்கிரஸில் இருந்த தலைவர்கள்.

பெரியாரைபோல் காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னோடிகள். பெரியார் எப்படி காங்கிரஸ் ஒரு ஆதிக்க ஜாதிகளின் கூடாரம் என்று சொல்லி வெளியேறினாரோ அதுபோல வெளியேறியவர்கள்தான் ஜின்னா, ஜமால்முகமது, காயிதே மில்லத் போன்ற தலைவர்கள். எனவே மைய நீரோட்டத்தை விலக்கிவிட்டு நாங்கள் இப்படிதான் இருப்போம் என அறிவித்துவிட்டு வெளியே சென்றவர்கள் அல்ல இவர்கள். மைய நீரோட்டத்தில் இணைந்து பணியாற்ற விரும்பினாலும் மைய நீரோட்டம் அவர்களை விலக்கி வைத்தது. அதுதான் உண்மை. முஸ்லிம்கள் தானாக விலகி நிற்கவில்லை. தங்களுக் கென்று தனிகட்சி என்று அடையாளப்படுத்தியதில்லை. தங்கள் தலைமையில்தான் இம்மக்கள் திரளவேண்டும் என்று எந்த காலத்திலும் சொல்லியதில்லை. ஆனால் அப்படி அவர்களை சொல்ல வைத்தது பார்ப்பனீயம்.

**மத அடையாளமற்ற ஜின்னா**

ஜின்னா எப்படிபட்ட தலைவர் அவர் என்றைக்காவது தன்னுடைய மத அடையாளத்தை வெளிப்படுத்தி யிருக்கிறாரா ? அவர் தாடி வைத்துக் கொள்ள மாட்டார்; தொப்பி அணிய மாட்டார்; இஸ்லாமிய மத சடங்குகளை பின்பற்றியதில்லை; மாறாக தன்னை மேல்நாட்டு கலாச் சாரத்தில் ஈடுபடுத்திகொண்டவர். கையில் எப்போதும் சுருட்டை பிடித்துகொண்டிருப்பார். முஸ்லிம் தலைவர்கள் என்பவர்கள் அப்படியிருக்க மாட்டார்கள். அவர்களின் பண்பாடு வேறு மாதிரியிருக்கும். ஜின்னா அதற்கு நேர்மாறாக இருந்தார். ஆனால் மதசார்பின்மைக்கு ஆதரவாளர். மதசார்பின்மை கருத்திற்கு ஆதரவாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். எங்கும் இஸ்லாமிய மதகோட்பாட்டை ஏற்றவர் அல்ல. எங்கேயும் தன்னை ஒரு மதத்திற்கு உரியவராக அடையாளப்படுத்தி யதும் இல்லை. சொல்லப்போனால் காங்கிரஸில் உள்ள மேலாதிக்கத்தை எதிர்த்து முஸ்லிம்கள் கட்சி தொடங்கிய போது அதை மிகக் கடுமையாக எதிர்த்தவர் ஜின்னா.

1906இல் முஸ்லிம் லீக் தொடங்கப்படுகின்றது. ஆனால் 1933இல்தான் ஜின்னா முஸ்லிம் லீக்கில் சேர்ந்தார். 30 ஆண்டுகாலமாக ஜின்னா, முஸ்லிம் லீக் அரசியலை மறுத்து வந்திருக்கின்றார். முஸ்லிம்கள் தனித்து இயங்கக் கூடாது; அவர்கள் மைய நீரோட்டத்திற்குதான் வர வேண்டும் என்றும், முஸ்லிம்கள் தனித்த அடையாளத் தோடு இயங்கக்கூடாது எனவும் போராடியவர் ஜின்னா. அப்படிப்பட்ட ஜின்னாதான் பின்னாளில் முஸ்லிம் லீக் தலைவரானார். முஸ்லிம்களுக்கு ஒரு நாடு வேண்டும் எனவும் கேட்டார். முஸ்லிம் லீக் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் கழித்து அதில் இணைந்த ஜின்னா தனி நாடு கேட்டதற்கான காரணம் அவர் அல்ல, அப்படிப்பட்ட சிந்தனையும் கொண்டவரல்ல, அவரை முஸ்லிம்களுக்கு தனிநாடு தேவை என கேட்க வைத்தது எது. முஸ்லிம்கள் மைய நீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்டார்கள். ஜின்னாவும் விலக்கி துரத்தப்பட்டார். இதை செய்தது இந்துத்துவ பார்ப்பனீயம் என்கிற சூழ்ச்சி; இந்து தேசிய அரசியல்.

அடுத்து தமிழ்நாட்டு அரசியல் என்னவென்று பார்க்க வேண்டும். ஜமால் முகமது சாகிப் என்கிற ஒரு தேசியவாதி. திருச்சி ஜமால்முகமது கல்லூரியை நிறுவியவர். தென்னகத்தில் மிகப்பெரிய தோல்ஏற்றுமதி செய்கின்ற நிறுவனத்தை நிறுவியவர். செல்வாக்கு மிகுந்த மிகப்பெரிய செல்வ செழிப்புடன் இருந்தவர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த தேசியவாதி. இன்றைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் ஒரு முஸ்லிம் தலைவராக வரமுடியுமா என நீங்களே கற்பனை செய்துகொள்ளுங்கள். 1930 ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தலைமையேற்று நடத்தியவர் ஒரு முஸ்லிம். ஆனால் 1906ல் தொடங்கப்பட்ட முஸ்லிம் கட்சி 1937இல் தான் தமிழ்நாட்டில் அவ்வியக்கம் தொடங்கப்படுகின்றது. அதை யார் தொடங்குகின்றார் என்று பார்த்தால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்த ஜமால்முகமது சாகிப் அவர்கள்தான் தொடங்கினார். அதற்கு காரணம் அப்போது சென்னை மாகாண கவுன்சிலில் சட்ட மன்ற உறுப்பினர் பதவிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்த ஜமால்முகமது போட்டியிடுகின்றார். அப்போது ஒரு இந்திய விடுதலைக்காக காந்தி நன்கொடை திரட்ட தமிழகத்திற்கு வந்தபோது இங்கு எந்த தேசியவாதியும் நிதிகொடுக்க முன்வரவில்லை. ஜமால்முகமது சாகிப் அவர்கள்தான் தொகை நிரப்பப்படாத ஒரு காசோலையை காந்தியிடம் கொடுத்து, ‘உங்களுக்கு எவ்வளவு தேவையோ அதை காசோலையில் எழுதிக்கொள்ளுங்கள்’ என்று கொடுத்தார். காந்தி அதிர்ந்து போனார். அந்த காசோலை யில் காந்தி ரூ. ஒரு லட்சத்தை நிரப்பிக்கொண்டார். 1930 காலகட்டத்தில் இந்திய விடுதலைக்காக ஒரு லட்சம் ரூபாய் நிதி கொடுத்தவர் ஜமால்முகமது சாகிப். அந்தளவிற்கு தேசியத்தின் மீது ஈடுபாடுகொண்டவர். தன்மக்களையும்

(3ஆம் பக்கம்)

## கல்பாத்தி : அன்றும் இன்றும்!

இன்றைய கேரள மாநிலத்திலுள்ள பாலக்காடு, மொழி வழி மாநிலப் பிரிவினைக்கு முன்பு சென்னை மாகாணத்தின் ஒரு பகுதி. பாலக்காட்டுக்கு அருகே உள்ள கல்பாத்தி, பார்ப்பன வைதீகத் திமிரை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. கல்பாத்தி, 'அக்ரகாரங்களில்' குடியிருந்த தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள், ஈழவர்கள் நடக்கவும், அவர்கள் 'தேர் ரதம்' வருவதற்கும் தடை விதித்திருந்தனர். இந்தத் தடை அரசாங்கத்தின் தடையாகவே இருந்தது என்பது இதில் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இந்தத் தடையைக் கண்டித்து காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான வரதராஜுலு நாயுடு - அவர் ஆசிரியராக இருந்த 'தமிழ்நாடு' நாளேட்டில் தலையங்கம் தீட்டினார். அப்போது சென்னை மாகாணத்தை நிர்வாகம் செய்த பிரிட்டிஷ் ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்த சர். சி.பி. இராமசாமி அய்யர், இந்தத் தடையை நியாயப்படுத்தினார்.

தீண்டப்படாத சமூகத்தினரான ஈழவர்களும் அவர்களின் கோயில் தேரும் அக்ரகாரத்தில் வந்தால் கலவரம் வரும் என்றும், அதைத் தடுப்பதற்காகவே தடை போட்டுள்ளதாகவும் கூறினார். இதை எதிர்த்து அன்றைய சென்னை சட்டமன்றத்தில் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கத்துடன் தோழமை கொண்டிருந்த தாழ்த்தப்பட்டப் பிரிவைச் சார்ந்த ஆர். வீரய்யன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். (இவர் நியமன உறுப்பினர்) அந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த (சுயராஜ்ய கட்சி) நரசிம்மச்சார்லு என்ற பார்ப்பனர் கடுமையாக எதிர்த்தார். "இன்று வீதிகளில் நடக்க உரிமை கொடுத்தால் நாளை கோயிலுக்குள் நுழைய உரிமை கேட்பார்கள்; பிறகு கலப்பு மணம் வேண்டும் என்பார்கள்; இதனால் கலவரம்தான் ஏற்படும்" என்று பச்சையாக பார்ப்பன நஞ்சைக் கக்கினார். வீரய்யனுக்கு ஆதரவாக பெரியாரின் சுயமரியாதை இயக்கம் களமிறங்கியது. 'குடிஅரசு' பத்திரிகை கண்டித்து எழுதியது.

பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறிய திரு.வி.க. தலைமையில் நடந்த காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டிலும் இது எதிரொலித்தது. கல்பாத்தி பார்ப்பனர்களின் தீண்டாமை வெறிக்கு எதிராக மாநாட்டில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்,



# Palakkad's vanishing agraharams

TIMES NEWS NETWORK

Palakkad: Once the agraharams of Kalpathy, New Kalpathy and Chathapuram on the banks of Kalpathy river had only Tamil Brahmins and their traditional tiled houses.

The march of time has taken its toll on tradition that came to life every morning with the chanting of Vedas, bhajans, and carnatic music. The peaceful, pollution-free and tidy agraharams are fast vanishing from the landscape of Palakkad.

Of the 96 agraharams, 18 within the ...

OLD-WORLD CHARM: The land reforms of the 1960s struck at the very root of the revenue of agraharams

the agraharams that should be preserved." But the lifestyle of the older generation is tiring for the new generations and this has had its effect on tradition and lifestyle.

According to a research paper on agraharams titled 'A peep into the origin of Tamil Brahmin agraharams and glimpses of their rise and fall in Palakkad district' by Nochur Ganesha Sharma, "The land reforms of the 1960s struck at the very root of the revenue of agraharams. Tamil Brahmin youths migrated to cities to earn a living. Their subsequent generations have made their mark all over the globe in vari-

பெரியாரின் நண்பர் இராமச்சந்திர நாயுடு. தீர்மானத்தை பெரியாரும் ம. சிங்கார வேலரும் வழி மொழிந்தனர். அப்போதும் எம்.கே. ஆச்சார்யா என்ற பார்ப்பனர் எதிர்த்தார். "தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கூட்டத்தில் பேசுவது ஒழுங்கு ஆகாது. சனாதன தர்மத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இத்தீர்மானத்தை ஆதரிக்கக் கூடாது" என்று பேசினார்.

தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகால எதிர்ப்புகளுக்குப் பிறகு 1927இல் அரசு பணிந்தது. திருநெல்வேலியில் நடந்த மாவட்ட சுயமரியாதை மாநாட்டில் (28.11.1927) இது குறித்து பெரியாரே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். அந்தத் தீர்மானம் இப்படி கூறியது. "கல்பாத்தியில் பார்ப்பன வீதியில் வெகுகாலமாய் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக் கூடாது என்று பார்ப்பனர்கள் செய்து வந்த கொடுமை நீங்கி எல்லா மக்களும் அவ்வீதி வழி நடக்கத் தகுந்த வெற்றி கிடைத்தமைக்கு இம்மாநாடு சந்தோஷத்தை அறிவிக்கிறதுடன், அதுவே நமது சுயமரியாதை இயக்கத்துக்கு ஒரு வெற்றிக் குறியெனக் கருதுகிறது" என்று அத்தீர்மானம் கூறியது.

இந்த வரலாற்றுத் தகவல்களை இப்போது நினைவுகூர்வதற்குக் காரணம் உண்டு. "கல்பாத்தி அக்ரகாரங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன" என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (நவ.16, 2015) ஒரு செய்திக் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. கல்பாத்தி ஆற்றுக்கரையில் இருந்த 96 அக்கிரகாரங்களில் வேதங்களும், பஜனைகளும், கர்நாடக இசையும் கேட்டு வந்தன என்றும், அமைதியாக சுற்றுச்சூழல் பாதிப்புகளே இல்லாத அந்த அக்ரகாரத்தின் வீடுகள், பாழடைந்து கிடக்கின்றன" என்றும் கவலையுடன் கண்ணீர் வடிக்கிறது அந்த செய்தி.

கேரள ஆட்சி, இந்த கல்பாத்தி அக்ரகாரப் பகுதியை, 'முதன்மையான பழமைச் சிறப்புள்ள கிராமம்' என்று சில ஆண்டுகள் முன் அறிவித்ததாம். "அழகான சமூக வாழ்க்கை நிறைந்த இந்த அக்ரகாரத்தின் பழமையை பாதுகாக்க வேண்டும்" என்று, 'கட்டிடக்கலை - சுற்றுச்சூழல் - குடியிருப்பு பாதுகாப்பு மய்யம்' என்ற கேரள அரசு நிறுவனம் சுட்டிக்காட்டியிருப்பதை கேரள 'பிராமண சபா' தலைவர் கரிப்புழா ராமன் என்ற பார்ப்பனர் எடுத்துக்காட்டி, அக்ரகாரத்தின் பழம் பெருமையை பாதுகாக்கவில்லை என்று கேரள அரசை கடுமையாக சாடியிருக்கிறார்.

1960ஆம் ஆண்டு கேரளாவில் கொண்டு வரப்பட்ட நில சீர்திருத்தச் சட்டம், இந்த அக்ரகாரத்து பார்ப்பனர்களுக்கு வந்து கொண்டிருந்த வருமானத்தை தடுத்து விட்டதாம். நோச்சூர் கணேஷ் சர்மா எனும் பார்ப்பனர், இந்த அக்ரகாரங்கள் பற்றி ஒரு ஆராய்ச்சியே நடத்தி ஆய்வறிக்கை தயாரித்திருக்கிறாராம். இப்போதும் வெளிநாடுகளில் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அடுத்தடுத்த பார்ப்பன தலைமுறையினர், ஒவ்வொரு ஆண்டும் கல்பாத்திக்கு வந்து கோயில் விழாக்களில் பங்கேற்றுவிட்டு திரும்புகிறார்களாம். உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் பார்ப்பனர்கள் தங்கள் வர்ணாஸ்ரமத் திமிரையும் கூடவே தூக்கிக் கொண்டு போகிறார்கள்.

தீண்டாமை வெறியை காலம் காலமாக பின்பற்றிய 'அக்ரகாரங்களை' இப்போது பெருமைக்குரிய நினைவுச் சின்னங்களாக பார்ப்பனர்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் பார்ப்பனர்கள் மாறிவிட்டார்கள் என்பதெல்லாம் வடிகட்டிய பொய் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

- இரா

# இஸ்லாமியர்களை திட்டமிட்டு தனிமைப்படுத்தியது பார்ப்பனியம்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய விடுதலைக்காக உழைக்க வைத்த ஒரு சிறந்த தேசியவாதி. அப்படிப்பட்டவர் சென்னை மாகாண சட்டசபை தேர்தலில் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்டபோது அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா ? ஆனால் அப்படி நடக்கவில்லை. ஏனெனில் காங்கிரஸில் இருந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரி இவரை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெறுகின்றார். ஜமால் முகமது சாகிப் தோற்றார். உயர்ஜாதி ஆதிக்கம் வெல்கிறது. உண்மையான தேசியம் தோற்றுப் போகின்றது. காங்கிரஸின் இத்தகைய போலித்தனத்தால் மிகுந்த மன வேதனையடைந்த ஜமால்முகமது காங்கிரஸை விட்டு வெளியே வந்தார். காங்கிரஸில் உள்ளவர்கள் ஏமாற்றுக்காரர்கள் நயவஞ்சக எண்ணம் கொண்டவர்கள், போலிமுகங்களை கொண்டவர்கள் என்பதை உணர்ந்து வெளியே வந்தார். பெரியார் காங்கிரஸை விட்டு **1925**இல் வெளியே வந்தார். அதன்பிறகு காங்கிரஸின் போலித்தனத்தை **10** ஆண்டுகள் கழித்துதான் உணர்ந்தார் ஜமால் முகமது சாகிப். பெரியார் மிகப் பெரிய தீர்க்கதரிசி, ஆனால் ஜமால் முகமதுவிற்கோ **10** ஆண்டுகளுக்கு பிறகு ஞானம் வந்து வெளியேறினார்.

ஆனால் ஒரு தேசிய நீரோட்டத்தில் இணைந்த ஒரு சமூகத்தை விரட்டியடித்தது பார்ப்பனீயம். துரத்தியடித்ததும் பார்ப்பனீயம் தான். அதுவரையிலும் முஸ்லிம்கள் என்று தனியாக அடையாளப்படுத்தப்படாமல் இருந்த ஒரு சமூகம், அதன்பின்னர் முஸ்லிம்கள் என அடையாளப்படுத்தப்பட்டனர்.

முஸ்லிம்கள் மைய நீரோட்டத்திலிருந்து விலகி நிற்பதையே குணமாக கொண்டவர்கள் இல்லை. மதமா நாடா எனக்கேட்டால் நாடுதான் பெரிது என கொடி பிடித்தவர்கள், முஸ்லிம்கள் தலைமையில் சேரவேண்டுமா அல்லது பொது சமூகத்தின் தலைமையில் சேர வேண்டுமா என கேட்டபோது, பொது சமூகத்தின் தலைமையில்தான் சேரவேண்டும் என முடிவு எடுத்தவர்கள் என்பதை வரலாறு சொல்கின்றது.

அடுத்து காயிதேமில்லத் **1896**ல் பிறந்தார். அவர் **10** வயதில் இருந்தபோதுதான் தேசிய அளவில் முஸ்லிம்லீக் தொடங்கப்படுகின்றது. அவர் இளைஞராக கல்லூரியில் பிஏ படித்தார். அப்போதுகூட முஸ்லிம் லீக்கில் சேரவில்லை; மாறாக காங்கிரஸில் சேர்ந்தார். அவர் பிஏ வகுப்பு படிக்கும் போது கடைசி தேர்வு எழுதும் நாளில் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கினார். அந்த சூழலில் காயிதே மில்லத் தனது கடைசி தேர்வை புறக்கணித்து விட்டு காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்வதற்காக கல்லூரியைவிட்டு வெளியேறுகின்றார். கல்வியா ? தேசமா ? என கேட்டபோது தேசமே பெரிது என தனது கல்வியை துறந்த தேசியவாதி காயிதே மில்லத். காங்கிரஸில் இணைந்து திருநெல்வேலியில் ராஜாஜியை வைத்து காங்கிரஸ் மாநாட்டை நடத்தி தன்னை ஒரு காங்கிரஸ் தேசிய வாதியாக அடையாளப்படுத்தி கொண்டவர் காயிதே மில்லத்.

ஜமால் முகமதுவிற்கு காங்கிரஸில் ஏற்படுத்தப்பட்ட துரோகம் காயிதே மில்லத்தையும் வெகுவாக பாதிக்க வைத்தது. அவரும் ஜமால் முகமதுவை பின்பற்றி காங்கிரஸைவிட்டு விலகி முஸ்லிம் லீக்கில் இணைகிறார். இது தான் இந்திய முஸ்லீம்களின் அரசியலில் ஒரு வரி, அதற்கு பிறகுதான் எல்லாமே மாறியது. இதற்குப் பிறகாவது, முஸ்லிம்கள் அவர்களது தலைமையில் திரண்டார்களா ? காயிதே மில்லத் தலைமையில் அணி திரண்டார்களா ? என்றால் இல்லை. இன்றுகூட காங்கிரசுக்கு ஓட்டுப் போடும் முஸ்லிம்களை மனிதநேய மக்கள் கட்சிக்கோ, எஸ்டிபிஐ கட்சிக்கோ ஓட்டுப்போட கொண்டு வரமுடியவில்லை. மேலப்பாளையம், பாளையங்கோட்டை பகுதியில் ஏறத்தாழ ஒரு இலட்சம் முஸ்லிம் வாக்குகள் உள்ளன. நிறைய தொகுதிகளில் இவர்கள் வாக்குகள் தான் வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்கிறது. தமிழ்நாட்டில் முஸ்லிம் லீக் கட்சி வந்து ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆனால் முஸ்லிம்கள் அடத்தியாக உள்ள தொகுதிகளில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் தனித்து நின்று வெற்றி பெற முடியவில்லை ஏனென்றால் மதத்தைப் புறம்தள்ளி பொது நீரோட்டத்தில் கலந்தவர்கள் முஸ்லிம்கள். எனவே அவர்களைப் பார்த்து மதவாதிகள் என்று சொல்வது, அபாண்டமானது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதுபோல் காஷ்மீரை நாம் எடுத்துக் கொள்வோம், அடர்த்தியாக முஸ்லிம்கள் வாழக்கூடிய ஒரு மாநிலம் காஷ்மீர். மாநிலம் என்பதை விட ஒரு நாடு என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். அங்கு முன்பு ஆட்சி செய்தது யார் ? பிரிட்டிஷ் ஆட்சி புரிந்த நாட்டின் பகுதியை பிரிட்டிஷார்தானே ஆட்சி செய்ய வேண்டும். ஆனால் ஆட்சி செய்தவர்கள் இந்து மன்னர்கள். அங்கு சமஸ்கிருதம் தான் ஆட்சி மொழியாக இருந்தது.

இந்தியா பாகிஸ்தான் இரண்டாக பிளவு பட்டது. அது மதத்தின் அடிப்படையில்தான் பிரிந்தது என சொல்லப்பட்டது. மதத்தின் அடிப்படையில் பிரிந்தது என்றால் காஷ்மீர் பாகிஸ்தானுக்குத்தானே போயிருக்க வேண்டும் ஆனால் போகவில்லை. மதத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் முடிவெடுக்கக் கூடியவர்கள் அல்ல. முஸ்லிம்களுக்கு என்று பாகிஸ்தான் ஒருநாடாக வந்துவிட்டது. எனவே இந்தியாவில் நமக்குப் பாதுகாப்பு இல்லை என்று கருதி இந்திய முஸ்லிம்கள் அனைவரும் பாகிஸ்தானுக்கு தானே சென்றிருக்க வேண்டும் ? அவ்வாறு போகவில்லையே என்ன காரணம் ? அப்போது காயிதே மில்லத் ஒரு தீர்க்கமான முடிவு எடுத்தார். அதுதான் உண்மை.

அப்பிரிவினையில் முஸ்லிம் லீக் கட்சியும் இரண்டாக பிளவுபடுகிறது. கட்சியின் பாகப் பிரிவினைக்காக காயிதே மில்லத் பாகிஸ்தான் போகிறார். அப்போது பாகிஸ்தான் பிரதமராக இருந்த லியாகத்அலிகான் அவர்கள் காயிதே மில்லத்தின் கைகளைப் பிடித்துக்கொண்டு நம் நாட்டையும் கட்சியையும் அவர்கள் பிரித்து விட்டனர். இருந்தாலும் இனி இந்திய முஸ்லிம்களுக்கு ஏதேனும் பிரச்சனை என்றால் என்னிடம் சொல்லுங்கள் நாங்கள் உங்களுக்காக பேசுகிறோம் என்று சொன்னார். உடனே காயிதேமில்லத் அதை மறுத்து என்ன சொன்னார் என்று தெரியுமா தோழர்களே, மிஸ்டர் லியாகத் அலிகான் இந்த சிந்தனையை இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் வேறு நாடு நாங்கள் வேறு நாடு இந்திய முஸ்லிம்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் அதைத் தீர்ப்பதற்கு எங்களுக்குத் தெரியும் உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள் என்று உறுதியாக மறுத்துக் கூறியவர் காயிதே மில்லத். அவர் பாகிஸ்தான் உருவானதை ஏற்கவில்லை பாகிஸ்தான் போவதற்கும் விரும்பவில்லை அதன் முதல் பிரதமரை எதிர்த்துப் பேசுகிறார். எனவே மதஅடிப்படையில் முடிவெடுக்கக்கூடிய சமூகம் அல்ல முஸ்லிம்கள். அதுபோல் அரசியல் அரங்கில் எந்த காலத்திலும் முடிவெடுக்கக் கூடியவர்கள் முஸ்லிம்கள் அல்ல என்பதே உண்மை.

மதஅடிப்படையில் முஸ்லிம்கள் முடிவெடுப்பவர்களாக இருந்தால் அதற்கு வட்டமேஜை மாநாடே சாட்சியாக இருக்கும். அம்பேத்கர் வட்டமேஜை மாநாட்டிற்குப் போகக்கூடாது தலித்களின் தலைவராக அங்கு போகக்கூடாது என்றும் இந்துக்களுக்களுக்கு ஒரு நாற்காலி முஸ்லிம்களுக்கு ஒரு நாற்காலி, மூன்றாவதாக ஒரு நாற்காலி போடகூடாது என்றும் ஆகாகானிற்கு காந்தி நிபந்தனை வைத்தார். ஆகாகானை பார்த்து நீங்கள் இந்து, முஸ்லிம் குறித்து எந்த நிபந்தனை வைத்தாலும் நான் பார்த்துக்கொள்கிறேன். ஆனால் அம்பேத்கரை மாநாட்டிற்குப் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்றார் காந்தி, ஆனால் ஆலம்கான் அதை மறுத்து எங்கள் கோரிக்கை தோற்றாலும் பரவாயில்லை அம்பேத்கர் போக வேண்டும் என்று ஆதரித்து முடிவெடுத்த சமூகம் தான் முஸ்லிம் சமூகம்.

எனவே வரலாற்றை பார்த்தோம் என்றால் முஸ்லிம்கள் அவர்கள் தலைமையில்தான் அணி திரளவேண்டும் என்று கூறாமல் பொதுத் தலைமையின் கீழ் திரளவேண்டும் என்று கூறினார்கள்.

(தொடரும்)

உரைத் தொகுப்பு: மன்னை இரா.காளிதாசு

DATE OF PUBLICATION 19.11.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ஈரோட்டைத் தொடர்ந்து சென்னையில் டிச. 1இல் "மக்களைப் பிளவுபடுத்தும் பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாடு"

## தோழர்களே, தயாராவீர்!



ஈரோட்டில் இந்து பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டை, ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், கடந்த நவம்பர் 8ஆம் தேதி வெற்றிகரமாக நடத்தி முடித்தது. தொடர்ச்சியாக சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் டிசம்பர் முதல் தேதி சென்னையில் 'மக்களைப் பிளவு படுத்தும் பார்ப்பன மதவாத எதிர்ப்பு' மாநாட்டை நடத்த திட்டமிட்டு, தோழர்கள் களப்பணிகளில் இறங்கியுள்ளனர். சென்னை மேற்கு மாம்பலத்திலுள்ள சந்திரசேகர் திருமண மண்டபத்தில் காலை 10 மணிக்கு மாநாடு தொடங்குகிறது. மாலை மண்டபத்துக்கு அருகே உள்ள முத்துரங்கன் சாலையில் திறந்தவெளி மாநாடு நடைபெறுகிறது. தந்தை பெரியார் தனது இறுதி பேருரையை நிகழ்த்திய இடமும் இதுவேயாகும்.

சம்பூகன் கலைக் குழுவின் எழுச்சி இசை நிகழ்ச்சியோடு காலை 10 மணிக்கு மாநாடு தொடங்குகிறது. பார்ப்பன மதவெறி கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்ட தபோல்கர்-பன்சாய்-கல்புர்கி நினைவரங்கில், 'பார்ப்பனியம் பதித்த இரத்தச் சுவடுகள்' என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில், 'பெண்ணியத்தில்' என்ற தலைப்பில் பேராசிரியர் சரசுவதி, 'புராணங்களில்' என்ற தலைப்பில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த சீனி. விடுதலை அரசு, 'அரசியலில்' என்ற தலைப்பில் தோழர் சுந்தரவள்ளி, 'வரலாற்றில்' என்ற தலைப்பில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சித் தோழர் வாலாஜா வல்லவன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நெறிப்படுத்துகிறார்.

மதிய இடைவேளைக்குப் பிறகு 2 மணிக்கு சென்னை கலைக்குழு வழங்கும் 'இடம்' நாடகம் நடைபெறுகிறது. 2.30 மணிக்கு பட்டிமன்றம். பட்டிமன்றத் தலைப்பு 'மக்களை பிளவுபடுத்துவதில் மிஞ்சி நிற்பது மதவாதமா? ஜாதிய வாதமா?' நடுவர் - கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன். 'மதவாதமே' என்ற அணியில் வழக்கறிஞர் திருமூர்த்தி, ஆசிரியர் சிவகாமி ஆகியோரும், 'ஜாதியவாதமே' என்ற தலைப்பில் திருச்சி புதியவன், கு. அன்பு தனசேகரன் ஆகியோரும் வாதிடுகிறார்கள்.

தொடர்ந்து - திறந்தவெளி மாநாடு மாலை 6 மணியளவில், தியாகராயர் நகர் முத்துரங்கன் சாலையில் இளவரசன்-கோகுல்ராஜ் நினைவு மேடையில் மக்கள் மன்றம் வழங்கும் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்குகிறது. தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன் தலைமையில் பேராசிரியர் ஜவஹருல்லா (மனித நேய மக்கள் கட்சி), வழக்கறிஞர் அருள்மொழி (திராவிடர் கழகம்), அதியமான் (ஆதி தமிழர் பேரவை), பேராசிரியர் சுப. வீரபாண்டியன் (திராவிட இயக்க தமிழர் பேரவை) ஆகியோர் உரையாற்றுகிறார்கள். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுப் பேருரையாற்றுகிறார்.

மாநாட்டின் நோக்கத்தை விளக்கி சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் விடுத்துள்ள அறிக்கை:

'திராவிடர் விடுதலைக் கழகம்' ஒரு பெரியார் இயக்கம். நாங்கள் இந்து பார்ப்பனிய அடிமைப் பண்பாட்டை மறுத்து, சுயமரியாதை நெறியை வாழ்வியலாக ஏற்றுக் கொண்டவர்கள். பார்ப்பன மதமே இந்துமதம் என்ற உண்மையை மக்களிடம் பரப்பி வருகிறவர்கள்! ஆனால்... பார்ப்பனர்களால் இந்துக்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வெகு மக்களின் உரிமைகளுக்கும் சுயமரியாதைக்கும் களத்தில் போராடுகிறவர்கள்;

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட அனைவருமே 'இந்துக்கள்'தான் என்று உரிமை கோரும் பார்ப்பனர்கள்தான் காலம் காலமாக இந்த மக்களுக்கான உரிமைகளை மறுப்பவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். இப்போதும் இவர்களுக்கான இடஒதுக்கீடு உரிமைகளை ஒழிக்கத் துடிப்பவர்கள் பார்ப்பனர்கள்தான்.

(இந்து) ஒடுக்கப்பட்ட மக்களின் மாட்டிறைச்சி உணவுக்கு தடை போடுவதும் இவர்கள்தான். 'இந்து' சமூகத்துக்குள் - அன்றாடம் நடக்கும் ஜாதி வெறி கொலைகளைக் கவுரவக் கொலை என்று பெருமை பேசுவதும் இவர்கள்தான். அதிகாரங்களைக் கைப்பற்றி - அரசு நிறுவனங்களை பார்ப்பன மயமாக்கி வருவதும் இவர்கள்தான்! வேத-சமஸ்கிருத சடங்குகளை - இந்த மொழியே தெரியாத (இந்து) மக்களிடம் திணித்துக் கொண்டிருப்பதும் இவர்கள்தான்!

இவர்கள் இந்துக்களின் காவலர்களாம்! இந்த மக்களின் உரிமைகளுக்காக போராடும் பெரியார் இயக்கம் இந்துக்களின் எதிரியாம்! 'இந்து' சமூகத்தில் ஜாதியமைப்பையும், ஜாதிய வன்முறைகளை யும் நியாயப்படுத்தும் பாசிச தத்துவமே பார்ப்பனியம். அவர்களே இந்து வெகு மக்களின் உண்மையான எதிரிகள் என்பதை உணர்த்தவே இந்த மாநாடு.

தங்களின் மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள - நயவஞ்சகமாக பெரியார் இயக்கங்களையும் - சிறுபான்மையினரையும் - இடதுசாரி இயக்கங்களையும் எதிரிகளாக 'மடைமாற்றம்' செய்யும் பார்ப்பன சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தவே இம் மாநாடு.

"இந்து ஒற்றுமை" என்ற பார்ப்பன சூழ்ச்சி வலைக்குள் ஒடுக்கப்பட்ட மக்கள் விட்டில் பூச்சிகளாக விழுந்து விடக்கூடாது என்பதை எச்சரிக்கவே இந்த மாநாடு! அனைத்து பெரியார் இயக்கங்களும் இணைந்து நிற்கும் மாநாடு! கருத்துக்களை செவிமடுக்க சூழ்ந்து நிற்கும் ஆபத்துக்களை முறியடிக்க - உரத்து சிந்திப்போம்! வாரீர்!

### அடுத்த மாநாடு சேலத்தில்

**சென்னையைத் தொடர்ந்து சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாட்டை டிசம்பர் 19ஆம் தேதி சேலத்தில் நடத்திட முடிவு செய்துள்ளது. தோழர்கள் களப்பணிகளில் இறங்கி விட்டனர்.**

## மதவெறிக்கு எதிராக வேலூரில் கழகம் ஆர்ப்பாட்டம்



திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 06.11.2015 வெள்ளிகிழமை காலை வேலூர் தலைமை தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஜாதி ஆணவ படுகொலைகளை தடுத்து நிறுத்தக் கோரியும், மாட்டிறைச்சிக்கு எதிரான இந்துத்துவ மதவாத சக்திகளை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகப் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். மாவட்ட அமைப்பாளர் ப.திலீபன் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் சிவா, கௌதமன், மன்னார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக தலைமைக் குழு உறுப்பினர் விழுப்புரம் அய்யனார், விடுதலை சிறுத்தைகள் மாநகர் மாவட்ட செயலாளர் சந்திரகுமார், எஸ்.டி.பி.அய். மாவட்ட தலைவர் முகமது ஆசாத், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் செந்தில், தமிழ்நாடு அம்பேத்கர் மன்றம் மேயர் சுந்தர், திராவிடர் இயக்க தமிழர் பேரவை சிங்கராயர், மா.பெ.பொ.க.யின் குப்பன், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், கழக வழக்கறிஞர் துரை.அருண் ஆகியோர் கண்டன உரையாற்றினர். திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்ட தலைவர் இயேசு உள்ளிட்ட கழக தோழர்கள் தோழமை அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் 150 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

### நம்பியூரில் டிச.2இல் ஜாதி ஒழிப்புப் பரப்புரை பயண நிறைவு விழா பொதுக் கூட்டம்

"எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்; இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்" பரப்புரைப் பயண நிறைவு பொதுக் கூட்டம் 2.12.2015 மாலை 6 மணிக்கு நம்பியூர் பேருந்து நிலையம் அருகே நடைபெறுகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றுகிறார்கள். மேட்டூர் டி.கே.ஆர். பகுத்தறிவு இசைக்குழு கலை நிகழ்ச்சியும் நடக்கிறது. நம்பியூர் ஒன்றிய கழகம் ஏற்பாடு செய்து வருகிறது என்று வெளியீட்டுச் செயலாளர் கோபி. இளங்கோ தெரிவித்துள்ளார்.

## "பெரியாரும் தமிழ்த் தேசியமும்"




பெரியாரின் 136ஆவது பிறந்த நாளையொட்டி 'இளந்தமிழகம்' இயக்கம், 'பெரியாரும் தமிழ்த் தேசியமும்' என்ற தலைப்பில் சென்னையில் நடத்திய கருத்தரங்கில் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பு 'பெரியாரும் தமிழ்த் தேசியமும்' என்ற தலைப்பில் நூலாக வெளி வந்திருக்கிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழேந்தி, தியாகு, செந்தில் ஆகியோர் கருத்தாழமிக்க உரைகளும், அவையில் எழுப்பிய வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன. பெரியார் மீது வைக்கப்படும் விமர்சனங்களுக்கு தெளிவான பதில்களை முன் வைக்கும் கருத்துப் பெட்டகமாக நூல் வெளி வந்திருக்கிறது. நூலின் நோக்கத்தை இளந்தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் கீழ்க்கண்டவாறு சரியாகவே விளக்குகிறார்.


"தமிழ்த் தேசியம் என்பது சாதி நாயகத்திற்கு எதிராக சனநாயகத்தை முன்னிறுத்துவதாகும். சாதிய ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரானப் போராட்டமே நேர்வகைத் தமிழ்த் தேசியம் ஆகும். பெரியாரின் வாழ்வின் சாரமாகப் பெறப்படுவது சாதி ஒழிப்பு. எனவே, பெரியாரும் தமிழ்த் தேசியமும் ஒன்றுபடும் புள்ளி சாதி ஒழிப்பு அரசியலாகும். தமிழ்த் தேசிய அரசியல் ஆற்றல்களும் பெரியாரிய அரசியல் ஆற்றல்களும் ஒன்றுபடுவதற்கான புள்ளியை அடையாளம் காட்டும் பணியை இந்நூலில் உள்ள கட்டுரைகள் மேற்கொள்ளும் என்று நாம் உறுதிபட நம்புகிறோம்."

பெரியாரியத் தோழர்கள் ஒவ்வொரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

வெளியீடு : 'சிற்றுளி' - நூல் விலை : ரூ.50 - தொடர்புக்கு : 9941906390

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 19th November 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | நவம்பர் 26, 2015 | புரட்சி 14 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

- அரைகுறை ஆடைகளுடன் வரும் பக்தர்களை இந்து கோயிலுக்குள் அனுமதிக்கக் கூடாது.
  **– மதுரை உயர்நீதிமன்றம் ஆணை**

  ஆனால், அர்ச்சகர்கள் மட்டும் மேலாடை இல்லாமலேயே வரலாம்! அதுல நீதிமன்றம் தலையிட முடியாது.

- கூடங்குளம் முதலாவது அணு உலையில் அடுத்த மாதம் மின் உற்பத்தி தொடங்க வாய்ப்பு.
  **– இயக்குனர் ஆர்.எஸ். சுந்தர்**

  அமைச்சர் நாராயணசாமி போயிட்டாரேன்னு கவலைப் பட வேண்டாம்; இதோ ஆர்.எஸ்.சுந்தர் வந்துட்டாருல்ல...

- பாரிசில் நடந்த தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்த அரியானாவில் வேதம் ஓதி ‘மகாயாகம்’. **– செய்தி**

  இனிமே சிரியாவுல நடக்குற தாக்குதலுக்கும் யாகம் நடத்து வீங்க போலிருக்கு.

- பீகார் தோல்வி: பா.ஜ.க.வை குறைகூறும் அதிருப்தியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.**– அமைச்சர் கட்காரி**

  தாராளமா எடுங்க... ஆனா அதிருப்தி தெரிவித்த பீகார் மக்களை ஒன்றும் செஞ்சுடா தீங்கய்யா.

- மாட்டிறைச்சி ஏற்றுமதி வர்த்தகம் செய்வோரில் 95 சதவீதம் பேர் இந்துக்கள்.
  **– முன்னாள் நீதிபதி சச்சார்**

  உள்நாட்டுல எவரும் மாட் டிறைச்சியை சாப்பிட்டுவிடக் கூடாதுங்குற நல்ல எண்ணம் தான்.

- மதத்தையும் பயங்கரவாதத்தை யும் தனியே பிரிக்க வேண்டும்; ஒன்றாக இணைக்கக் கூடாது.
  **– மோடி பேச்சு**

  அப்படீன்னா, பா.ஜ.க.வையும், ஆர்.எஸ்.எஸ்.சையும் பிரிச்சு வைக்கனும்னு சொல்றீங்க...

- மகாராஷ்டிரா பா.ஜ.க. ஆட்சி தலித், பழங்குடி குழந்தை களுக்கான கல்விச் சலுகைகளை நிறுத்த முடிவு.
  **– ‘இந்து’ ஏட்டின் செய்தி**

  கேட்டா, நாங்க அம்பேத்கரை மதிக்கிறோம்னு சொல்வாங்க...

- முதலமைச்சர் அம்மா உத்தரவால் சேலத்தில் நல்ல அளவு மழை பெய்துள்ளது.
  **– சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்**

  மழைய நிறுத்த, எப்ப உத்தரவு வரப் போகுது அய்யா? கொஞ்சம் கருணை காட்டுங்களேன்.

## சுழலும் வரலாற்றுச் சக்கரம்



மனிதனை மனிதன் அடிமை கொள்கிறான்; அழிக்க முயல்கிறான்; மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கிறான். அன்று தொட்டு இன்றுவரை மனிதனே மனிதனின் முதன்மையான எதிரியாக விளங்கி வருகிறான். ஒருவனது சுதந்திரத்தை இன்னொருவன் விழுங்கிவிட எத்தனிக்கும்போது, தர்மம் செத்து விடுகிறது; உலகில் அதர்மமும் அநீதியும் பிறக்கிறது. சாதி என்றும், வர்க்கம் என்றும், இனம் என்றும் பிளவுகள் எழுந்து மனிதரிடையே முரண்பாடு தோன்றுகிறது; மோதல்கள் வெடிக்கின்றன. இந்த உலகில் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி. ஏனெனில், சுதந்திர எழுச்சியின் உந்துதலால்தான் மனித வரலாற்றுச் சக்கரமும் சுழல்கிறது.

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும்விட எமது போர்க்குரல், இன்று உலக அரங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்தரப் போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களைவிட சாராம்சத்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது; ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது.

**(1997இல் மேதகு பிரபாகரன், மாவீரர் நாள் உரையிலிருந்து)**

# உலக நாடுகளில் மோடிக்கு நடக்கும் வரவேற்புகள் பின்னணியில் பார்ப்பன–பனியாக்கள்

வெளிநாடுகளுக்கு பறந்து கொண்டிருக்கிறார் மோடி. அவ்வப்போது இந்தியாவுக்கும் வந்து போகிறார். மோடி பறக்கும் நாடுகளில் எல்லாம் அங்கே வாழும் ‘இந்தியர்’கள் நடத்தும் விழாக்கள் மிகப் பெரிய அளவில் நடத்தப்படுகிறது. அமெரிக்காவின் மெய்டன் மைதான சதுக்கம், இலண்டன் வெம்பில்டன் அரங்கம் என்று நடக்கும் இந்த மாபெரும் வரவேற்பு விழாக்கள் திட்டமிடப் பட்டு நடத்தப்படுகின்றன. பெருமளவில் கூட்டம் திரட்டப்படுகிறது. இந்த வேலைகளை செய்வது எல்லாம் அந்நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற ‘இந்துத்துவ’ பார்ப்பன சக்திகள்தான். இலண்டனில் வெம்பில்டன் மைதானத்தில் 60,000 பேர் திரண்டதாக செய்திகள கூறுகின்றன. இதை முன்னின்று நடத்தியது ‘தேசிய இந்து மாணவர் கழகம்’ என்ற அமைப்பு.

29 வயதுடைய மயூரி பார்மர் என்ற செல்வாக்கு மிக்க பார்ப்பன குடும்பத்தின் இளைஞர், இதற்கான பொறுப்பாளராக செயல்பட்டார். இந்த ஏற்பாடுகள் எல்லாம் பா.ஜ.க.வின் பொதுச் செயலாளராக உள்ள ராம் மாதவ் என்பவரால் திட்டமிடப்படுகின்றன. உலகம் முழுதும் பரவிக் கிடக்கும் பார்ப்பன-பனியா தொழிலதிபர்களை ஒருங்கிணைத்து மோடிக்கு ஆதரவாக செயல்பட வைப்பதே இவரது வேலை. நாடாளுமன்றத் தேர்தலிலிருந்தே இந்த வேலையை அவர் செய்து வருகிறார்.

ஆஸ்திரேலியா, கனடா, துபாய், மலேசிய நாடுகளில் மோடிக்கு தந்த வரவேற்பு களுக்கான திட்டமிடல் எல்லாம் இங்கிருந்துதான் கண்காணிக் கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டன. பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். முன்னணி அமைப்பு களும் இதில் ஈடுபடுத்தப்படுகின்றன. உலகம் முழுதும் வாழும் இந்திய தொழிலதிபர்களின் சேமிப்பு 44 பில்லியன் டாலர் என்றும், இதில் 70 பில்லியன், இந்தியாவுக்கு திருப்பிவிடப்படுகிறது என்றும் உலக வங்கியின் மதிப்பீடு கூறுகிறது. இவர்களில் பெரும் பகுதியினர் பார்ப்பனர்கள்-பனியாக்கள்.

இந்தியாவின் பாரம்பர்ய பெருமைகளைக் காப் பாற்றும் மோடியின் இந்துத்துவா கொள்கைக் காகவே, நாங்கள் அவரை ஆதரிக்கிறோம் என்கிறார் நரேந்திர தாக்கரார் என்ற பிரிட்டனில் வாழும் இந்திய தொழிலதிபர். “ஒரு பக்கம் வர்த்தகத்தை வளர்த்துக் கொண்டு மதப் பெருமைகளையும் காப்பாற்றி வருவதுதான் மோடிக்குரிய பெருமை” என்கிறார், பிரிட்டனில் வாழும் மற்றொரு தொழிலதிபதிரான மேக்நாத் தேசாய். இந்த பார்ப்பன பனியா தொழிலதிபர்கள், அந்நாட்டு அரசுகளுடனும் நெருக்கமாகி அதிகாரத்தில் பங்கெடுத்து வருகின்றனர்.

பிரிட்டனில் நடந்த 2015 தேர்தலில் 10 இடங் களையும், கனடாவில் கடந்த மாதம் நடந்த தேர்தலில் 20 இடங்களையும் இந்த இந்துத்துவ பார்ப்பன-பனியாக்கள் பிடித்துள்ளனர். அமெரிக்கக் காங்கிரசில் 3 பேர் உறுப்பினர்களாக இருப்பதோடு, இரண்டு மாநிலங்களில் ஆளுநர் களாகவும் இருக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு பயணமாகும் மோடி, அந்நாட்டின் பிரதமர், அதிபர் களிடம் இந்த பார்ப்பன-பனியா தொழிலதிபர் களுக்காக பேசுகின்றார். இவர்களுக்கு இந்தியா விலும் ஓட்டுரிமை வழங்க முடிவு செய்திருப்பதாக கடந்த ஆகஸ்ட் மாதம் உச்சநீதிமன்றத்தில் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் மோடி, தனது செல்வாக்கையும் புகழையும் வெளிப்படுத்திக் கொள்வதை விரும்பாத நாடுகளும் உண்டு. கடந்த நவம்பர் 24ஆம் தேதி சிங்கப்பூரில் இதேபோல் அங்கே வாழும் ‘இந்தியர்கள்’ வரவேற்பு விழா நடந்தது. இந்த விழாவில் இந்திய குடியுரிமை கொண்டவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும். சிங்கப்பூர் குடியுரிமை கொண்ட இந்தியர்கள் பங்கேற்கக் கூடாது என்று சிங்கப்பூர் அரசு அறிவித்து விட்டது.

இந்திய கடவுச் சீட்டை சான்று காட்டி, இந்திய குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமே மோடி விழாவில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். மோடியின் ‘இனவாத’ப் பேச்சுகள் சிங்கப்பூரில் பல்வேறு இனமக்களின் நல்லுறவை பாதித்து விடக்கூடும் என்று சிங்கப்பூர் அரசு கருதுகிறது. இதுவே இந்த கெடுபிடிகளுக்குக் காரணம் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. துபாயிலும் இதே போன்ற அரசின் கெடுபிடிகளை மோடிக்காக விழா நடத்துவோர் எதிர்கொள்ள வேண்டி யிருந்தது.

அதே நேரத்தில் மோடிக்கு எதிர்ப்புகளும் இருக்கவே செய்தன. இலண்டனில் பிரதமர் கேமரூனிடம் மோடி பேசிக் கொண்டிருக்கும் போதே மாளிகைக்கு வெளியே காஷ்மீரிகள், பஞ்சாபிகள் மோடிக்கு எதிராக ஆர்ப்பாட் டங்களை நடத்தினர்.

பா.ஜ.க. ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் வெளி நாடுகளில் வாழும் பார்ப்பன-பனியா தொழி லதிபர்கள் மேலும் தங்களின் செல்வாக்கையும் அதிகாரங்களையும் உறுதி செய்து வருகிறார்கள். இதற்கு பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். பின்னணியில் இருந்து செயல்படுகிறது.

(நவ.14, ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் சுகாசினி ஹைதர் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்)

**தலையங்கம்**

**26.11.1957**

பெரியார் இயக்க வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெற்ற நாள் நவ. 26, 1957. அன்றுதான் உலக வரலாற்றிலேயே ஒரு நாட்டின் அரசியல் சட்டத்தை அந்நாட்டின் 'குடிமக்களாக' அறிவிக்கப்பட்டவர்கள் தீ வைத்து எரித்த நாள். எரித்தவர்கள் 10,000 பேர். கைதானவர்கள் 3,000 பேர். 6 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட அந்த போராளிகள், நீதிமன்றத்தில் எதிர் வழக்காடவில்லை. ஜாதியைப் பாதுகாக்கும் இந்த அரசியல் சட்டத்தைக் கொளுத்த எனக்கு முழு உரிமை உண்டு என்று நீதிமன்றங்களில் வாக்குமூலம் அளித்தனர். அந்தப் போராளிகள், "நான் எதிர் வழக்காட விரும்பவில்லை. நான் குற்றவாளி என்று கருதப்பட்டால் அதற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்" என்று நீதிபதி முன் நெஞ்சுயர்த்தி கூறினார்கள். அன்றைய சிறைச்சாலை கொடுமையானது. சட்ட எரிப்பு வீரர்கள் கிரிமினல் கைதிகளாகக் கருதப்பட்டனர். மிக மிக மோசமான உணவு; மோசமான சுகாதாரம்.

சிறைச்சாலைக்குள்ளே உடல்நலம் பாதிக்கப்பட்டு ஜாதி ஒழிப்புக்காக தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்கள் 5 பேர். வாளாடி பெரியசாமி (22.12.58), லால்குடி நன்னிமங்கலம் கணேசன் (30.7.58), திருச்சி சின்னசாமி (7.9.58), மணல்மேடு வெள்ளைச்சாமி (9.3.58) ஓய்வு பெற்ற ஆசிரியர் பட்டுக்கோட்டை இராமசாமி (8.3.58) ஜாதி ஒழிப்பு வரலாற்றில் இவர்கள் நிலைத்து நிற்பார்கள். சிறையிலிருந்து விடுதலையான அடுத்த சில நாட்களிலேயே உயிர் ஊசலாட்டத்தோடு வெளிவந்து மரணத்தைத் தழுவியோர் 13 பேர்; ஆக, களப்பலி ஆனோர் 18.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவுகளைக் கடந்து ஜாதி எதிர்ப்பாளர்களாக களம் புகுந்தது, பெரியார் இயக்கத்தின் தனித்துவம். கைதானவர்களில் பெரும் வசதி படைத்தவர்களும், நில உடைமையாளர்களும் சுமார் 500 பேர் இருந்தார்கள். இவர்கள் சிறையில் தங்களுக்காக விசேட சலுகையோ, விசேட வகுப்புகளோ கேட்காமல் மூன்றாம் வகுப்பு கைதிகளாகவே தண்டனையை அனுபவிக்க விரும்பினர். இது இரண்டாவது சிறப்பு. உடல்நிலை பாதிப்பு, குடும்பத்தின் சாவுகள், குடும்ப நெருக்கடிகள் இருந்தும் ஒரு தோழர்கூட பிணை கேட்க முன்வரவில்லை. மன்னிப்பு கேட்டு விடுதலை கோரவும் தயாராக இல்லை. சிறைச் சாலை நிர்வாகம் அத்தகைய அழுத்தங்களை தந்த போதும் இவர்களின் கொள்கை குன்றாக நிமிர்ந்து நின்றது. இந்தப் போராட்டத்தில் 9 மாத தண்டனை பெற்ற பெரியார் இயக்கத்தின் போராளி நாகை பாட்சா, இந்தப் போராட்ட வரலாற்று ஆவணத்துக்கு எழுதிய முன்னுரையில் இவ்வாறு பதிவு செய்தார்.

**"தந்தை பெரியார் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்படும் நாள் வரை பெரியாருடைய போராட்டம் அவருடைய சந்ததியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது நிறைவேறும்"** இது அவர் வெளிப்படுத்திய நம்பிக்கை.

அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. பெரியாரையே பார்த்திடாத இளம் தலைமுறை, அந்த இலட்சியப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் ஜாதிய ஒடுக்குமுறைகளின் வெறியாட்டம் அதன் இறுதி அத்தியாயத்தை எழுதத் துடித்துக் கொண்டிருக்கிறது. சமூகநீதி தத்துவத்தால் பயன் பெற்று சமூக மரியாதையை எட்டியவர்கள் பார்ப்பனியம் கட்டமைத்த ஜாதிக்குள் பதுங்கிக் கொண்டு ஜாதி வெறியை தலித் மக்கள் மீது ஏவி விடுகிற அவலங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சமூகச் சூழலில் வரலாற்றின் தொடர்ச்சியாய் களத்தில் நிற்கிறது 'திராவிடர் விடுதலைக் கழகம்'. பெரியாரின் ஜாதி ஒழிப்புப் போராட்டத்தை முதன்மையான இலட்சியமாகக் கொண்டு களப் பணியாற்றும் கழகம், "எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்" என்ற முழக்கத்தோடு தமிழகம் முழுதும் இடைவிடாத இயக்கங்களையும் போராட்டக் களங்களையும் முழு வீச்சில் செயல்படுத்தி வருகிறது.

இலக்கு மாறாமல் இந்த இயக்கம் தொடரும். எதிர்ப்புகளை சந்திக்கும் பார்ப்பனிய ஜாதிய ஒடுக்குமுறைகளுக்கு கல்லறை கட்டும் வரை இது ஓயாது. இதுவே அறிவு ஆசான் பெரியாருக்கும், ஜாதி ஒழிப்பு மாவீரர்களுக்கும் நாம் செலுத்தும் உண்மையான வீரவணக்கம்!

# முஸ்லிம்கள் மீது பழிபோடும் பார்ப்பனியம்

## ஈரோடு மாநாட்டில் ஆளூர் ஷாநவாஸ் முழக்கம்

ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்து பார்ப்பன-பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டில், 'எங்கள் பார்வையில் மக்களைப் பிளவுப் படுத்தும் பார்ப்பனீய மதவாதம்' என்ற பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், 'இசுலாமியர் பார்வையில்' என்கிற தலைப்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் பேசினார். அவரது உரையின் தொடர்ச்சி -

முஸ்லீம்கள் வீடுகட்டினால் யார் வேண்டுமானால் வாடகைக்கு வரலாம். ஆனால், பார்ப்பனர்கள் வீட்டில் வேறுயாரும் வசிக்க முடியாது. இந்த நாட்டில் அனைத்து பயங்கரவாத செயல்களையும் செய்வது பார்ப்பனியம். ஆனால், பழியை சுமப்பது முஸ்லீம்கள். இந்த சூழ்ச்சி அரசியலை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்த குற்றச்சாட்டு, முஸ்லீம்கள் தீவிர மதநம்பிக்கை உடையவர்கள் அவர்களது குரானில் நான்கு பெண்டாட்டிகளைத் திருமணம் செய்ய சொல்லியிருக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என சொல்லியிருக்கிறது. அதனால் அவர்கள் அந்த மதக் கருத்தை பின்பற்றி நிறைய திருமணம் செய்துகொண்டு நிறைய குழந்தைகளை பெற்றுக் கொண்டு இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் முஸ்லீம்களின் எண்ணிக்கையை அதிகமாக்கு கிறார்கள் என்ற குற்றச்சாட்டை பார்ப்பனீயம் தொடர்ந்து வைக்கிறது. இது முஸ்லீம்கள் மீது பார்ப்பனீயம் வைக்கின்ற நச்சு கருத்துக்கு நிகராக பொது சமூகம் முஸ்லீம்களுக்கு எதிரான ஒரு வெறுப்பைக் கட்டமைத்திருக்கிறது. மக்கள் தொகை அதிகரிப்பால்தான் நாட்டில் பல பிரச்சனைகள் என ஒரு உளவியல் சிந்தனையை பார்ப்பனீயம் உருவாக்கு கிறது. மக்கள் தொகை பிரச்சனைக்கு யார் காரணம் என்றால் அது முஸ்லீம்கள் தான் என்று பார்ப்பனீயம் கூறுகிறது. இது உண்மையல்ல அந்த காலகட்டத்தில் இஸ்லாம் மதத்தில் விதவைகள் அதிகமிருந்ததால் இஸ்லாம் ஆண்கள் அதிகமாக பெண்களை திருமணம் செய்துகொள்ளலாம் என ஒரு அனுமதியை வழங்கியது. விதவை மறுமணத்தை ஆதரித்து தான் அத்தகைய முடிவை அது எடுத்தது. ஆனால் பார்ப்பன இந்து மதம் கணவனை இழந்தால் அந்த பெண் வேறு திருமணம் செய்யக்கூடாது, மேலும் கணவனுடன் உடன்கட்டை ஏறவேண்டுமென கூறியது.

அதிகம் திருமணம் செய்யவேண்டும் அதிக குழந்தைகள் பெற வேண்டும் என இந்தியாவில் முஸ்லீம்கள் முடிவெடுத்திருந்தால் இந்திய மக்கள் தொகையில் மிகவும் முன்னேறியிருப்பார்கள். ஆனால் இந்தியாவில் இன்றைக்கு இந்திய முஸ்லீம் ஆண்பெண் விகிதம் சரிசமமாக இருக்கிறது. எனவே அப்படி சொல்லியிருந்தால் அதுஒரு பொய்யான அவதூறாகும் அதிக மனைவி அதிக குழந்தைகள் என்பதை ஒரு சமூகத்துடன் மட்டும் பொருத்த முடியாது அதை ஒரு மதத்தோடு பொருத்திப் பார்ப்பது பாசிச பார்ப்பனீயம். இத்தகைய பாசிசத்தைத்தான் ஆர்.எஸ்.எஸ் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

அடுத்து முஸ்லீம்கள் வந்தேறிகள் அயல்நாட்டிலிருந்து அரபிகளாக ஊடுருவியவர்கள் எனவே அவர்களை அடித்து விரட்ட வேண்டும் என்று சொல்லி அதை ஒரு பரப்புரையாக எடுத்து செல்கிறார்கள் பார்ப்பனீய இந்துத்துவ பாசிச கொள்கை உடையவர்கள். பல மாநிலங்களில் குறிப்பாக அசாம் போன்ற மாநிலங்களில் முஸ்லீம்களை தனிமைப்படுத்த மேற்கு வங்க மக்களிடம் ஆர்எஸ்எஸ் சொல்லி வருவது என்னவென்று பார்த்தால் முஸ்லீம்கள் ஊடுருவிகள்; நம்மண்ணின் மகத்துவத்தை கெடுக்கிறார்கள்; நம் மண்ணின் வளத்தை சூறையாடுகிறார்கள். அதனால் இவர்களை விரட்ண்டும் என்று சொல்கிறார்கள். முஸ்லீம்கள் மட்டுமா வந்தேறிகள். இந்த நாட்டில் யூதர்களும் வந்தேறிகள் தான் அதுபோல் பார்சிகள், நேபாளிகள் பலரும் வந்தேறிகளாகத்தான் உள்ளனர். ஆனால் அவர்களைப் பற்றி ஆர்எஸ்எஸ் வாய்திறந்ததே கிடையாது. முஸ்லீம்களை மட்டும் தனிமை படுத்த அசாம் போன்ற மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ் முயற்சிக்கிறது. இதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.



அண்மையில் ஒருவர் தொலைக்காட்சி விவாதத்தில் கூறுகிறார். இந்தியாவில் இருக்கும் முஸ்லீம்களின் உருவம் தான் இங்கிருக்கிறது. உள்ளமெல்லாம் பாகிஸ்தானில் இருக்கிறது. இவர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் வெற்றி பெற்றால் இங்கு வெடி வெடிக்கிறார்கள் என்று நச்சு விதைகளை இந்த நாட்டில் விதைக்கிறார். இது எவ்வளவு பெரிய அபாண்டம்; இது ஒரு மோசமான மோசடியான அரசியல்; வெறுப்பான அரசியலை முஸ்லீம்களோடு பொறுத்தும், பாசிச வேலைகளைப் பார்ப்பனீய கும்பல் தொடர்ந்து செய்துவருவதன் நோக்கம் பொது சமூகத் திலிருந்து முஸ்லீம்களைத் தனிமைப்படுத்துவதுதான்.

தலித்துகள் மீது இராமதாஸ் போன்றவர்கள் இங்கு செய்யும் வெறுப்பு அரசியலை முஸ்லீம்கள் மீது இந்திய அளவில் செய்கிறது பார்ப்பனீயம். இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. இரண்டும் காவி, பாசிச சிந்தனையின் வெளிப்பாடுதான்.

எனவே, இந்த அரசியல் உடைத்தெறியப்பட வேண்டும் என்றால் ஒரு அரசியலைத்தான் நாம் முன்னெடுக்க வேண்டும். அது என்னவென்றால் பெரியார் - அம்பேத்கர் ஆகியோரின் அரசியலை நாம் உள்வாங்கவேண்டும். அதுதான் ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பான அரசியல் ஆகும். இதுதான் முஸ்லீம் அரசியலையும் செழுமைப்படுத்தும். மோடிக்கும் பார்ப்பனர்களுக்கும் திகைப்பை ஏற்படுத்தும்.

மோடி விரும்புவது முஸ்லீம்கள் முஸ்லீம் தலைமையில் திரளவேண்டும். அப்படி திரண்டால் அதையே காரணம் காட்டி இந்துக்களை அணி திரட்டலாம் என திட்டமிடுகிறார். அதை உடைக்க வேண்டும் என்றால் நாம் பெரியார் அம்பேத்கர் கருத்துக்களோடு தொடர்ந்து பயணித்து அந்த கருத்தியலை வலிமை படுத்தவேண்டும். உலகில் பல நாடுகளில் முஸ்லீம்களுக்கென அகதிகள் முகாம் நிறைய உள்ளன. பலநாடுகளில் முஸ்லீம்கள் அடித்து துரத்தப்படுகின்றனர். ஆனால் தமிழகத்தில் முஸ்லீம்களுக்கென தனி அகதி முகாம் இல்லை; காரணம் பெரியார். எனவே பெரியார் அம்பேத்கர் போன்ற தலைவர்களின் கருத்துக்களை நாமும் உள்வாங்குவதன் மூலம்தான் இந்து பார்ப்பன பயங்கரவாதத்தை வேரறுக்க முடியும். ஏனென்றால் பார்ப்பனீயத்தால் அழிக்க முடியாத ஒரு தலைவர் பெரியார் ஒருவரே என தனது உரையில் குறிப்பிட்டார்.

**உரைத் தொகுப்பு: மன்னை இரா.காளிதாசு**

### நன்கொடை

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சட்டாங்குட்டை இணையர்கள் வேலுச்சாமி-ஈஸ்வரி ஆகியோரின் மகன் பாரதிதாசன் பெயர் சூட்டும் நிகழ்வு மகிழ்வாக நவம்பர் 15 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கினர்.

மேட்டூர் ஆர்.எஸ். பகுதியில் நவ. 14இல் நடந்த கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மா.சவுந்தர்ராசன்-மங்கையர்கரசி ஆகியோரின் மகன் அருந்தமிழன் பிறந்த நாள் மகிழ்வாக கழகத் தலைவரிடம் ரூ.500 நன்கொடை வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டேன். (ஆர்)

# பகுத்தறிவுக்கு எதிரான மதவெறி சக்திகள்

*உயிரியல் துறை விஞ்ஞானியும், தேசிய அரசு ஆணையத்தின் முன்னாள் தலைவருமான டாக்டர் பார்கவா, 'இந்து' நாளேட்டில் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள்.*

நாம் எதனை உண்ண வேண்டும், என்ன உடை உடுத்த வேண்டும், எதனைப் படிக்க வேண்டும், பார்க்க வேண்டும், யாரை நேசிக்க வேண்டும் என்பது குறித்தெல்லாம் முடிவெடுக்க விரும்புகின்ற தற்போதைய அரசின் செயல்பாட்டில் கலாச்சார சகிப்பின்மை என்பது ஆதிக்கம் செலுத்திடும் அம்சமாக உள்ளது.

இந்துத்துவா கொள்கையின் மூலாதாரமாக ஆர்.எஸ்.எஸ். எனும் ராஷ்டிரியஸ்வயம் சேவக் அமைப்பு இருக்கிறது. பாஜக அரசில் இந்த ஆர்எஸ்எஸ் அமைப்பின் செல்வாக்கு ஓங்கியுள்ள நிலையில், “பகுத்தறிவு கோட்பாடு, காரணத்தைத் தேடி விவாதித்து கேள்விக்குள்ளாக்கும் நெறி ஆகியவற்றிலிருந்து இந்திய தேசத்தை விலகச் செய்து, அதன் வாயிலாக ஜனநாயகத்திலிருந்தும் தேசத்தை விலகச் செய்கின்ற இந்து மதவாத எதேச்சாதிகாரத்தை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோமா?” என்ற கேள்வியை நாம் எழுப்பிடலாம். அவ்வாறு நாம் நகர்ந்து கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

வன்முறைத் தாக்குதல்களோடு மட்டுமின்றி, தைரியமாக மாற்றுக் கருத்தை முன்வைத்ததற்காக கிரின்பீஸ் போன்ற பிரபலமான அமைப்புகள் மற்றும் டீஸ்டாசெதல்வாத் போன்ற செயல்பாட்டாளர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 51ஏ (எச்)சின்படி, “அறிவியல் மனநிலை, மனித நேயம், புலனறிவு ஆகிய வற்றின் அடிப்படையில் ஆய்ந்து செய்யப்படும் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை உருவாக்குவது” என்பது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படைக் கடமையாகும். எனினும், காரண காரியங்களையும், பகுத்தறிவையும் அடிப்படையாகக் கொண்ட அறிவியல் மனநிலைக்கு அரசே தற்போது மிகப் பெரிய தடையாக உள்ளது. அறிவியல் குறித்து இத்தகைய புரிதலின்மை இதற்கு முன்பு வேறெந்த அரசுக்கும் இருந்தது கிடையாது. இதன் காரணமாக, தேசத்தின் வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரலில் எதிர்மறை விளைவுகள் பெருமளவில் ஏற்படக் கூடும்.

“கிரகங்களுக்கிடையே பயணிக்கக் கூடிய மிகப் பெரிய விமானங்கள் நம்மிடம் இருந்தன; மனித உடலின் மீது யானையின் தலையைப் பொருத்தும் (பிளாஸ்டிக் சர்ஜரி) திறனை நாம் கொண்டிருந்தோம்” என்றெல்லாம் கடந்த காலம் குறித்து அபத்தமான கூற்றுக்கள் முன்வைக்கப்படுகின்றன. மத நம்பிக்கைகளுக்கு பொருந்தக் கூடிய வகையில் புராணக் கதைகளில் வரும் பாத்திரங்களையும், கடவுளர்களையும் வரலாற்று நாயகர்களாக சித்தரித்து, அதன் மூலம் வரலாற்றைத் திரிக்கும் வேலையும் நடைபெறுகிறது.

மதச்சார்பின்மையின் மாண்புகளும், பகுத்தறிவும் மதிக்கப்படுவதில்லை என்பதனைக் கூட விட்டு விடுவதாகக் கொள்வோம். ஆனால், இந்த நாட்டின் சட்டத்தையேகூட எள்ளளவும் மதிக்காத அமைப்புகளின் குறிப்பான ஆதரவுடன் இந்துத்துவா நிகழ்ச்சி நிரலை நாடு முழுவதிலும் திணித்திடுவதற்கான திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிவசேனா கட்சியானது பாஜக வுடனான கூட்டணியில் இடம்பெற்றுள்ள போதும் கூட, பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித் மஹமூத் கசூரி எழுதிய புத்தகத்தை வெளியிட்டதற்காக அப்சர்வர் ஆராய்ச்சி அமைப்பின் தலைவர் சுதீந்திர குல்கர்னியின் முகத்தில் கருப்பு மையை ஊற்றியது, மும்பையில் நடக்கவிருந்த பாகிஸ்தானி பாடகர் குலாம் அலியின் இசை நிகழ்ச்சியைத் தடுத்து நிறுத்தியது, பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய அதிகாரிகளுடனான கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் அலுவலகங்களை சூறையாடியது என்பன போன்ற அவர்களது சமீபத்திய நடவடிக்கைகள் இதற்கான உதாரணங்கள் ஆகும்.

எந்தவொரு நல்ல ஜனநாயக அமைப்பின் கீழும், பன்னிரண்டாம் வகுப்பு வரை யிலான (18 வயது வரையிலான) கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய சேவைகள் அரசாலேயே அளிக்கப்படுகின்றன. ஆனால் இந்தியாவில், பண வசதி உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய ஒன்றாககல்வியும், சுகாதாரமும் பெருமளவில் தனியார் மயம் ஆக்கப்படுவதோடு, வர்த்தகமயம் ஆக்கப்பட்டும் வருகிறது. இத்தகைய நடவடிக்கை எதேச்சாதிகாரத்தை உருவகப்படுத்துகிற அம்சமேயாகும்.

நாட்டின் உயர்பதவிகளை நிரப்புவதிலும் கூட, தகுதியை விட அரசியல் ஆதாயத்திற்கும், ஆர்எஸ்எஸ் அமைப்புடனான தொடர்புக்குமே கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி நிறுவனத்தின் இயக்குநராக கஜேந்திர சௌகான் நியமிக்கப்பட்டதும், அதற்கு மாணவர்கள் மற்றும் திரைப்பட இயக்குநர்களிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பும் இதற்கு ஓர் உதாரணமாகும்.

இதற்கு முன்னர் வேறு எந்த அரசும் செய்திடாத வகையில், நாம் எதனை உண்ணுவது, என்ன உடை உடுத்துவது, யாரை நேசிப்பது, எத்தகைய புத்தகங்களைப் படிப்பது, எந்த திரைப்படங்களைப் பார்ப்பது என்பவை குறித்தெல்லாம் அரசு தான் முடிவெடுக்குமாம். தற்போதைய அரசின் செயல்பாட்டில் இத்தகைய கலாச்சார சகிப்பின்மை ஆதிக்கம் செலுத்தும் அம்சமாக உள்ளது. மாட்டிறைச்சியை சாப்பிடுவது என்பது பண்டைய இந்தியாவில் அனுமதிக்கப்பட்டு இருந்தது என்பது இந்த அரசுக்குத் தெரியவில்லை போலிருக்கிறது. ஆயுர்வேத நூலான சரகசம்ஹிதாவில், மாட்டிறைச்சியின் தரம் குறித்து கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*“வாயுத் தொல்லை, விட்டு விட்டு வருகின்ற காய்ச்சல், வறட்டு இருமல், சோர்வு ஆகியவற்றின் காரணமாக உடல் இளைத்திடுபவர்களுக்கும், கடுமையான உடல் உழைப்பின் காரணமாக அதிக அளவில் பசி எடுப்பவர்களுக்கும் மாட்டிறைச்சி மிகவும் பயனுள்ளது.”*

**பகுத்தறிவிற்கு எதிரான மதவெறி**

எந்த மதமும் மற்ற மதத்தை விட மேலானதல்ல என்பதனை இந்துத்துவாவிற்கு வக்காலத்து வாங்குபவர்கள் உணராது உள்ளனர். மேலும், அறிவியல் பூர்வமான, பகுத்தறிவுடனான, விவேகமான சிந்தனைக்கு எதிரான கருத்துக்கள் எல்லா மதங்களிலும் உள்ளன என்பதனையும் உணராது இருக்கின்றனர்.

அனைத்து எதேச்சதிகாரங்களும் அறிவாற்றலுக்கு எதிரானவையே என்பதனை வரலாறு கூறுகிறது. எனவே, 300க்கும் அதிகமான ஆளுமைகள் ஏன் தேசிய விருதுகளை திருப்பி அளித்தார்கள் என்பதற்கான காரணத்தை உள்ளார்ந்து ஆய்வு செய்வதற்கு பதிலாக, இத்தகைய ஆளுமைகளை தேச நலனுக்கு எதிரானவர்களாகவும், மாற்றுக் கருத்தை உற்பத்தி செய்பவர்களாகவும் தற்போதைய அரசு சித்தரிப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. மேலே பட்டியலிடப்பட்டவை எல்லாம் நடந்த ஒட்டுமொத்த நிகழ்வுகளில் அங்கொன்றும், இங்கொன்றும் ஆனவையே. மொத்த நிகழ்வுகளின் ஒரு சிறு பகுதியே இவை. இந்தியாவின் ஜனநாயகத் தன்மையை சீரழித்து, அதனை இந்து மதவாத எதேச்சதிகார அமைப்பாக மாற்றுவதே பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் ஆகியனவற்றின் முக்கியமான நோக்கமாகும் என்பதற்கு பரவலான சான்றுகள் உள்ளன.

உயிரியல் துறையுடன் தொடர்புள்ளவன் என்ற அடிப்படையில், மிக முக்கியமான உயிரியல் கோட்பாடு ஒன்றை மேற்கோள் காட்டி எனது கட்டுரையை நிறைவு செய்திட விரும்புகிறேன். “பன்முகத்தன்மை தான், பரிணாம வளர்ச்சிக்கு வழிகோலும். ஒற்றைத்தன்மை அழிவுக்கே இட்டுச் செல்லும்.

**(தனது பத்மபூஷன் விருதை சமீபத்தில் திருப்பி அளித்தவர் இவர்.)**

## மாட்டிறைச்சி தடை: சில தகவல்கள்

*இந்தியாவில் மாட்டிறைச்சிக்கு தடை விதிக்கப்பட்ட மற்றும் தடை விதிக்கப் படாத மாநிலங்களின் விவரம் வருமாறு:*

**பஞ்சாப் மற்றும் அரியானா:** இரு அண்டை மாநிலங்களிலும் பசுவதை தடை செய்யப்பட்டு உள்ளது. பஞ்சாப் அரசு மாட்டிறைச்சி விற்பனைக்கும் தடை விதித்துள்ளது. எனினும் இந்த மாநிலங்களில் மாட்டிறைச்சி உண்போருக்கான தண்டனை நடைமுறைகள் எதுவும் இல்லை.

**ராஜஸ்தான்:** எத்தகைய கால்நடை வதையும் தடை செய்யப்பட்டு உள்ளது. மீறுவோருக்கு 2½ ஆண்டு சிறை மற்றும் ரூ.1,000 அபராதம்.

**இமாச்சல பிரதேசம்:** பசுக்கள் மட்டுமின்றி காளைகள், எருமைகள், கன்றுகள் போன்ற விலங்குகளை கொல்லவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது. மீறுவோருக்கு 1 ஆண்டு சிறை.

**குஜராத்:** பசுக்களை கொல்வது, மாட்டிறைச்சிகளை விற்பது, வாங்குவது ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டு செல்லுதல் அனைத்துக்கும் தடை. மீறுவோருக்கு 7 ஆண்டு வரை சிறை.

**உத்தரபிரதேசம்:** பசுவதை தடை செய்யப்பட்டு உள்ளது. மீறுவோருக்கு 7 ஆண்டு வரை சிறை. எனினும் டப்பாக்களில் அடைக்கப்பட்ட மாட்டிறைச்சிக்கு அனுமதி.

**மத்திய பிரதேசம்:** 15 வயதுக்கு மேற்பட்ட அல்லது பயன்பாட்டுக்கு உதவாத காளைகள் மற்றும் எருமைகளை மட்டுமே கொல்வதற்கு அனுமதி. மீறுவோருக்கு 5 ஆண்டு சிறை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம்.

**மராட்டியம்:** பசுவதை, இறைச்சி விற்பனை மற்றும் உண்பதற்கு தடை. மீறுவோருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் மற்றும் 5 ஆண்டு சிறை.

**பீகார்:** நோய்வாய்ப்பட்ட பசுக்களை மட்டுமே கொல்ல அனுமதி. உணவகங்களில் மாட்டிறைச்சி பரிமாற சட்டப்படி அனுமதி.

**ஜார்கண்ட்:** 3 வயதுக்கு கீழ் உள்ள விலங்குகளை கொல்ல தடை. மீறுவோருக்கு 10 ஆண்டுகள் வரை சிறை. மாட்டிறைச்சி உண்பதற்கு தடை இல்லை.

**மேற்கு வங்காளம்:** ஆரோக்கியமான பசுக்களை கொல்ல தடை. மீறுவோருக்கு 6 மாதம் சிறை. மருத்துவரின் சான்றிதழ் பெற்ற பசுக்களை மட்டுமே கொல்ல அனுமதி.

**ஒடிசா:** பசுவதை தடை. மீறுவோருக்கு 2 ஆண்டு சிறை அல்லது ரூ.1,000 அபராதம் அல்லது இரண்டும். மாட்டிறைச்சி உண்பதற்கு அனுமதி.

**ஆந்திரா மற்றும் தெலுங்கானா:** சான்றளிக்கப்பட்டவற்றை தவிர பிற கால் நடைகளை கொல்ல தடை. மீறுவோருக்கு 6 மாத சிறை மற்றும் ரூ.1,000 அபராதம்.

**கர்நாடகா:** பல்வேறு நிபந்தனைகளின் கீழ் பசுவதைக்கு அனுமதி. ஆனால் முந்தைய பா.ஜனதா அரசு இந்த சட்டத்தை கடுமையாக்கியதுடன், பசுவதைக்கு எதிராக சோதனை மற்றும் கைப்பற்றுவதற்கான வழிவகைகளை செய்தது.

**தமிழ்நாடு, மணிப்பூர், அசாம்:** பசுவதைக்கு தடை. மாட்டிறைச்சி உண்பதற்கு அனுமதி.

**கேரளா, மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, அருணாச்சல பிரதேசம்:** பசுவதைக்கு தடையில்லை.

DATE OF PUBLICATION 26.11.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

## ஏழ்மையும் – சுனாமியில் இறப்பதும் முன்வினைப் பயனாம்

# எச். ராஜாவின் பார்ப்பனத் திமிருக்கு பதிலடி!

*ஆட்சி அதிகாரம் வந்துவிட்டது என்ற திமிரில் எச். ராஜா போன்ற பார்ப்பனர்கள் எல்லை மீறி தூற்றுகிறார்கள். வாய்க்கொழுப்பு பூணூல் திமிருடன் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்.*

நடிகர் கமல்ஹாசன், தனது 61ஆவது பிறந்த நாளில் வெளியிட்ட சில கருத்துகளுக்காக 'துக்ளக்' பத்திரிகையில் எச். ராஜா ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். கமல்ஹாசன் பேசும் பகுத்தறிவு கருத்துகள் குழப்பம் மற்றும் பார்ப்பனியத்தின் கலவையாகவே இருக்கிறது என்பது வேறு சேதி. ஆனால், இந்த கடிதத்தில் எச்.ராஜா தன்னை அசல் பார்ப்பனராக அடையாளம் காட்டியிருப்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

ஒருவர் ஏழையாகவும் தீண்டப்படாத ஜாதியிலும் பிறப்பதற்கு முன் ஜென்மத்தின் பலன்தான் காரணம் என்று பார்ப்பனர்கள் கூறி, இந்த ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தி வந்தார்கள். பெரியாரி யக்கம், பார்ப்பனரின் இந்த பிறவித் திமிரைத்தான் கேள்விக்கு உட்படுத்தியது. கடவுளையும் 'கடவுள்' பெயரால் அதிகாரங்களையும் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கப் பிடிக்குள் பறித்துக் கொண்டதை பெரியார் இயக்கம் கிழித்துக் காட்டியவுடன் பார்ப்பனர்கள் ஏற்றத்தாழ்வுகளை தாங்கள் ஏற்கவில்லை என்றும், ஜாதி பேதம் கூடாது என்றும், 'பம்மாத்து' காட்டி வந்தார்கள். ஆனால், பார்ப்பான் பார்ப்பனாகவே இருக்கிறான் என்பதை எச். ராஜாவின் இந்த நச்சுக் கருத்துகள் உறுதிபடுத்துகின்றன.

சுனாமி வந்து மக்கள் மடிவதற்கும், ஏழ்மையில் மக்கள் உழல்வதற்கும் முன் ஜென்மப் பலன்தான் காரணம்; இதுவே இந்து மத தத்துவம் என்று பச்சையாக நியாயப்படுத்துகிறார், இந்தப் பார்ப்பனர்.

> "'சுனாமி, ஏழ்மை ஆகியவை ஏன் வருகிறது? ஆண்டவன் ஏன் இவற்றை தடுக்கவில்லை' என்றும் (கமலஹாசன்) கேள்வி எழுப்பி யுள்ளீர்கள். இதற்கு இந்து மதத்தின் வினைப் பயன் சித்தாந்தம் சரியான விளக்கமளித்துள்ளது. பிற மதங்கள்தான், 'எல்லாம் ஆண்டவனின் கொடை, ஆண்டவனின் விருப்பப்படி அனைத்தை யும் படைக்கிறான்' என்று கூறுகின்றன. ஆனால், ஒருவன் ஏழையாகவும், மற்றொருவன் பணக்காரனாகவும், ஒருவன் அறிவாளியாகவும், மற்றொருவன் முட்டாளாகவும், ஒருவன் ஆரோக்கியமானவனாகவும், மற்றொருவன் நோயாளியாகவும் இருப்பதற்குக் காரணம், அவனது வினைப் பயனே ஆகும்" என்கிறது இந்து மதம்.
>
> நல்வினை செய்தவன் நல்லது பெறுகிறான். தீவினை செய்தவன் தீயது பெறுகிறான்."
>
> **'துக்ளக்'** 25.11.2015

பா.ஜ.க.விலும் இந்து முன்னணியிலும் உள்ள சொரணையுள்ள பார்ப்பனரல்லாதவர்கள் எச். ராஜாவின் இந்த கருத்துக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

பகுத்தறிவாளர்களின் நோக்கம் 'இந்துக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவது தானாம்' எழுதுகிறார் ராஜா. பகுத்தறிவுவாதிகளின் நோக்கம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும் உள்ள இந்துக்களைப் புண்படுத்தி அவமானப்படுத்தும் பார்ப்பனர் களையும் பார்ப்பனீயத்தையும் எதிர்ப்பதுதான்! இந்து மக்களின் சுயமரியாதைக்கு போராடுவதுதான்! அவனவன் முன் ஜென்மத்தின் கர்ம வினைப்படி கீழ் ஜாதியாகவும் ஏழையாகவும் பிறக்கிறான் எனும் இந்த "கூஜா"க்களின் கூற்றைவிட பார்ப்பனரல்லாத இந்துக்களை அவமதிக்கக் கூடிய கருத்து வேறு இருக்க முடியுமா? இப்போதும் 'பூணூல்' அணிந்து கொண்டு பெரும்பான்மை 'இந்து' மக்களை 'சூத்திரர்' என்று இழிவுபடுத்துவது யாரப்பா?

யாகம், கும்பாபிஷேகம், அர்ச்சனை, சடங்கு - உரிமைகள் 'இந்து' சூத்திரர்களுக்கு கிடையாது என்று தடை போட்டு இழிவுபடுத்துவது யாரப்பா? பதில் உண்டா?

"விநாயகர் சிலைகளை ஈ.வே.ரா. உடைத்தார்" என்று குற்றம் சாட்டுகிறார் - இந்த பூணூல்!

சரி; அதே கேள்வியை திருப்பி கேட்கிறோம்; விநாயகன் ஊர்வலத்தில் விநாயகனை கிரேனில் தூக்கி, காலால் அழுத்தி, துதிக்கையை உடைத்து, தொந்தியை 'கும்மாங்குத்து' குத்தி, கடலில் தூக்கி வீசுவது யாரப்பா? இதுதான் கடவுள் பக்தியின் இலட்சணமா?

ஆஸ்திகர்கள் அகிம்சாவாதிகள் என்றால் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கியது தான் அகிம்சையின் அடையாளமா?

'அசுரர்கள்' என்ற திராவிடர்களை அழிப்பதற்கு பண்டிகை; 'சம்ஹாரம்' செய்வதற்கு விழா! 'இராவணனை' எரிப்பதற்கு கொண்டாட்டம்; ஏகலைவன் கட்டை விரலை வெட்டி எடுப்பதற்கும், 'சம்பூகன்' தலையை துண்டித்து வீசுவதற்கும் இதிகாசப் பெருமை; 'கொலை செய்யலாம் பாவமில்லை; ஆன்மா அழியாது' என்று சொல்வதற்கு புனித நூல்; இதற்கெல்லாம் என்ன பெயர்?

"ஒரு சட்டம் ஏற்புடையதா இல்லையா என்பது முக்கியமல்ல; சட்டப் புத்தகத்திலுள்ள சட்டம் பராமரிக்கப்பட வேண்டும்" என்று நியாயவானைப் போல படம் காட்டுகிறார். சரி ஒரு கேள்வி; சட்டத்தை மதிக்க வேண்டும் என்று கூறுகிற இந்தக் கூட்டம், இந்தியாவை இந்து நாடு என்று கொக்கரிக்கிறதே; அப்படி ஏதும் சட்டத்தில் இருக்கிறதா? இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை பறிக்க வேண்டும் என்று பதறுவதுதான் சட்டத்தை மதிப்பதா?

தேவாரமும் திருவாசகமும் தமிழுக்கு அழியாப் புகழை ஈட்டித் தந்துள்ள பக்தி இலக்கியம் என்று பரவசப்படுகிறார். தில்லை கோயிலில் தேவாரம் பாட வந்த முதியவரை 'பாடாதே' என்று அடித்து உதைத்து வெளியே தூக்கி வீசியதே 'தீட்சதர்' கூட்டம்; அப்போது ராஜாவின் வாய் எங்கே போயிருந்தது?

மாட்டுக் கறித் தடையைப் பற்றி இந்த 'சட்ட மேதை' கூறியிருக்கிற கருத்துகள் இவரது அறியாமையை வெளிச்சம் போட்டுக் காட்டு கிறது!

அரசியல் சட்டம் என்பது வேறு; அரசியல் வழிகாட்டும் நெறி என்பது வேறு என்பதை முதலில் புரிந்து கொள்ளட்டும். அரசியல் வழிகாட்டும் நெறி என்பது எதிர்காலத்தில் அரசியல் சட்டத்தின் திசை வழிப் பயணத்தை சுட்டிக் காட்டுவதுதான். அதற்கு அரசியல் சட்டத்துக்கான அங்கீகாரம் கிடையாது.

அரசியல் சட்ட வழிகாட்டும் நெறியின் 48ஆவது பிரிவு, "பசு இந்துக்களின் தெய்வம். எனவே அதை வதை செய்யக் கூடாது" என்று கூறியிருக்கிறதா? அப்படி ஏதும் இல்லை. பசுவை தெய்வம் என்றும், எனவே அதை வெட்டுவது பாவம் என்றும், இந்தப் பிரிவில் சேர்ப்பதற்கு சிவன்லால் சக்சேனோ, சேக் கோவிந்தராசு என்ற இரண்டு இந்துத்துவ அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் வலியுறுத்திய போது, நிர்ணய சபை அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்தது. - இதுதான் வரலாறு.

"மதக் கண்ணோட்டத்தில் நாங்கள் இதைப் பார்க்கவில்லை; மாறாக விவசாயக் கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினையை அணுகு கிறோம்" என்று அரசியல் நிர்ணயசபை விளக்கம் அளித்து கீழ்க்கண்ட பகுதியை வழிகாட்டும் நெறியாக 48ஆவது பிரிவில் இணைத்தது.

"வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புக்கு நவீன அறிவியல் முறை குறித்து முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக உயர்ரக கால்நடைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் பால்தரும் விலங்குகள், பாரம் இழுக்கும் கால்நடைகள் ஆகியவற்றைக் கொல்வதைத் தடுப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்" என்றுதான் அந்த 48ஆவது வழிகாட்டும் பிரிவு கூறுகிறது.

அதனால்தான் விவசாயத்துக்குப் பயன்படாத, பால் கறப்பது நின்று போன அடிமாடுகளை வெட்டுவதற்கும் உணவாக்குவதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் பயன்பாட்டுக் கண்ணோட்டத்தில் அனுமதிக்கப்படு கிறது.

14.11.1949இல் அரசியல் நிர்ணயசபையில் நடந்த இது குறித்த விவாதங்கள், விவாதங்களின் 11ஆவது தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இந்த உண்மைகளை எல்லாம் திசை திருப்பி காதில் பூச்சுற்றக் கிளம்பியிருக்கிறது இந்த 'பூசுரர்' கூட்டம்.

நோயாளியாக ஒருவன் இருப்பதற்குக் காரணம் 'வினைப் பயன்' என்றால், இந்தப் பார்ப்பனர்கள் ஏன் மருத்துவமனைகளுக்கு ஓட வேண்டும்? ஏழ்மையாக இருப்பது வினைப் பயன் என்றால், எதற்கு ஏழ்மையை ஒழிப்பதாக ஏமாற்றிக் கொண்டு அதிகாரத்தைப் பிடிக்க துடிக்க வேண்டும்?

'சுனாமி'யில் மக்கள் மடிவது வினைப் பயன் என்றால், அந்த மக்களைக் காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமலே இருந்து விடலாமே?

மனிதநேயமுள்ள எவராவது இப்படிக் கூறுவார்களா? மாட்டுக்காக மனிதர்களையே சாகடிக்கும் கூட்டம் இதைத் தவிர வேறு எதை பார்க்க முடியும்?

'ராஜா'வுக்குள் அடங்கிக் கிடக்கும் பார்ப்பனத் திமிர்தான் இப்படி எழுத வைக்கிறது.

எழுதுங்கள்; சந்திக்கிறோம்! **'இரா'**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 26th November 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN